# மன்னிக்கத் தெரியாதவர்



வல்லிக்கண்ணன்

# மன்னிக்கத் தெரியாதவர்

வல்லிக்கண்ணன்

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box 501, Park Town, Madras-600 003

MANNIKKA THERIYATHAVAR

By VALLIKANNAN

in Tamil

© C. L. S.

*First Published in November* 1991

Printed at The C. L. S. Press, Vepery, Madras-7. B 2733

# முன்னுரை

காலஓட்டத்தில் சமூகத்திலும் நாட்டிலும் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. மனிதரின் வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன.

ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு நாட்டில், சிற்றூர்களில், வாழ்க்கை வசதிகளும் அடாவடித்தனமும் பெற்றிருந்த ஒருசிலர் நடத்திவந்த ஆர்ப்பாட்டப் போக்குகள் பிற்காலத்தில் அனுபவ சாத்தியம் இல்லாதனவாகிவிட்டன.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து அட்டகாசச் செயல்கள் புரிந்த ஒருவரின் வாழ்க்கைதான் 'மன்னிக்கத் தெரியாதவர்' கதை. அதில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் சில 'இப்படியும் நடக்குமா? நடந்திருக்க முடியுமா?' என்று எண்ணவைக்கும். ஆனால், வாழ்க்கையில் எவ்வளவோ நடந்திருக்கின்றன; என்னென்னவோ நடக்கின்றன.

'மன்னிக்கத் தெரியாதவர்' கதையின் நாயகர் வித்தியாசமான—விசித்திரமான—மனிதர்தான்.

இந்த விதமான விசித்திர மனிதர்களின் விந்தைப் போக்குகளை சுவாரஸ்யமாக விவரிக்கின்றன இத் தொகுப்பில் உள்ள குறுநாவல்கள்.

இவற்றில் 'ஹீரோ' தனிரகமான படைப்பு. வாழ்க்கையின் அடிநிலையில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் ஜன சமூக வெறுப்பையும் கசப்பையும் அவனது பிந்தைய வாழ்வின் செயல்கள் வெளிப்படுத்துகின்றன. இது ரசமான மனித நாடகம். இக் குறுநாவல் 'அரசியல் நாவ'லின் தன்மைகளையும் கொண்டிருக்கிறது.

அதனாலேயே, ஆதியில் 'சரஸ்வதி' (முற்போக்கு இலக்கியப் பத்திரிகை) ஆண்டு மலரில் முழுமையாக வெளி வந்த 'துணிந்தவன்' கதையை, 'ஹீரோ' என்ற பெயரில் 'தீபம்' இலக்கிய இதழில் மறுபிரசுரம் செய்தார் ஆசிரியர் நா. பார்த்தசாரதி.

இம் மூன்று குறுநாவல்களும் 'தீபம்' பத்திரிகையில் பிரசுரமானவைதான். 'தீபம்' இலக்கிய இதழுக்கும், அதன் ஆசிரியர் அமரர் நா. பா. அவர்களுக்கும், 'தீப'த்துக்கு ஒளி ஏற்றுவதற்காக தன்னைப் பூரணமாக அர்ப்பணித்திருந்த நண்பர் எஸ். திருமலைக்கும் என் நன்றி உரியது.

என் நலனில் மிகுந்த ஆர்வம் காட்டும் அருமை நண்பர் அருள்திரு. டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் அன்புதான் இக் குறுநாவல்கள், இப்போது புத்தக உருவம் பெறுவதற்கு ஆதாரமாகிறது. அவர்களின் அன்புக்கும் நட்புக்கும் என் வணக்கம்.

இக் குறுநாவல்களை நல்லமுறையில் புத்தகமாக வெளி யிடும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்துக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வல்லிக்கண்ணன்

## பதிப்புரை

எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன் அவர்களின் படைப்புகள் ஏராளம். அவற்றுள் இதழ்களில் வெளிவந்து தொகுப்பு நூல்களில் இடம் பெறுதவை பல. அவற்றைச் சுவைக்கும் வாய்ப்பு இந்தத் தலைமுறையினருக்கும் கிடைக்க வேண்டும் என்ற வேட்கையோடு திரு. வல்லிக்கண்ணன் அவர்களை அணுகி இந்நூலில் அடங்கும் மூன்று குறு நாவல்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அவர்களின் நல்லாசிகளோடு இந்நூலினை வெளிக்கொணர்கிறோம்.

கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகப் பல்லாயிரக் கணக்கான வாசகர்களிடம் தம்முடைய எழுத்துக்களின் பொருள் பொதிந்த உரையாடல்களின்மூலம் முற்போக்குச் சிந்தனைக்கு வளம்கூட்டி வருபவர் திரு. வல்லிக்கண்ணன் என்பதை யாவரும் அறிவர்.

எழுத்துச் செல்வரின் 71ஆவது பிறந்த நாள் நிறைவின் போது இந்நூலை வெளிக்கொணர்வதில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் பெருமிதம் அடைகின்றது. நாங்கள் நடத்திவரும் இலக்கிய நண்பர் வட்டத்திற்கு உறுதுணையாக விளங்கிவரும் மூத்த எழுத்தாளர்களுள் முதல்வராகத் திகழ்வதோடு ஆண்டுதோறும் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு சிறப்புரைகள் வழங்கிவரும் திரு. வல்லிக்கண்ணன் அவர்களின் இலக்கியப்பணி மேலும் பல்லாண்டுகாலம் சிறந்தோங்க அவருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இந்நூலினை உருவாக்கும் பணியில் எங்களை ஈடுபடுத்தி, ஊக்குவித்த முற்போக்கு

இலக்கியச் செல்வர் திரு. தி. க. சி. அவர்களுக்கும், விழாக் குழுவின் அமைப்பாளர்கள் திரு. ச. செந்தில்நாதன், திரு. மு. பரமசிவம், திரு. மாமணி ஆகியோருக்கும், இந் நூலினை நன்முறையில் அச்சிட்டுத் தந்த எங்கள் சி.எல்.எஸ். அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

அன்புடன்,

டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| விளையாட்டுப் பெண் | .. | *1* |
| மன்னிக்கத் தெரியாதவர் | .. | *33* |
| ஹீரோ | .. | *68* |

# விளையாட்டுப் பெண்

'மதனி... மதனீ... மதனியோய்!'

அம்மாள் சுந்தரம் அழுத்தம் திருத்தமாகத் தனக்கும் படிப்புக்கும் உறவு உண்டு என்று காட்ட விரும்பியவள்போல —உச்சரித்துக் குரலை உயர்த்திக் கூவினாள்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு அவள் 'மதினி, ஏ மதினி!' என்றுதான் குரல் கொடுப்பது வழக்கம்.

'கொஞ்ச நாட்கள்'—அடேயம்மா! அவள் வாழ்வில் எவ்வளவு மாறுதல்களை விளைவித்துவிட்டன அவை!

'மதனி... மதனீ... மதனியோய்!' என்று ராகம் போட்டாள் அவள்.

'நல்லாத்தானிருக்கம்மா நீ வாற வரத்து! ஏ சுந்தரம், வரவர நீ சின்னப்புள்ளெ மாதிரி...' என்று வெடு வெடுத்த படி வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தாள் 'மதனி' என அழைக்கப் பெற்றவள். அகிலாண்டம் அவள் பெயர்.

'பின்னே நான் என்ன பெரிய மனுஷியா, மதனி?' என்று கொஞ்சினாள் சுந்தரம்.

'நீ என்ன செய்வே! பிள்ளை இல்லாத வீட்டிலே கிழவன் துள்ளி விளையாடினானாம். அது மாதிரி...'

மதனியின் சிடுசிடுப்புக்கு நீர் கொட்டினாள் சுந்தரம். 'அது சரி. ஏன் மதனி கிழவன் அப்படி விளையாடினான்?' என்று குளுமைக் குரலில் கேட்டு.

'எனக்கு உன்கூடப் பேசமுடியாதம்மா' என்று அலுத்துக் கொண்டாள் பெரியவள்.

'அதிருக்கட்டும், மதனி. மதினிங்கிறதைவிட மதனீ என்று அழைப்பது அழகாக இருக்கின்றதன்றோ அருமை

மதனீ?' என்று நாடக மேடைத் தோரணையில் பேசினாள் சுந்தரம்.

'ஏளா, இந்தா பாரு...' என்று அகிலாண்டம் சூடாக ஆரம்பித்தாள்.

ஆனால், சுந்தரம் குறுக்கிட்டாள்: 'ஏளாங்கிறது நல்லா யிலேள்ளா மதினி. சுந்தரம் என்று சுந்தரமாகச் செந்தமிழ் கூறினால் இன்பத்தேன் பாயுமே காதினிலே!' என்று நீட்டினாள்.

'நீயாச்சு. உன் புரவோலமுமாச்சு! எனக்கு எவ்வளவோ வேலை கிடக்கு. பிள்ளைக பள்ளிக்கூடத்திலிருந்து வந்திடும். இன்னும் காப்பி போட்டாகலே. நீ என்னன்ன விண்ணாரம் பேசிக் கிண்ணாரம் கொழிக்கிறே!'

'ஐய்ஐய்ஐயா! விண்ணாரம் பேசிக் கிண்ணாரம் கொழிப்பது ...நல்லாருக்கு மதனி, ரொம்ப நல்லாருக்கு. நோட்டிலே எழுதிவைக்கப் போறேன்' என்று குதித்துக்கொண்டு ஓடினாள் அம்மாள் சுந்தரம்.

'கோவேறு கழுதை. காதரை கூதரையா வளந்துட்டுது. மூளை கொஞ்சம்னாலும் கிடையாது. இந்தத் தடிமாட்டைப் ''படியம்மா, படிச்சு ரொம்பக் கெட்டிக்காரியாகு''யின்னு சொல்லி உருப்படாமல் அடிக்கானே புருசன்காரன், அவனைச் சொல்லணும்' என்று முணுமுணுத்துவிட்டு, அகிலாண்டத் தம்மாள் தன் அலுவல்களைக் கவனிக்கச் சென்றாள்.

சுந்தரம் அங்கு நின்றிருந்தால் பெரியவளை வசைபாடி வாயடைக்கச் செய்யமாட்டாள். 'காதரை கூதரைன்னா என்ன மதனி?' என்று கேட்டு அவளைத் திக்குமுக்காடச் செய்திருப்பாள். நல்ல வேளையாக அவள் தனது 'பொது அறிவு நோட்'டிலே விண்ணாரம்—கிண்ணாரம் தொடரைப் பொறித்துவைக்கப் போய்விட்டாள்.

சுந்தரம் குறும்புக்காரக் குட்டி அல்ல. திருமதி சுந்தரம் சுப்பிரமணியன் ஆன அவளைப்பற்றிப் பெரியம்மாள் அடிக்கடி ஸர்டிபிகேட் கொடுப்பது பொருத்தமாகவே இருக்கும்.

'அஞ்சு பிள்ளைக்குத் தாயாகிற வயசு ஆச்சி, குதிராட்டமா இருக்கிறு. இவ கெட்ட கேட்டுக்குப் படிப்பு வேறே வாழுது! சின்னப் பொண்ணுங்கிற நினைப்புத்தான் இவளுக்கு' என்று அகிலாண்டம் புலம்புவாள்.

சுப்பிரமணியன் ஒரு மாதிரியான ஆசாமி. அவன் ஏதோ ஒரு ஆபீசில் 'அட்டெண்டர்' வேலை பார்த்து வந்தான். ஆளைப் பார்த்தாலே 'பையனுக்கு மறை கழன்றிருக்கு!' என்று சொல்லிவிடலாம். எதிரே வருகிற பெண்களைப் பார்த்து, அவன் முழிக்கிறபோது—அவள் சிறிது நாகரிக மாய், ஸ்டைலாக இருந்துவிட்டால் அவன் நின்று திரும்பிப் பார்த்து விழிக்கையில், 'சே, என்ன இவன் இப்படியிருக் கான்! சரியான லூசுபோலிருக்கு!' என்று தான் அருகில் உள்ள வர்கள் நினைப்பார்கள்.

அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்த சுந்தரம் சிறிது அழகாகவும் இருந்துவிட்டாள். 'ஐந்தாம் கிளாசு'வரை படிக்கவேறு செய்திருந்தாள். அப்புறம் அவன் மகிழ்வுக்கு எல்லை ஏது? காணுததைக் கண்டுவிட்ட மாதிரி—கிடைக்க முடியாததை எளிதில் அடைந்துவிட்டதுபோல, அவன் திரிந்தான்.

அவள் கறுப்பாக இருந்ததுதான் அவனுக்குச் சிறு வருத்தம் தந்தது. ஆனாலும், பரவாயில்லை, கவர்ச்சிகரமாக இருந்தாள். வசீகரமாக அழகு பண்ணிக்கொள்ளத் தெரிந்து வைத்திருந்தாள். தலைரோமத்தை ஒட்டப்படியும்படி சீவியும், இறுகித் தொங்கும்படி பின்னியும், விடாது சிலிர்த்து நெளி நெளியாய் வளைந்து சிங்காரமாய் ஜிலுஜிலுக்கவிட்டு, இருளாடும் கண்களிலே தனி ஒளி எழில் ஆடவிட்டு, இதழ் திறந்து வெண்பற்கள் சிறு ஒளிகாட்ட இளமுறுவல் புரியும் போது, 'ஆகா, என்னே இவள் அழகு!' என்று யாரும் சொக்கிப்போவது இயல்பு. சுப்பிரமணியன் அவள் அழகில் கிறங்கிக்கிடந்ததில் வியப்பு எதுவும் இல்லை.

சுந்தரம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள்தான். அதனுல் என்ன? நாகரிகமும், நவ யுகக் கலாசாரங்களும் மூலை

முடுக்கெல்லாம் எட்டிப் பாய்ந்துள்ள இந்தக் காலத்தில் 'பட்டிக்காட்டுப் பெண்' என்று வெறுக்கப்படும் நிலையில் எந்தப் பெண்ணும் இருப்பதில்லை. அவளுக்குப் படிக்கத் தெரியுமோ தெரியாதோ, ஸ்டைலாக டிரஸ் பண்ணத் தெரியும். பவுடர் பூசிக்கொள்ளத் தெரியும். அகல ரிப்பன் வைத்து நாகரிகமாகப் பின்னிவிடவும், ரிங் வைத்து பின்னிக் கொண்டை போடவும், குதிரைவால் கட்டு கட்டிக் கொள்ளவும் தெரியும். நவ யுகத் தயாரிப்பான மினுமினுத் துணிகளையும் நாகரிக டிசைன் ஜாக்கெட்டுகளையும் அணிந்து தளுக்கிக் குலுக்கி நடக்கத் தெரியும். சுந்தரமும் இந்த ரகமான பெண்தான். அவளை முழு நாகரிகக் கனி என்று சொல்லமுடியாது. நவ யுகக் 'காய்வெட்டு' எனச் சொல்ல லாம்.

அவள் தன் துணைவியாக வந்து சேர்ந்ததும், சுப்பிர மணியனுக்கு வாழ்க்கை பேரானந்தமாக மாறியது. அவன் சூழ்நிலையை, உலக சம்பிரதாயங்களை மறந்தான். தன்னையே மறந்து திரிந்தான்.

'சுந்து, உனக்குப் பாவாடை தாவணி எடுப்பாக, ஜோராக இருக்கும்!' என்று சொல்லி, வாங்கித் தந்து, அவளைப் பாவாடை அழகியாக நடமாடவிட்டுக் கண்டு களித்தான்.

அண்டை அயலார் சிரித்தனர். பழித்தனர். புறம்பேசி மகிழ்ந்தனர். அவளைக் குறைகூறினர். 'அவர் சொல்கிறபடி கேட்டு, அவருக்குப் பிடித்ததைச் செய்வது குற்றமா?' என்று கேட்டாள் 'பத்தினித் தங்கம்.'

முன்னோர்கள், பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார் கள், கணவனைக் கடவுளாக மதித்து நடக்கவேண்டும் என்று. ஆனால், நடைமுறையில் கணவன் பிரியப்படி நடந்தால், கணவனுக்கு மகிழ்வூட்டும் விதத்தில் ஆடை அலங்காரங்கள் செய்துகொண்டு சந்தோஷமாகக் காட்சி அளித்தால், பெரியவர்களே குறைகூறுகிறார்கள். இது அம்மாள் சுந்தரத் துக்குப் புரியவில்லை. புரியாத விஷயங்கள் குறித்து அவள்

வீணாகக் கவலைப்படுவது கிடையாது. ஆகவே மற்றவர் அபிப்பிராயங்களை அலட்சியமாக ஒதுக்கிவிட்டாள்.

பிறகு சீக்கிரமே பாவாடை ஆசை சுப்பிரமணியனை விட்டுவிட்டது. 'என்ன இருந்தாலும் ஸாரி கட்டறதிலே உள்ள அழகு வேறே எந்த டிரஸிலும் இல்லை' என்று கண்டு பிடித்துவிட்டான் அவன். அதனால் ரகம் ரகமான சேலைகளை வாங்கிக் குவித்தான்.

வந்த புதுசில் சிறிது பயந்து பணிவாக நடந்த சுந்தரம் புதுமைக் கூச்சம் விலகியதும், கணவன் சுபாவத்தைப் புரிந்து கொண்டதும், தெம்பாகத் திரிந்தாள். தான் எனும் அகந்தை அவளிடம் அதிகரித்தது.

கணவன் குறை கூறவில்லை. ஆனால், பக்கத்து வீட்டுப் பெரியம்மாள்கள் முனகினர்: 'கண்ணை உருட்டி முழிக்கறது லேயே பெண்டாட்டியை ஆட்டிவைப்பானே; அந்த வீட்டிலே தான் பொம்பளை சரியாக் குடித்தனம் நடத்தமுடியும். கல்யாணமான புதுசிலே பெண்டாட்டியாத்தா பெரியாத் தான்னு பல்லை இளிச்சிட்டு, பிறகு அவள் மிஞ்சிப்போன பிறகு நாயே, பேயேன்னு வையிறதும் அடிக்கிறதும் மிதிக் கிறதுமாகப் படுத்துகிறவன் எங்கே உருப்படுவான்? ஆரம் பத்திலிருந்தே ஓரே சீராக நடந்தால்தான் அவளும் அடக்க ஒடுக்கமா இருப்பாள்...'

'அனுபவம்' போதனைகள் புரிய முன்வந்து என்ன செய்ய? சுப்பிரமணியன் தன் இயல்புப்படி செயல்புரிந்தான். சுந்தரத்தின் வாழ்க்கை சுதந்திரப் பாதையில் வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தது.

அரைகுறை நாகரிகமாக இருந்த ஆசை மனைவியை முற்றிய நாகரிகமாக மாற்றியே தீருவது என முடிவு செய் திருந்தான் சுப்பிரமணியன். அவளுடைய தமிழறிவு வளர்ச்சி பெறுவதோடு, அவளுக்கு ஆங்கில ஞானமும் வந்து சேர வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். ஆகவே, சுந்தரம் தினசரி, ஒரு டீச்சரம்மா வீடு தேடிப்போய், 'பிரைவேட்' கற்று வந்தாள்.

அவள் மாணவி ஆக மாறியதுமே, அவளுடைய நடை உடை பாவனை பேச்சு எல்லாமே மாறுதல் பெற்றுவிட்டன. சுந்தரம் சின்னப் பிள்ளையாக, விளையாட்டுத்தனம் பெற்றவளாய் நடந்துகொள்ள முயன்ருள். அவள் பேச்சில் 'ஒன்றும் தெரியாத குழந்தை'போல் நடிக்க முயல்வது தொனித்தது. அவள் குதித்துக் குதித்து நடை போடுகிறபோது 'ஸ்கிப்பிங்' ஆடுகிற குறும்புக்காரப் பெண்ணின் நடிப்பு மிளிரும். நீட்டி நீட்டிப் பேசும்போது, பள்ளிக்கூடத்திலே 'ஆனு—ஆனு, ஆவேன்னு, ஈனு—ஈனு, ஈயேன்னு' என்று இழுக்கும் ராகமும், 'ஒரோண் ஒண்ணு, ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு' என்று நீட்டும் 'வாய்ப்பாட்டு ராக'மும் தொனிக்கும்.

பிறர் குறை கூறும்போது, 'இதெல்லாம் குற்றமா?' என்று கேட்டாள் அவள். 'குற்றம் இல்லை அம்மா! ஆனல், வயசு, நிலைமை, பண்பு இவற்றுக்கு ஏற்றதாயில்லையே உன் போக்கு' எனும் உண்மையை யாரும் எடுத்துச் சொல்லவில்லை அவளுக்கு.

'பொது அறி'வை ஒரு வரி அதிகமாக்கிவிட்டு வெளியே வந்தாள் சுந்தரம். உடனே வாய்ப்பாட்டுக் குரலெடுத்துக் கூவினள்—

'மதனீ... மதனீ... மதனியோய்! மருமகனெல்லாம் வந்தாச்சு! மருமகனெல்லாம் வந்தாச்சு!'

அவளுக்கு யாரும் கவனிப்புக் கொடுக்கவில்லை. வெளியே இருந்து வந்த 'மருமகன்கள்' அவர்கள் பாட்டுக்குப் புத்தகங்களை உரிய இடத்தில் வைக்கப்போனுர்கள். உள்ளே இருந்த மதனி காப்பி ஆற்றும் அலுவலில் ஈடுபட்டிருந்தாள்.

சுந்தரம் 'பாண்டி விளையாட்டு' ஆடுவதுபோல் வீட்டுத் தளவரிசைச் செங்கல்லில் தாவித் தாவிக் குதித்தபடி உள்ளே போனுள். 'மருமகன்லாம் வந்தாச்சு மதனி' என்ருள்.

'சரி! வரட்டுமே' என்ற அகிலாண்டம், 'நீயும் காப்பி குடியேன், சுந்தரம்' என்று உபசரித்தாள்.

'வேண்டாம்' என்று சொல்லி வெளியேறிவிட்டாள் அவள். தான் சின்னப்பிள்ளையாக மாறி வந்தாலும் 'அலப் பறக் கழுதை' ஆகிவிடவில்லை என்று காட்டிவிட்ட திருப்தி அவள் முகத்தில் ஒளிர்ந்தது.

'நல்ல பெண்தான். அவன்தான் கெட வைக்கிறான். இல்லேன்னு சொன்னா, இது ஒழுங்காகத்தான் இருக்கும்' என்று அகிலாண்டத்தம்மாளின் மனம் வருத்தப்பட்டது.

சுந்தரத்துக்கு வயசு என்ன, இருபத்தொன்று அல்லது இருபத்து இரண்டு இருக்கலாம். கல்யாணமாகி இரண்டு—இரண்டரை வருஷங்கள் கழிந்திருந்தன. வீட்டில் அவளைக் கட்டுப்பாடுகள் பண்ணுவதற்கு ஒருவரும் இல்லை. தனி வீட்டு ராணி. புருஷனும் அவளுக்குத் தகுந்தபடி வாய்த் திருந்தான். அதனால் அவளுடைய குறும்புத்தனங்களும் சிறு பிள்ளை விளையாட்டுக்களும் செழித்து வளர வசதியான சூழ்நிலை இருந்தது.

அவளுடன் சேர்ந்து ஆடிக் களித்து உற்சாகம் பெறவும், அவளுக்கு ஊக்கமளிக்கவும் பக்கத்து வீடுகளில் அவளுக்கு ஏற்ற தோழிப் பெண்களும் இருந்தார்கள். கல்யாணமான வர்கள், கல்யாணத்துக்குக் காத்திருப்பவர்கள், படிக்கும் குமரிகள் என்று பல ரகத்தினரும்தான். அவர்களுக்கெல்லாம் சுந்தரம்தான் தலைவி. எல்லோரும் 'அக்கா, அக்கா' என்று அவளைச் சுற்றிவந்து வம்புகள் பண்ணி மகிழ்வார்கள். அவர் கள் இருக்கிற இடத்தில் எப்போதும் கூச்சலும் கும்மாளியும் சிரிப்புமாக ஒரே ரகளைதான்.

வயசிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவளான அகிலாண் டத்தம்மாள்தான் அடிக்கடி கண்டிப்பாள். 'பெண்ணுக இப்படியா கனைப்பும் கத்தலுமாப் பொழுது போக்குவது? அடக்கம் ஒடுக்கமாக நடந்துகொள்ளவேண்டாம்? இப்படி எல்லாம் வீடே அதிரும்படி சிரிக்கிறது நல்லதில்லே' என்று சொல்லுவாள்.

ஆனால் யார் அவள் பேச்சைச் சட்டை செய்வது? சுந்தரம் "என்ன மதனி நீங்க! சிரிப்பதுகூடவா குற்றம்? பேசிச் சிரித்து சந்தோஷமா இருப்பதுகூடவா தப்பு?' என்று மடக்கிவிடுவாள். 'எக்கேடும் கெட்டு எப்படியும் தொலையட்டும்!' என்று பெரியம்மாள் தனக்குள் கரித்துக்கொட்டிக்கொண்டு ஒதுங்கிவிடுவாள்.

சும்மா தொணதொணக்கும் பெரியவள் பேரில் சுந்தரத்துக்குக் கோபமோ வருத்தமோ கிடையாது. அவளையும் விளையாட்டில் இழுத்துவிட்டுத் தமாஷ் பண்ணவேண்டும் என்ற நினைப்புத்தான் அவளை விஷமங்கள் புரியத் தூண்டும்.

ஒருநாள் முன்னிரவு, நாலைந்து வீடுகள் சேர்ந்த வளைவின் வாசல் பகுதியில் மங்கலான விளக்குத்தான் எரிந்துகொண்டிருந்தது. அகிலாண்டம் வீட்டில் போதுமான வெளிச்சம் இல்லை. சிக்கனத்தைக் கருதி அவள் அதிகம் விளக்கு எரிப்பதில்லை. அம்மாள் திண்ணையில் ஓய்வாகப் படுத்துக்கிடந்தாள். பையன்கள் உள்ளே ஒரு அறையில் படித்துக்கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் இதர பெண்களிடம் எச்சரிக்கை செய்துவிட்டு அருகே போய், 'ஐயோ, பாம்பு, பாம்பு' என்று அலறினாள். 'மதனி, பாம்பு! உங்க வீட்டுக்குள்ளே போயிருக்கு!' என்று கத்தினாள்.

பெரியவள் பதறி அடித்து எழுந்தாள். உடல் நடுங்க, வாய் குழற, 'எங்கே, எங்கே?' என்று தவித்தாள்.

'வீட்டுக்குள்ளேதான் போச்சு. சுவர் ஓரமா வந்து, உங்க பக்கத்திலே ஓடி, அப்படியே உள்ளே போயிட்டுது. விளக்குகளைப் போடுங்க' என்றாள் சுந்தரம்.

விளக்குகள் எரியலாயின. படித்துக்கொண்டிருந்த இரண்டு பையன்களும் அவசரம் அவசரமாக வந்தார்கள், 'என்னது? எங்கே?' என்று கேட்டுக்கொண்டு.

'பாம்பு! வீட்டுக்குள்ளே பாம்பு போயிருக்கு' என்றாள் சுந்தரம்.

பெரியவள் பயந்து, 'பார்த்து நில்லுங்க. நல்லாப் பாருங்க. கதவுக்குப் பின்னாலே, மூலையிலே எங்காவது ஒண்டியிருக்கும்' என்று சொன்னாள்.

இதற்குள் மற்றப் பெண்களுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஒருவர் இருவராய்ச் சிரிப்பைச் சிந்தி, தொடர்ந்து எல்லோரும் கலீரிட்டுக் குதூகலித்தார்கள்.

அகிலாண்டத்தின் சின்ன மகன் பார்வையில் பாம்பு பட்டுவிட்டது. அசையாமல் கிடந்த ரப்பர் பாம்பை எடுத்து அவன் சுந்தரத்தின்மேல் வீசினான். 'எல்லாம் இந்த அத்தை பண்றதுதான். ரப்பர் பாம்பைப் போட்டுவிட்டு உன்னைப் பயம் காட்டுகிறாள்' என்றான்.

'பயந்திட்டீகளா மதனி?' என்று கூவிக்கொண்டு, பெரியவளைக் கட்டிப்பிடித்தாள் சுந்தரம்.

'சும்மா விளையாட்டு மதனி. நீங்க நெசமாகவே பயந்துட்டீங்களே!' என்றாள், சிரித்தாள்.

'நல்ல பொண்ணு வந்து சேர்ந்தே! இதெல்லாமா விளையாட்டு?' என்று பெரியவள் அலுத்துக்கொண்டாள்.

'அத்தை உன்னை மட்டுமா பயம் காட்டுகிறா? வாய்க்காலுக்கு இந்தப் பாம்பை குடத்துக்குள்ளே வைத்து எடுத்துக்கொண்டுபோறா. அந்தி நேரத்திலே, அங்கே நிற்கிற பெண்கள் பக்கத்தில் விட்டெறிந்து, ஏ பாம்பு பாம்பு என்று கத்தி கலாட்டா பண்றது. மற்றவங்க பயப்படுவதைப் பார்த்து கைகொட்டிச் சிரிக்கிறது. இவளுக்கும் இவள் சிநேகிதி ஒருத்திக்கும் இதுதான் விளையாட்டு!' என்று சின்ன மகன் பாலு அறிவித்தான்.

அவனுக்கு அவள்மீது சிறிது கோபம் உண்டு. அவன் படிக்கிற சமயங்களில் அவள் ஏதாவது தொந்தரவு செய்து, படிக்கவிடாமல் கெடுப்பது வழக்கம். சில சமயம் நானும் படிக்கிறேன் என்று 'எட்டு வீட்டுக்குக் கேட்கும்படி' கூப்பாடு போட்டு அமைதியைக் குலைப்பாள். அல்லது அவளும் மற்றப் பெண்களும் சேர்ந்துகொண்டு கதை பேசுகிறோம்—பாட்டுப்

பாடுகிறோம் என்று கூச்சல் எழுப்பி 'கழுதைக் கூத்து' அடிப்பார்கள். இதெல்லாம் பாலுவுக்கும் அவன் அண்ணன் சேது ராமனுக்கும் பிடிக்காது.

சுந்தரம் சிரித்தாள். 'மாப்பிள்ளைப் பிள்ளைக்கு என் மேலே கோபம் போலிருக்கு! மாமாவிடம் சொல்லி எனக்கு அடிவாங்கிக் கொடுக்கணுமின்னு ஆசை போலிருக்கு!' என்றாள்.

'நீ அவனை அடிக்காமல் இருந்தால் போதாதா? உன் புருசன்காரன் உன்னை அடிக்கிறதா இருந்தால் நீ இப்படியா நடந்துகொள்வே?' என்று சூடாகச் சொன்னாள் பெரியம்மாள்.

மற்றப் பெண்கள் இதற்கும் சிரித்துக் கெக்கலித்தனர்.

'இது மாதிரி எல்லாம் நடக்கப்படாது' சுந்தரம். உன் நன்மைக்காகத்தான் சொல்றேன். இப்போ என் பேச்சு எடுபடாது. சாகமாட்டாதவ புலம்புறுளேன்னுதான் தோணும். பிறகு நீயே என்னையும் என் பேச்சையும் நினைத்துக் கொள்ள வேண்டிய காலம் வரும்' என்று அகிலாண்டம் கூறினாள்.

'ஐயோ என் மதனியே!' என்று கெண்டையாகப் பேசி, தன் கை விரல்களால் அவள் முகத்தை வருடி, திருஷ்டி கழிப்பவள்போல் தன் நெற்றிப் பொட்டுகளில் வைத்து விரல்களை நொடித்து நெறித்தாள்; கலகலவெனச் சிரித்தாள் சுந்தரம்.

கல்யாணம் செய்துகொள்ளலாமா வேண்டாமா என்று தயங்கியும், 'இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம்? வாழ்க்கை வசதிகள் கொஞ்சமாவது சரிப்பட்டு வரட்டுமே!' என்று தள்ளிப் போட்டும், 'வசதிகள் இல்லாதவங்க எத்தனையோ பேரு கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? நாமும் செய்துகொண்டால் என்ன?' என்று ஆசையை வளர்த்தும் காலம் கழித்து வந்த சுப்பிரமணியன் 'கல்யாணம் பண்ணிவிட வேண்டியதுதான்' என்று உறுதியாக முடிவுக்கு

வருவதற்குள் அவனுக்கு வயசு நாற்பதாகிவிட்டது. அதற்குப் பிறகுதான் அவன் வாழ்க்கையில் சுந்தரம் வந்து சேர்ந்தாள்.

மனைவி என்பவள் ஒரு புதுமை என்ற நிலைமை மாறி, கவர்ச்சி சக்தி குறைந்து, பழக்கப்பட்டவள் ஆகி, சர்வ சாதாரணத் தன்மையை அடைந்துவிடுவதற்குப் போதுமான காலம் கழிந்துவிட்ட பிறகும்கூட, சுப்பிரமணியனுக்கு 'சின்னப் பெண்' ஆகக் காட்சி தந்த சுந்தரத்திடம் புதுமைக் கவர்ச்சி குறையாமலே இருந்தது. அவள் பேச்சும் சிரிப்பும் விளையாட்டுத்தனமும் அவனுக்கு அவளிடம் உள்ள மோகத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. அவள் 'ஸ்டைல் பேபி'யாக விளங்குவதில் கருத்துச் செலுத்த ஆரம்பித்த பிறகு, அவனுடைய வியப்பும் மகிழ்ச்சியும் பெருமையும் கட்டுக்குள் அடங்காதவாறு பொங்கி வழிய லாயின. அவளுடைய விசித்திரப் போக்குகளை அவன் ஆதரிப் பதற்கு இவை வழி செய்தன.

ஸ்டைலையும் ஃபாஷனையும் பெண்கள் எப்படி எப்படி எல்லாமோ கற்றுக்கொள்கிறார்கள். நாகரிக முதிர்ச்சியுற்ற பல பெண்களைப் பார்த்தும், டீச்சரம்மாள்களையும் கல்லூரி மாணவிகளையும் கவனித்தும், சினிமாப் படங்களிலிருந்தும், பத்திரிகைப் படங்கள் குறிப்புகள் மூலமும் கற்றுக்கொள்கிற பெண்களைப்போலவே, சுந்தரமும் நாகரிக முறைகளையும் சிங்காரிப்புக் கலைகளையும் படித்துத் தேர்ந்தாள். அவற்றில் வெகு தீவிரமான முன்னேற்றமும் காட்டினாள்.

அவள் நடையும், உடைகள் அணிகிற தன்மையும், பிறவும் இதர பெண்களின் கோணல் பார்வைக்கும், வம்புப் பேச்சுக்கும், குத்தல் சிரிப்புக்கும் இலக்காயின. பின், ஆண் களின் கண்களையும் மனசையும் சொடுக்கி இழுக்கும் காந்தத் தூண்டில்களாக அவை விளங்காமலா போகும்?

'எல்லாம் அதிசயமாகத்தானிருக்கம்மா! இவள் எந்தச் சீமையிலோ இருந்து வந்தவ மாதிரித்தான், வீட்டுக்குள்ளே செருப்பு போட்டுக்கிட்டுத்தான் நடக்கிறு. வீட்டுக்குள்ளேயே

கூட சதா நடக்கிறதுக்குன்னு தனியா ரப்பர் செருப்பு. வெளியே போட்டுக்கிட்டுப் போறதுக்கு வேறே செருப்பு!' என்று ஒருத்தி வக்கணை கொழித்தாள்.

இன்னொருத்தி உற்சாகமாகச் சொன்னாள்: 'அவள் ரவிக்கை போடுகிற லெட்சணத்தைத்தான் பாரேன். தோளி லிருந்து ரொம்ப இறங்கியிருக்கும். வயிற்றுக்கு மேலே ரொம்ப ஏறியிருக்கும். உடம்பின் பாகங்களை எவ்வளவுக்கு அதிகம் திறந்து காட்ட முடியுமோ, அவ்வளவையும் காட்டு வதிலே அவளுக்கு ஆர்வம் அதிகம்.'

'அவள் படிக்கப் போகையிலே பார்க்கணுமே! என்ன ஸ்டைல் என்ன டிரஸ்! காலேஜிலே படிக்கப் போறவகூட இவ்வளவு கர்வமாப் போகமாட்டாள்' என்றாள் வேறொருத்தி.

'புருசன்காரன் இதை எல்லாம் பார்த்து சந்தோஷப் படத்தானே செய்கிறான்? அப்புறம் நாம் கேலி பேசி என்ன பண்ண?' என்று அகிலாண்டத்தம்மாள் கூறுவது வழக்கம்.

சுப்பிரமணியனுக்கு சந்தோஷமாவது சந்தோஷம்! தன் வாழ்வில், கிடைத்தற்கரிய பெரும் பேறு கிட்டியிருப்பதாகத் தான் அவன் நினைத்தான். 'ஊரிலே, உலகத்திலே இல்லாத அதிசயமாக அவனுக்குப் பெண்டாட்டி கிடைத்துவிட்டது மாதிரித்தான் அவன் அலைகிறான்!' என்று அகிலாண்டத் தம்மாள் அடிக்கடி சொல்வது போலவே அவன் மனநிலையும் அமைந்திருந்தது. 'சுந்தரம் எல்லாரையும் மாதிரி இல்லே, அவளே தனிதான்' என்று அவன் நம்பி மகிழ்ந்தான்.

அதனால் அவள் விருப்பங்களை, ஆசைகளை, அவன் நிறைவேற்றத் தயங்குவதே இல்லை.

அவன் அவளை அவ்வப்போது சினிமாப்பார்க்க அழைத்துச் செல்வது உண்டு. அது மற்றவர்களுக்கு வேடிக்கையாகப் படவில்லை. ஆனால் அவன் அழைத்துச் செல்லும் விதம் தான் மற்றவர்களின் குதர்க்கப் பேச்சுக்கு விஷயமாகும். நடந்தோ, பஸ்ஸிலோ இருவரும் போய் வந்தால் பிறர் அவ் வளவாகக் கவனிக்கமாட்டார்கள். அவளைத் தன் சைக்கிளின் பின்பக்கம் கேரியரில் உட்கார்த்திவைத்து அவன் உற்சாகமாக

மிதித்துச் செல்வான். அவளும் ஹாயாக அமர்ந்திருப்பாள். இந்த அபூர்வக் காட்சி பார்க்கிறவர்களுக்குச் சுவாரஸ்யமான தாகப்பட்டது.

'இப்படிப் போக உனக்கு வெட்கமாக இல்லை?' என்று அகிலாண்டம் சுந்தரத்திடம் ஒரு தடவை கேட்டாள்.

'இதில் என்ன வெட்கம்? எத்தனையோ பேர் ஸ்கூட்டரில் ஜோடியாகப் போகவில்லை? அதுமாதிரித்தானே இதுவும்! பஸ்ஸில் போகலாம்தான். ஆனால் திரும்பி வாறபோது சங்கடமாக இருக்கு. பஸ் கிடைப்பதில்லை. நடந்து வருவது சிரமமாக இருக்கு. இப்படி சைக்கிளில் போய் வருவது சௌகரியமாயிருக்கு' என்று சுந்தரம் பதிலளித்தாள்.

அதற்குப் பிறகு பெரியம்மாள் ஏன் பேசப்போகிறாள்? 'இதெல்லாம் எங்கே கொண்டுபோய் விடப்போகுதோ!' என்று எண்ணினாள். வெளியே சொல்லவில்லை.

ஒருநாள்—அன்று பள்ளிக்கூடம் இல்லை—பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

அகிலாண்டத்தம்மாளின் மூத்த மகன் சேதுராமன் அறைக்குள் மேஜைமுன் அமர்ந்து என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். அம்மாள் அடுப்பங்கரையில் படுத்துத் தூங்கும் நேரம். பாலு நண்பன் ஒருவனுடன் வெளியே போய்விட்டான்.

சுந்தரம் டீச்சரம்மா வீட்டுக்குப் போவதற்காக, சிங்காரித்துக்கொண்டு, புத்தகமும் கையுமாகக் கிளம்பியவள் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள். 'ஊம். படிப்பு நடக்காக்கும்?' என்றாள்.

அவன் தலையைத் திருப்பி அவளை நோக்கிச் சிரித்தான். அத்தோற்றம் அவள் மனசில் சிறு கிளர்ச்சி ஏற்படுத்தியது போலும்.

அவள் ஏதோ ஒரு பாடலை ஊமைக் குரலில் இசைத்த வாறு மெதுவாக ஆடி அசைந்து அவன் அருகில் போய்

நின்றாள். 'உன் தலை கருகருவென்று அடர்த்தியாய், என்னமாச் சுருள் சுருளாயிருக்கு!' என்றாள். அவன் தலை முடியில் விரல்களை ஓட்டி நீவினாள்.

'என்ன அத்தை இது? ஏன் இப்போ கிராப்பைக் கலைக்கிறே?' என்று சிடுசிடுத்தான் அவன்.

'கலைஞ்சு போனால் என்ன? நான் சீவி விடுகிறேன்!' என்று சொல்லி ஒய்யாரப் பார்வை பார்த்தாள் சுந்தரம்.

'சரி சரி. நீ உன் வேலையைக் கவனிக்கப்போ. நான் எழுத வேண்டியது நிறைய இருக்கு!' என்று அவன் முணு முணுக்கவும், அவள் தன் புத்தகங்களை மேஜைமீது வைத்து விட்டுக் கைகளை அவற்றின் மீது ஊன்றி, முகத்தைக் கைகள் தாங்கி நிற்க, உடலை வளைத்துக் குனிந்து நின்று, அவன் கண்களில் கண் பதித்தாள்.

'என்ன ஓயாத படிப்பு வாழுது? அத்தை கூடக் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தால் என்னவாம்?' என்றாள்.

அவன் மூஞ்சியை உம்மென்று வைத்துக்கொண்டு புத்தகத்தைப் படித்தபடியே இருந்தான். அவள் அவனுக்குப் பக்கத்தில் நின்றதும், அவள் உடலும் உடையும் எழுப்பிய மணங்களும் அவனை என்னவோ செய்தன. அவள் முகத்தை, விழிகளை, மேனி வளப்பத்தை அவன் விழிகள் அவ்வப்போது பார்த்து ரசிப்பதும், பின் தாழ்ந்து விடுவது மாக இருந்தன.

அவன் குழப்பத்தை அவள் வெகுவாக ரசித்தாள். மேலும் அவனை வெட்கமுற்றுக் குழம்ப வைக்க வேண்டும் என்ற ஆசை அவளுள் கிளர்ந்தது.

'கண்ணைப் பாரு குறுகுறுன்னு. மூக்கு கொழுக்கட்டை மாதிரி இருக்கு...' என்று வர்ணிக்க ஆரம்பித்தாள்.

'இருந்தால் இருந்துவிட்டுப் போகுது!' என்று எரிந்து விழுந்தான் அவன். 'உனக்கென்ன அதைப்பற்றி "வந்து பாரு, ஸர்டிபிகேட் கொடு" என்று உன்னை யாரும் கேட்கலியே!' என்றான்.

அவள் கிளுகிளுச் சிரிப்பு உதிர்த்தாள். 'நீ என்கிட்டே ஏன் கேட்கப் போறே? உன்னையே பார்த்துப் பார்த்து, ரசித்து ரசித்து, சொக்கி மயங்கி, அத்தான்—அத்தான்னு வளைய வளைய வரப்போறவ ஒருத்தி இருக்கத்தானே செய்வா! அவள் என்ன சொன்னாலும் கேட்டுக்கிட்டே இருப்பே. அவ எங்கே இருக்கா சேது?' என்று வாயாடினாள்.

'இப்ப நீ போறையா என்ன?' என்று கத்தினான் அவன்.

'உஸ்! என்ன நீ?' என்று எச்சரித்துத் தன் கையால் அவன் வாயைப் பொத்தினாள் சுந்தரம். 'மதனி எழுந்திருச்சிடப் போறாங்க. இப்படி ஏன் கத்துறே?' என்றாள். 'நான் படிக்கப் போகணும் அம்மா. நேரமாச்சு' என்று சொல்லி விட்டு, நிமிர்ந்து, நகர்ந்து அவனை ஒட்டி உரசி நின்றாள்.

அவனுக்கு அவள் போக்கு சுகமாகவும் இருந்தது; எரிச்சலூட்டுவதாகவும் இருந்தது. 'என்னதான் படிக்கிறே நீ?' என்று கேட்டான்.

'இங்கிலீஷ், தமிழ் எல்லாம்தான்!' என்று சொன்னவள் அவன் முன் திறந்து கிடந்த பெரிய புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டினாள். 'இது என்ன புத்தகம்! ஒரு படம் கூட இல்லையே!' என்று முகம் சுளித்தாள். பிறகு, 'இது மாதிரி புத்தகத்தை எல்லாம் நான் படிக்க எவ்வளவு நாளாகும்?' என்று கேட்டாள்.

'அஞ்சாறு வருசம் பிடிக்கும்!'

'ஏயம்மா!' என்று புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, அவனையே பார்த்தபடி நின்றாள். அவன் மூக்கை இரண்டு விரல்களால்பற்றி ஆட்டிவிட்டு, சிரித்தபடியே நடக்கலானாள்.

அவனுக்குக் கோபம் வந்தது. அவன் வேகமாக அவள் தலைப் பின்னலைப் பிடித்து இழுத்தான்.

அவள் 'ஸ்ஸம்மா, என்னமா வலிக்கி!' என்று வேதனையுற்றவள் போல் நடித்துத் தள்ளாடித் திரும்பி அவன் மடியில் உட்கார்ந்துவிட்டாள்.

இது அவன் எதிர்பாராதது. அவன் எண்ணியும் பார்த்திராத ஒரு காரியத்தை அடுத்துச் செய்தாள் அவள். அவன் மீது சாய்ந்துகொண்டாள். 'இதை மறந்திடாதே!' என்று காதில் கிசுகிசுத்துவிட்டு, எழுந்து, நிதானமாக வெளியேறினள். திரும்பிப் பாராமலேயே நடந்தாள்.

சேதுராமனை ஒருவித பயமும், வெட்கமும், மகிழ்ச்சியும் குழப்பின. தேகம் நடுக்கமுற்றது. 'இவ என்ன இப்படியிருக்கா!' என்று எண்ணினலும், அவள் செயல் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது; இனித்திருந்தது. அம்மா எழுந்து, விழித்தபடி இருப்பாளோ, அவளுக்கு அறையில் நடந்தது தெரிந்திருக்குமோ என்ற அச்சம் உதைக்கவும், அவன் எழுந்து வந்து எட்டிப் பார்த்தான்.

அம்மா நிம்மதியாகத் தூங்கிக் கிடந்தாள்.

'நல்லதாப் போச்சு!' என்று மகிழ்வுற்றான் அவன். மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்த அவனுக்குப் படிப்பதில் கவனம் செல்லவில்லை. 'பக்கத்து வீட்டு அத்தை'யின் சொல்லும் செயலும் அழகும் நினைவில் சுழன்று சுழன்று அவனுக்கு உள்ளூற ஆனந்தம் அளித்தன.

சுந்தரம் கவலையில்லாத சின்னப்பெண் மாதிரி விளையாட்டுத்தனமாகக் காட்சி அளித்துவந்த போதிலும் அவள் உள்ளத்தில் பல ஏக்கங்களும் வருத்தங்களும் மண்டிக் கிடந்தன. அவற்றை மறப்பதற்காகக்கூட அவள் சிறு பிள்ளைபோல் ஆடிக்களிக்கத் துணிந்திருக்கலாம்.

அவளுக்கு இருந்த கவலைகளில் எல்லாம் பெரியது கணவன் சுப்பிரமணியனைப் பற்றியதுதான். அவளுக்குத் தெரிந்த எத்தனையோ பெண்கள், அவளுடன் பழகிப் பிரிந்த பல சிநேகிதிகள் அனைவருக்கும் அவர்களுடைய வயசுக்குத் தகுந்த—அவர்களுடைய தகுதிகளுக்கும் தோற்றத்துக்கும் ஏற்ற—கணவர் கிடைத்திருந்தனர். அவர்களில் பலரைவிட வசீகர அழகியான தனக்கு வயசில் மூத்த, கிழத்தோற்றம் பெற்ற, கவர்ச்சித் தன்மை அதிகம் இல்லாத ஒருவர்

வாழ்க்கைத் துணைவராக வந்து சேர்ந்து விட்டாரே என்ற வருத்தம் ஆரம்பம் முதலே அவள் மனசின் ஒரு பகுதியில் இடம்பிடித்துக் கொண்டது.

சுப்பிரமணியன் கறுப்பாய், ஒல்லியாய், நெட்டையாய் இருந்தான். முகத்தில் அது என்ன களையோ—கிழத்தனமோ, அசட்டுக் களையோ, பிரேதக்களை தானே! கண்கள் குழி விழுந்து, கன்னங்கள் ஒட்டி, நெற்றி மேடிட்டு, வழுக்கை தோன்றி, அடர்த்தியற்றுக் கிடந்த உரோமங்களில் அரை வாசி நரைபடிந்து...ஐயோ கண்றாவி! அவன் இளைஞனாக இருந்திருக்கக்கூடாதா? தலைமயிர் அடர்த்தியாய் கரு கரு வென்று, பார்ப்பதற்கு வசீகரமாய் இருந்திருக்கக்கூடாதா? ஆள் இன்னும் கொஞ்சம் முறுக்காய், அழகாய் இருக்கக் கூடாதா?—இப்படி எத்தனையோ ஏக்கங்களை அவள் வளர்த்தது உண்டு.

என்றாலும் அவன் அவளை அன்பாய், எவ்வளவோ ஆசையோடு, செல்லமாய் நடத்தி வந்தது அவளது மனக் குறைகளை அவள் மூடி மறைப்பதற்கும், பெரும்பாலான சமயங்களில் மறந்து விடுவதற்கும் துணை புரிந்தது.

ஆனால், மனம் என்பது எப்போதும் ஒரே சீராகவா இருக் கிறது? அடிக்கடி குரங்குத்தனம் பண்ணுவது தானே அதன் இயல்பு? சுந்தரத்தின் மனமும் அவ்வப்போது—வசீகரமான இளைஞன் எவனையாவது பார்க்கிறபோது, இளமையும் பொருத்தமும் உடைய இன்ப ஜோடிகளைக் காண நேரிடுகிற போது—வாலாட்டிவிடும். அவளுக்கு உள்ளக்கிளர்ச்சியும் உணர்வுத் துறுதுறுப்பும் உண்டாக்கி விடும்.

அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தான் அவள் அண்டை வீட்டு சேதுராமனிடம் சிறு குறும்பு செய்யத் துணிந்தாள். அதை வளர்க்க வேண்டும் எனும் ஆசை அவளுக்கு அப்போது இருந்ததில்லை.

அவள் மனம் அவன் நினைவை ஒதுக்கி விட்டது என்றும் சொல்ல முடியாது. ‘சேது நல்லாத்தானிருக்கான். ஆனால் பொம்பிளைப் பிள்ளை மாதிரி கூச்சப்படுதான். கூச்சம் ரொம்ப

அதிகம். அவனுக்குப் பதினறு வயசு ஆகுதுன்னு மதனி சொன்னளே. சில பையனுக இந்த வயசுக்குள்ளே என்னெல்லாம் பண்ணிப்போடுதானுக! இவன் சுபாவம் இப்படி இருக்கு!' என்று எண்ணிக்கொண்டாள் அவள்.

'அடுத்த வீட்டு அத்தை'யின் சிறு குறும்பு, படிப்பில் ஆர்வம் கொண்டிருந்த சேதுராமனின் மனநிலையை மிகுதியும் கெடுத்துவிட்டது.

அவள் விளையாடிவிட்டுப் போன பின்னர், அவளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்த அவன் மீண்டும் அவள் திரும்புகிற வரை வெளியே போகாமல் வீட்டிலேயே காத்திருந்தான். வரும்போதும் சுந்தரம் எட்டிப்பார்த்து ஏதாவது சொல்லுவாளா என்று பார்க்க வேண்டும் என்று நினைத்தான்.

ஆனல் அவள் வீடு திரும்பியபோது நேரே தன் வீட்டுக்குப் போய்விட்டாள். மதனி வீட்டுப் பக்கம் திரும்பவேயில்லை.

அது அவனுக்கு ஏமாற்றம் அளித்தது. அம்மாவும், வளைவில் வேறு பலரும் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்ததனல் தான் அவள் அவ்வாறு போய்விட்டாள் என்று அவன் தனக்குத்தானே ஆறுதல் கூறிப் பொழுது போக்கினன்.

அதிலிருந்து, அவள் எப்பொழுது வருவாள், திரும்பவும் தன்னுடன் பேசிச் சிரித்து விளையாடமாட்டாளா என்று அவன் ஆசையோடு எதிர்பார்க்கத் தொடங்கினன். ஆனல், அவள் வரவே இல்லை.

படிப்பில் மனம் செல்லாமலும், அவள் வரவில்லையே என ஏங்கியும் சில நாட்களைக் கழித்த பிறகு, 'சனியன் தொலையட்டும். பரீட்சைக்குப் படிக்க வேண்டியது தான் இனிமேலே' என்று தீர்மானித்தான் சேது.

அப்படி ஒரு முடிவுக்கு அவன் வந்திருந்த வேளையில், சுந்தரத்தின் மனம் அவனுடன் கொஞ்சம் விளையாடி மகிழலாமே என்று நினைத்துவிட்டது.

சேதுராமனும் பாலுவும் படித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அவளும் புத்தகத்தை எடுத்து வந்து, 'இதுக்கு அர்த்தம் என்ன? இதை எப்படிப் படிக்கணும்? இது எனக்குத் தெரியலியே; கொஞ்சம் சொல்லித்தர மாட்டியா?' என்று தொல்லைதரத் துணிந்தாள். அவர்கள் எரிந்து விழுந்தால், அவள் சிரித்துக் கேலிபேசி மகிழ்ச்சி அடைவாள்.

ஒரு சமயம் அவள் தானாகவே என்னவோ எண்ணி ரசித்துக் களிப்பவள்போல் சிரித்துக்கொண்டே வந்தாள். அப்போது பாலு வீட்டில் இல்லை. அவன் அம்மா கோயிலுக்குப் போயிருந்தாள். அன்று கோயிலில் ஏதோ விசேஷம் என்று பலரும் சென்றிருந்தனர். சேதுராமன் ஒரு பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நோட்டுடன் வந்த சுந்தரம், 'சேது, இந்த போட்டோவை நீ இன்னும் பார்க்கலியே? எல்லாரும் பார்த்தாச்சு. ஒரு மாப்பிள்ளை படம். எப்படி இருக்காருன்னு பார்த்துச் சொல்லு!' என்று கூறி ஒரு படத்தை நோட்டுக்குள்ளிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

அவன் அதை வாங்கிப் பார்த்தான். அவள் படம்தான் அது. ஆனால் ஆண்பிள்ளை வேஷம் போட்டிருந்தாள். வேட்டி கட்டி, சட்டையும் கோட்டும் அணிந்து, அங்கவஸ்திரம் தோளுக்கு இருபக்கமும் நீண்டு தொங்க, தலையில் ஒரு குல்லாய் வைத்துக்கொண்டு, ஒரு நாற்காலியில் கால் மீது கால் போட்டபடி ஜம்மென்று அமர்ந்திருந்தாள்.

அவன் அதையே பார்த்துக்கொண்டிருக்கையில், அவள் அவன் அருகில் நெருங்கிக் குனிந்து, 'என்ன சேது, ஒரே அடியா லயிச்சுப்போயிட்டே? இந்த மாப்பிள்ளையின் அழகு உன்னைக் கிறங்க வைக்குதாக்கும்? நாம ஒரு பொண்ணாக இல்லையே, இவரை லவ் பண்ண முடியாமல் போச்சேன்னு இப்போ என்று வருத்தம் ஏற்படுது போலிருக்கு! ஐயோ

பாவம்!' என்று குழைவுக் குரலில் பேசி, விரல்களை அவன் கன்னங்களில் இழைய விட்டாள்.

'போ அத்தை, என்ன நீ!' என்று சிணுங்கினான் அவன்.

'சரி. அந்த மாப்பிள்ளைக்கு இந்தப் பொண்ணு பொருத்தமா இருக்குமா பாரு!' என்று அவள் இன்னொரு போட்டோவை அவன் கையில் வைத்தாள்.

அதுவும் அவள் படம்தான். பாவாடை, தாவணி கட்டி, கூந்தலை நீளமாகப் பின்னித் தொங்கவிட்டு, பள்ளிக்கூடம் செல்லும் மாணவிபோல் புத்தகமும் கையுமாகக் காட்சி தந்தாள். நேரில் காண்பதைவிட, சிறிது இளையவளாகவே அவள் அப்படத்தில் தோன்றினாள்.

'நல்லாருக்கு. இதில் நீ ரொம்ப நல்லாயிருக்கே!' என்று தன் ரசனையையும் வியப்பையும் வெளியிட்டான் அவன்.

அவள் உள்ளத்தின் மலர்ச்சி முகத்தின் அழகுச் சிரிப்பாகப் பூத்துக் குலுங்க, அவன் சொற்களை காதில் வாங்கிக் கொள்ளாதவள்போல, 'இந்தப் பெண்ணை உனக்குப் பிடிச்சிருக்கு இல்லே? இவளை நீ கல்யாணம் கட்டிகிடுறியா?' என்றாள், குறும்புத்தனமாக.

அவன் என்ன சொல்வது என்று புரியாத குழப்பத்துடன் தவிக்கையில், 'ஆசைதான் பையனுக்கு! இவளுக்கும் நமக்கும் நல்ல ஜோடிப் பொருத்தம்னு எண்ணி எண்ணி சொக்கிப் போறாப்லே தோணுது' என்றாள். குலுங்கிச் சிரித்தாள்.

'சீ போ, கொஞ்சம்னாலும் வெட்கமே இல்லாமே!' என்று சிடுசிடுத்தான் அவன்.

'ஹை, முகம் சிவந்து போச்சே! மூக்குநுனி சிவப்பாயிட்டுதே! கோபம்தானா? ஸார், கோபம்தானா?' என்று கிண்டல் பண்ணியவாறே, அவன் கையிலிருந்த படங்களைப் பிடுங்கிக்கொண்டு, அவனை ஒரு தினுசாகப் பார்த்தாள்.

முகம் நிமிர்த்தி அவளை நோக்கிய சேது அந்தப் பார்வையைத் தாங்கிக்கொள்ள முடியாதவனாய்த் தலைகுனிந்தான்.

'சரி சரி. நான் போறேன்!' என்று கூறி, அவன் கன்னத்தைச் செல்லமாக வருடிவிட்டு, சிரித்துக்கொண்டே வாசல்பக்கம் ஓடிப்போனாள் அவள்.

அப்பொழுது வீட்டுக்குள் நுழைந்த பாலுவின்மீது முட்டிக்கொண்டாள்.

'என்ன அத்தை, பார்த்து வரக்கூடாது? கண்ணை மூடிக் கிட்டே டான்ஸ் பண்ணி வந்தையாக்கும்?' என்று கேட்டான் அவன். அண்ணனைப்போல் சங்கோஜி அல்ல தம்பி. பேச்சிலும் படபடப்பு அதிகம்தான்.

'நீ வேகமா வந்து முட்டிவிட்டு, பேச்சைத் திருப்புறியே நல்லாருக்கு வேடிக்கை!' என்று அத்தை சிரித்தாள். வேகமாக வெளியேறினாள்.

அவள் போனபின், 'இந்த அத்தை ரொம்ப மோசம்!' என்று அண்ணனிடம் அபிப்பிராயம் அறிவித்தான் தம்பி.

அவன் எதற்காக அப்படிச் சொல்கிறான் என்பதை விளங்கிக்கொள்ள முடியாதவனாய், சேது விழித்தான். 'ஏன், என்ன விஷயம்?' என்று கேட்டான்.

'கல்யாணி டீச்சர் வீட்டிலே போய்த்தான் இவள் கற்றுக்கொள்கிறாள். படிப்பு என்னமோ தினசரி ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் தான் இருக்கும். ஆனால் இவள் அந்த வீட்டிலே ரொம்ப நேரம் தங்குறா...'

'ஊம். அதுனாலே?'

'கல்யாணி டீச்சர் வீட்டுக்கு வந்து சேருவதற்கு எவ்வளவோ நேரம் முந்திக்கூட்டியே இவ அங்கே போகிறா...'

தம்பி எதையோ சுற்றி வளைத்துச் சொல்கிறான் என்று மட்டுமே புரிந்துகொண்ட சேது, 'போகட்டுமே, அதிலே என்ன தப்பு?' என்றான்.

'அந்த டீச்சருக்கு செல்வராஜ் என்றொரு தம்பி இருக் கான். வேலை எதுவும் செய்யாத உல்லாச மைனர். அவன் அக்கா வீட்டோடு தான் இருக்கான்...'

பாலுவின் பேச்சில் அர்த்தம் புதைந்து கிடந்தது. அதை அங்கீகரிக்க விரும்பாத அண்ணன், 'சீச்சீ, நீ ஒண்ணு...' என்று இழுத்தான்.

அதைப் பெரிதுபடுத்தாமல் தம்பி சொன்னான்: 'இந்த அமராவதிக்கு ஏற்ற அம்பிகாபதி அவன் தான்! அவன்கூடச் சிரித்துப் பேசி விளையாடுவதில் இவளுக்கும் இன்ட்டரஸ்ட் அதிகம் தான். டீச்சர் வீட்டுக்குப் பின்பக்கம் பெரிய தோட்டம். அதிலே இவள் சைக்கிள் கற்றுக் கொள்கிறாள். அவன்தான் உதவி பண்ணுகிறான். சைக்கிள்விடக் கற்றுக் கொள்கிறேன் என்ற சாக்கில் இவளும், இவள் கீழே விழுந்து விடாமல் பிடித்துக் கொள்கிறேன்—சரியாக இருந்து ஓட்டும் படி ஹெல்ப் பண்ணுகிறேன் என்று அவனும் எவ்வளவோ ஜாலிகள் அனுபவிக்க முடியுது!'

'உனக்கு எப்படித் தெரியும்?'

'என் கூடப் படிக்கிற பத்மநாபன் வீடு அந்த டீச்சர் வீட்டுப் பக்கம்தான். அவன் வீட்டு மாடியிலிருந்தால், தோட்டத்தில் நடப்பதை எல்லாம் பார்க்க முடியும். இந்தத் தோட்டத்தில் சினிமா சீன்கள் நடக்கும், நீயும் வந்து பாரு என்று அவன் ஒரு நாள் என்னைக் கூட்டிப்போனான். அதற்குப் பிறகும் இரண்டு மூன்று தடவைகள் நான் என் கண்ணால் பார்த்தேன்...'

'சனியன் எப்படியும் தொலையட்டும்!' என்று அந்தப் பேச்சுக்கு முடிவுகட்ட முந்தினான் அண்ணன். அவனைச் சந்தேகிக்கவில்லை. அத்தை சுந்தரம் எப்படி விளையாடுவாள் என்பது அவனுக்குத் தெரியாதா என்ன? அந்த எண்ணம் தான் அவனுக்கு எரிச்சல் மூட்டியது. எவனோ ஒரு செல்வராஜுக்கு அதிர்ஷ்டம்! அவன் பேரில் இவனுக்கு வீண் பொறாமை பொங்கியது.

வெளி வாசலில் வழியை மறித்துக்கொண்டு நின்றிருந்தாள் சுந்தரம்.

சேதுராமனும் பாலுவும் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தவர்கள், அவளாக விலகிக்கொள்வாள் என்று எதிர் பார்த்தார்கள்.

அவள் அப்படிச் செய்யாமல், கைகளால் வழியை அடைத்துக்கொண்டு, வாசல் மத்தியில் ஸ்டைலாக நின்று, 'எப்படிப் போவீங்க பார்ப்போம்!' என்று கிண்டலில் இறங்கினாள்.

சேது சும்மா சிரித்தபடி நின்றான்.

'ஏன் நிக்கிறே? இடிச்சுத் தள்ளிக்கிட்டுப் போயேன்!' என்று பாலு சொன்னான்.

அண்ணன் துணியவில்லை.

'ஊம். தம்பியாபுள்ளெ தான் வழி சொல்லித் தாருரே! போவது தானே?' என்று அத்தை அவனைக் குறும்புத்தனமாக நோக்கினாள்.

சேது தயங்கி நின்றது தம்பிக்குப் பிடிக்கவில்லை. 'பின்னே வழிமறிச்சான் சாமியாக் குறுக்கே நின்னால் வெளியே இருந்து வாறவங்க எப்படி உள்ளே போறதாம்?' என்று கேட்டு, அவளைப் பிடித்துத் தள்ளினான்.

அவள் வழிவிடாமல் மறித்து நிற்கப் போராடினாள். அவளுக்கு அது நல்ல தமாஷாக இருந்தது. 'ஏன் நீ சும்மா நிக்கிறே? நீயும் சேர்ந்து தள்ளிப்பாரேன்' என்று சிரித்தாள்.

பாலு அவள் கழுத்தில் விரல்களை லேசாக ஓடவிட்டுச் சீண்டவும், 'ஏஎய், கீச்சம் காட்டப்படாது. எனக்கு ரொம்பக் கூச்சமா இருக்கு' என்று கத்தினாள்.

'பின்னே வழி விடு!' என்று சிரித்துக் கொண்டே பாலு அதிகமாகக் கிசுகிசு மூட்டினான்.

அவள் நெளிந்து வளைந்து முரண்டினாள். சேது வேடிக்கை பார்த்தபடி நின்றான்.

'ஏய் என்ன கலாட்டா இது? ஏ பாலு, அவள் கூட உனக்கு என்ன விளையாட்டு?' என்ற அதட்டல் கேட்டதும்

தான், மூன்று பேரும் திடுக்கிட்டுப் பார்த்தனர். தெருவிலிருந்து படிகள்மீது ஏறி வந்து நின்ற சுப்பிரமணியனை அப்போதுதான் கவனித்தனர்.

கணவன் முகம் கடுகடுப்புற்றிருந்தது, 'என்னடா விளையாட்டு இது? அவள் கிட்டே என்ன வம்பு?' என்று உறுமினான் அவன்.

'நான் ஒண்ணும் விளையாடலே!' என்று கடுப்பாகப் பதிலளித்தான் பாலு.

'பின்னே அவளா உன்கூட விளையாட ஆசைப்படுறா? காலி ராஸ்கல்!' சுப்பிரமணியன் குரலில் உஷ்ணம் ஏறியது.

'அவள் ஏன் வழியை மறிச்சுக்கிட்டு நிற்கணுமாம்? நாங்க உள்ளே போகணும் என்றதும் அவள் விலகி வழி விட வேண்டியது தானே? போறதைப் பார்ப்போம்னு சவால் விட்டால்...'

சுப்பிரமணியனுக்கு என்னவோ ஆங்காரம். 'நீ சின்னப் பையனு லெட்சணமா இல்லையே. ஒரே அடியாத் துள்ளாதடே!' என்றான். 'அடக்கி வைக்கிறதுக்கு ஆள் இல்லேன்னு நினைச்சுக்கிடாதே தம்பி. நிதானமா நட' என்றும் எச்சரித்தான்.

பாலுவுக்கும் கோபம் எவ்வியது. 'நீரு பெரிய சூரருதான் தெரியுமே! முதல்லே உம்ம பெண்டாட்டியை அடக்கி வையும். அப்புறம் மற்றவங்களை அடக்குறதைப் பற்றி யோசிக்கலாம்' என்றான்.

கணவன் ஆத்திரத்தோடு அவனை அறைய விரைபவன் போல் நெருங்கினான். பாலுவும் விறைப்பாக முறைத்துக் கொண்டு நின்றான்.

சத்தம் கேட்டு அகிலாண்டம் வெளியே வந்தவள், 'பாலு இங்கே வா. நீ ஏன் சண்டைக்குப் போறே?' என்று சத்தம் போட்டாள். அண்டை வீடுகளில் உள்ள பலரும் உள் வாசலில் கூடிவிட்டார்கள்.

'நீங்க வீட்டுக்குப் போங்க. சின்னப் பையனோடு உங்களுக்கு என்ன பேச்சு?' என்று ஒருவர் சுப்பிரமணிய னிடம் சொன்னார்.

அவனோ விலகாமல், 'சின்னப் பையனாகவா இவன் நடந்துகொள்கிறான்? பெரிய பொம்பிளையிடம் இவனுக்கு என்ன விளையாட்டு?' என்று சீறினான்.

பாலு பயந்துவிட வில்லை. 'பெரியவள் பெரிய மனுஷி மாதிரி நடந்துகொண்டால் ஏன் வம்புதும்பு வரப்போகுது?' என்றான்.

'அவள் உன்னோடு விளையாட வந்தாள்னுடா சொல்றே?'

பாலு எக்காளமாகச் சிரித்தான். 'நான் யார் கூடவும் விளையாடணும்னு ஏங்கி நிற்கலே. தெரிந்து கொள்ளும். அவள் இஷ்டம்போல விளையாடட்டும்னு தான் நீரு தினம் ஊச்சரம்மா வீட்டுக்கு அனுப்பி வைக்கீரே! அங்கே தான் விளையாட்டுத் தோழன் காத்திருக்கானே. அவன் கிட்டேப் போயி முறைக்கப்படாது?' என்றான், படபடப்பாக.

'என்னடா சொல்றே?' என்று ஓங்கி அவன் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தான் சுப்பிரமணியன்.

'சீ, நீயும் ஒரு மனுசனா! ரோஷமுள்ள புருசன் மாதிரி...' என்று கூறி, பாலு அவன் மூஞ்சியில் ஒரு குத்து விட்டான்.

சுந்தரம், 'ஐயோ, நீங்க சும்மா போங்களேன்!' என்று கணவன் கையைப் பிடித்து இழுத்து விலக்கினாள்.

வேறு ஒருவர், 'போ தம்பி, நீ வீட்டுக்குப் போ!' என்று பாலுவை அழைத்துக்கொண்டு போனார்.

'சின்னப்பயல்கூட உனக்கென்ன பேச்சு? நீ ஒழுங்கா உன் வேலைகளைக் கவனித்துக்கொண்டு போகாமல்? இப்போ பெரிய வெட்கக்கேடு ஆச்சு!' என்று முணுமுணுத்தபடி தன் வீட்டுக்குப் போனான் சுப்பிரமணியன்.

சுந்தரம் 'நல்ல பிள்ளைமாதிரி' அவன் பின்னாலே போனாள்.

சுந்தரத்தை சந்தேகிக்க ஆரம்பித்தான் அவள் கணவன்.

'அந்தப் பயல் என்னவோ சொல்றுனே? டீச்சர் வீட்டிலே யாரு இருக்கா?' என்று அவன் அவளிடம் விசாரித்த போது, 'அவன் கோபத்திலே உளறுகிறுன். அதைக் கேட்டுக் கிட்டு நீங்களும்...' என்று மழுப்பிவிட்டாள்.

அவன் குணம் அவளுக்குத் தெரியாதா? அவனை எப்படிச் சாந்தப்படுத்தவேண்டும், எவ்வாறு சந்தோஷத்தில் தன்னை மறந்துபோகும்படி பண்ணவேண்டும் என்பதை எல்லாம் அவள் அறியமாட்டாளா என்ன? அக் கலைகள் அனைத்தையும் கையாண்டு அவனைக் கிறங்க வைப்பதில் வெற்றி கண்டாள்.

மதனி வீட்டுப் பக்கம் அடி எடுத்து வைப்பதை சுந்தரம் விட்டுவிட்டாள். அந்த வீட்டுப் பையன்கள் இரண்டு பேரை யும் பார்த்தாலும் பார்க்காததுபோல் தலைகுனிந்து விலகிச் சென்றுள். தினசரி தவருது டீச்சர் வீட்டுக்குப்போய் வந்து கொண்டுதான் இருந்தாள். ஒரு நாள் அசந்தர்ப்பமாக நிகழ்ந்துவிட்ட சிறு விஷயத்தைக் கணவன் மறந்து போனுன் என்று அவள் கருதினுள்.

அவனும் மறந்துவிடக் கூடியவன்தான். ஆனுல் அவனை அப்படி மறக்கும்படி விட்டுவிடக்கூடாது என்று காலம் கருத்தில் கொண்டதுபோல் சந்தர்ப்பங்கள் தோன்றலாயின.

ஒரு நாள் சுப்பிரமணியனும் அவனுக்குத் தெரிந்தவர் ஒருவரும் ஓட்டலில் காபி சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து ரோட்டில் நின்றுர்கள். அப்போது ஸ்கூட்டர் ஒன்று வேக மாக வந்து அவர்கள் பக்கத்தில் நின்றது. அதை விட்டிறங்கிய இளைஞன் ஜம்மென்று மிடுக்கு நடை நடந்து ஓட்டலுக்குள் போனுன்.

'இவனைத் தெரியுமா உங்களுக்கு?' என்று நண்பர் கேட்டார்.

'தெரியாதே. யாரு?' என்று சும்மா கேட்டுவைத்தான் அவன்.

'மாப்பிள்ளைக்காளை! வேலை எதுவும் இல்லாமல் ஜாலி பண்ணிக்கிட்டுத் திரிகிற ஷோக் மைனர். இவன் அக்கா டீச்சர் வேலை பார்த்துச் சம்பாதிக்கிறு. அக்காளுக்குத் தெரிஞ்ச பொண்ணுகளுக்கு ஆசைகாட்டி, ஏமாற்றி, விளையாடி வாழ்கிறுன் இவன்...'

அவர் இயல்பாகச் சொல்லிக்கொண்டிருந்தார். சுப்பிரமணியன் முகம் கறுத்தது. பாலு சொன்ன வார்த்தைகள் இப்போது அவன் காதுக்குள் 'நொணநொண' என்று மொய்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. சுந்தரத்தைப் பற்றி இந்த ஆளுக்கு ஏதாவது தெரிந்திருக்குமோ என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று.

அவர் பிறகு அதையும் இதையும் பேசிவிட்டுப் பிரிந்து போனுர். சுப்பிரமணியன் குழம்பும் உள்ளத்தோடு தன் வழியே போனுன். அன்று அவன் சுந்தரத்திடம் எதுவும் கேட்கவில்லை.

எனினும், அவளை, அவள் முகத்தை, அடிக்கடி ஒரு மாதிரியாகக் கவனித்தான். அவள் வழக்கம்போல் சிரிப்பும் வேடிக்கைப் பேச்சும் பிரியமுமாகத்தான் அவனிடம் பழகினுள். 'பெண்களால் ரொம்ப சாமர்த்தியமாக ஏமாற்றவும் முடியுமோ?' என்று குறுகுறுத்தது அவன் மனம். அவளைப் பற்றித் தவருக முடிவுகட்டவும் மனம் இடம்கொடுக்கவில்லை.

வேருெரு நாள் சாயங்காலம் அவன் ஒரு முக்கிய அலுவலைக் கவனித்துவிட்டுத் திரும்புகிறபோது சினிமா தியேட்டர் ஒன்றின் அருகே வர நேர்ந்தது. அப்போதுதான் 'மாட்டினி காட்சி' முடிந்து, கும்பல் வெளியேறிக்கொண்டிருந்தது. அதை வேடிக்கையாகப் பார்த்து நின்ற அவன் பார்வையை உறுத்தியது ஒரு காட்சி.

வெளியே மெதுவாக வந்த ஸ்கூட்டர் ஒன்றில் ஒரு வாலிபன். அன்ருெரு நாள் ஓட்டலருகில் பார்க்க நேர்ந்ததே, அவனேதான். அவன் பின்னுல், அவன் தோள்களில் கை பதித்து, அவன் முதுகில் சாய்ந்தவாறு, சிரித்தபடி காட்சி அளிப்பது?

சுப்பிரமணியனுக்கு உள்ளமும் உடலும் கொதிப்புற்றது. எதிர்பாராத விதத்தில் யாரோ பலமாக மூஞ்சியில் தாக்கியதுபோலிருந்தது. அப்படியே பாய்ந்து அவளைப் பற்றி இழுத்துத் தெருவில் தள்ளி மிதிமிதி என்று மிதிக்கவேண்டும் போல் ஒரு வெறி அவனைத் தகித்தது. பெரிய கல்லை எடுத்தாவது அவர்கள்மீது வீசி எறியவேண்டும் என்று தோன்றியது.

ஆனாலும், சுந்தரம் இன்னொருவன்மீது சாய்ந்து தோள்களைப்பற்றிச் சிரித்துப் பேசிக்கொண்டு போவதை அவன் கண்ணால் கண்டு வெறும் சிலையென நிற்கத்தான் முடிந்தது.

'அன்றைக்கு அந்தப் பயல் சொன்னது சரிதான். நான் தானே இவளை அனுப்பி வைத்தேன். இப்போது எனக்குக் கோபம் வந்து என்ன செய்ய?' சுடும் அனல் மூச்சைப் பெரிதாய் வெளியே தள்ளியது அவன் நெஞ்சு.

திடீரென அவன் ஒரு முடிவுக்கு வந்தான். சைக்கிளில் ஏறி நேரே வீடு சேர்ந்தான். அவளுக்கு முந்தி வந்து விட்டான். ஆகவே காத்திருந்தான்.

மாலை ஆறரை மணிக்குச் சுந்தரம் வந்தாள்.

'சினிமா பார்த்துவிட்டு, அவனோடு சேர்ந்து ஓட்டலில் தின்றுவிட்டு, ஜாலியாக வாறாப்போல' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

அவள் படித்துவிட்டு வருவதுபோல்தான் வந்தாள். உள்ளத்தின் குதூகலம் நடையிலே பிரதிபலிக்கும்படி குதித்துக்கொண்டே வந்தாள். அவனை அவ்வேளையில் வீட்டில் எதிர்பாராததால் அவளுக்கு ஒரு திகைப்பு. 'என்ன இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம்?' என்றாள்.

'ஏன், வரக்கூடாதோ?' என்று குத்தலாகக் கேட்டான் அவன். 'நீ இப்பதான் படிப்பு முடிஞ்சு வாறியாக்கும்?'

'ஊம்ம்' என்று குயில் குரல் இசைத்துக் கோல மயில் போல் கழுத்தசைத்தாள் அவள். 'கொஞ்ச நேரம் இருங்க. காப்பிபோட்டுத் தாரேன்' என்றாள்.

அவளையே வைத்தகண் வாங்காமல் உற்று நோக்கிக் கொண்டிருந்தான் அவன். என்ன பாசாங்கு! எவ்வளவு ஏமாற்று! மனக் குமுறலை அடக்கிக்கொண்டு, 'அந்தக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு இப்படி வா!' என்றான்.

அவளுக்கு வெட்கம் வந்தது. அவன் நோக்கத்தை அவள் தவறாகப் புரிந்துகொண்டு, 'சீ, இந்த நேரத்திலா? அந்தி வேளையிலே கதவை அடைத்துக்கொண்டு இருந்தால் அக்கம் பக்கத்திலே உள்ளவங்க என்ன நினைக்கமாட்டாங்க?' என்று முணுமுணுத்தாள்.

அவன் வேகமாக எழுந்துபோய் முன்கதவை அடைத்துத் தாழிட்டுவிட்டு வந்தான். 'பட்டப் பகலில் எவனோ ஒரு தடியன் மேலே சாய்ந்து சிரிச்சுப் பேசி, கொஞ்சிக்கிட்டுப் போகையிலே, மற்றவங்க ஒண்ணும் நினைக்கமாட்டாங் களோ?' என்று உறுமிக்கொண்டு வெறிநாய் மாதிரி அவளை அணுகினான்.

ஆசை முற்றிய ஆர்வ அணைப்புக்குத்தான் அடிபோடு கிறான் என்று நாணி எதிர்பார்த்து நின்ற அவளுக்கு அவன் பேச்சு சூட்டுக்கோலின் தீண்டுதல் போலிருந்தது. அவள் பதறிப் பயந்து அவனைப் பார்த்தாள்.

தயாராக மறைத்து வைத்திருந்த நீண்ட சவுக்கை எடுத்துச் சொடுக்கினான் அவன்.

அவள் நடுநடுங்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள். 'நான் தப்பா ஒண்ணும் நடக்கலே. அவருகூட சினிமா பார்க்கப் போயிருந்தேன். ஒருபோதும்நான் ஒரு பாவமும் செய்யலே!' என்று அபலைச் சிறுமிபோல் அலறினாள்.

அவனுக்கு வெறி. அவளுக்கு எவ்வளவோ சுதந்திரம் கொடுத்து, அவள் இஷ்டங்களை எல்லாம் அவள் மனம் திருப்தி அடையும்படியாக நிறைவேற்றி வந்தும், தன்னை அவள் ஏமாற்றி வஞ்சித்து அதில் சந்தோஷமும் அடைகிறாள் என்று.

'இந்தப் படிப்புப் படிக்கத்தான் உன்னை டீச்சர் வீட்டுக்கு நான் அனுப்பினேனே?' என்று கூப்பாடு போட்டான். அது அவன் குரலாகவே ஒலிக்கவில்லை.

'என்னை மன்னிச்சிடுங்க. நான் தெரியாமல்...' அவள் நெஞ்சைத் தொடும் குரலில் கெஞ்சி, பரிதாபகரமாக அவன் முகத்தைப் பார்த்தாள். அவளறிந்த, அவளிடம் அன்பும் ஆசையும்கொண்டு நெருங்கக்கூடிய, அவன் முகமாகவே இல்லை அது.

'என்னை நீ ஏமாற்றிப்போட்டே. என்னை அசடன்னு நினைச்சுப் போட்டே. இளிச்சவாயன்னு எண்ணிப்போட்டே. அப்பாவின்னு, முட்டான்னு நினைச்சிட்டே. நான் எப்படிப் பட்டவன்னு தெரிஞ்சுக்கோ!' என்று மந்திரம்போல் உச்சரித்து, சொல்லுக்குச் சொல் அர்ச்சனை மாதிரி சவுக்கைச் சுழட்டி அடித்தான். முதுகு, கால், கை, முகம், உடம்பின் பல பகுதிகளிலும்—அடி எங்கே விழுகிறது என்ற கவலை இல்லாமல்—ஈவு இரக்கமற்று அடித்தான்.

அவள் அழுது அரற்றினாள். ஓவெனக் கூப்பாடு போட்டு, வலி தாங்க முடியாது துடித்தாள். சுருண்டு கீழே விழுந்தாள்.

'பாவி அவளைக் கொல்லுதானே! ஐயோ, பாவம்... கதவடைச்சிக்கிட்டு அடிச்சுக் கொல்லுதானே!' என்று பக்கத்து வீட்டுப் பெண்கள் எல்லோரும் அவ்வீட்டின்முன் கூடிவிட்டார்கள். 'கதவைத் திறங்கய்யா, ஏன் இப்படி அடிக்கீங்க?' என்று கத்தி, கதவைத் தட்டினார்கள் சிலர். சில பேர் ஜன்னல் வழியாய் உள்ளே பார்த்துப் பரிதவித்தார்கள்.

'ஐய்யய்யோ, சுந்தரத்தைக் கொளுத்தப்போறாரு. அதோ தீப்பெட்டியை எடுத்துக் குச்சியைக் கிழிக்காரு!' என்று ஒருத்தி கூவினாள்.

மற்றவர்கள் கதவைத் தட்டுதட்டென்று தட்டினார்கள்.

அவன் எரிச்சலுடன் முன் பக்கம் வந்து 'இந்தா பாருங்க, இது என் சொந்த விஷயம். அவ ஒண்ணும் செத்துப் போக மாட்டா. நான் கொல்லப் போறதுமில்லே' என்று வறண்ட குரலில் பேசிவிட்டு உள்ளே போனான்.

அவளுடைய புத்தகங்கள் நோட்டு வகையராவை எல்லாம் எடுத்துக் குவித்து வைத்து, தீ மூட்டினான். திகுதிகு வென்று நெருப்பு பற்றி எரிந்தது. அவனையும், விழுந்து கிடக்கும் அவளையும், அந்த அறையையும் பிரகாசமாய் எடுத்துக்காட்டியது. தீயை ஒருவித திருப்தியோடு பார்த்துக் கொண்டிருந்த அவன் சொன்னான்:

'நீ நல்லா வரணுமின்னு உனக்குப் படிப்புச் சொல்லித் தர ஆசைப்பட்டேன். படிப்பு ரொம்ப நல்லது. ஆனால் அதன் பேரைச் சொல்லிக்கொண்டு, தங்கள் பலவீனங்களை அடக்கித் திருத்தமுடியாமல் மனம்போன போக்கிலே அலையத் துணிகிறாங்க பல பேரு. அவங்க தங்க பேரையும், நாகரிகத் தின் பேரையும், படிப்புப் பேரையும் கெடுத்துப் போடுறாங்க. நீயும் அந்த இனத்தைச் சேர்ந்தவதான் போலிருக்கு. உன்னை அப்படிப் போகவிடமாட்டேன். ஆமா, இனிமேல் உனக்குப் படிப்பும் வேண்டாம், முற்றிய நாகரிகமும் வேண்டாம். ஒழுங்கா, நல்ல பெண்ணா, இந்த வீட்டுக்குள்ளேயே இரு. இனி நீ தப்பு தண்டாவுக்குப் போனியோ, உன் கழுத்திலே சுருக்குமாட்டி உத்தரக் கட்டையிலே தொங்கவிட்டுப் போலீஸ்லே போய் ஆஜராகிவிடுவேன். நான் ஜெயிலுக்குப் போகப் பயப்படமாட்டேன். இதை நினைவிலே வச்சுக்கோ!.

பிறகு அவன் எழுந்து, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். தன் பசி தணிந்து, வெறிக்குணம் குறைந்து வருகிற ஒரு ஓநாயைப் பார்ப்பதுபோல், அவனைக் கண்டு அஞ்சி ஒதுங்கினார்கள் வெளியே நின்றவர்கள்.

அவர்களைக் கவனியாதவனாய், அழுதுகொண்டு கிடக்கும் சுந்தரத்தின் மேனியில் தாறுமாறாகப் பதிந்து ரத்தம் கசிந்த வாறு காணப்படும் கசையடித் தழும்புகளைப் பார்த்து அவர் கள் அவனைச் சொல்லாலும் வசவுகளாலும் குத்திக் குதறிப் பிய்க்கப் போவது குறித்து எவ்விதமான எண்ணமும் கொள்ளாதவனாய், தன் வழியே நடந்தான் சுப்பிரமணியன். 'இனிமேல் நம்ம சுந்தரம் தங்கக் கம்பியாக நடந்துகொள் வாள். நாம இழுக்கிற இழுப்புக்கெல்லாம் இழைந்து கொடுப்

பாள்!' என்ற வெற்றிக் களிப்பு அவன் நெஞ்சில் நிறைந்து நின்றது.

சுந்தரம் துவண்டு கிடந்து கண்ணீர் வடித்தாள். தனக்குக் கடுமையான தண்டனை அளித்த கணவன்மீது வெறுப்புக்கொள்ளவோ, கோபம்கொள்ளவோ திராணி யற்றுக் கிடந்தாள் அவள்.

அவளைச் சுற்றியிருந்த பெண்கள் ஆளுக்கு ஒன்ருய், பலப்பல பேசினர்கள். அவளுக்கு இதமாக இருக்கும் சிகிச்சைகள் செய்தார்கள்.

அகிலாண்டத்தம்மாள் அவளுக்காகக் கண்ணீர் சிந்தினள். 'அடி பாவிப் பெண்ணே! நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே, கேட்டியா? அடக்கம் ஒடுக்கமா இருஇரு இன்னு ஆயிரம்தரம் சொன்னேனே!' என்று புலம்பினள்.

'இப்படி எல்லாம் நடப்பது குற்றமா?' என்று கேட்டுக் கலகலவெனச் சிரித்துக் குதிக்கும் பழக்கத்தை வளர்த்து வந்த சுந்தரம் இப்போது வெறும் சிரிப்புச் சிரிக்கக்கூடத் தெம்பு இல்லாதவளாய்ச் சுருண்டு கிடந்தாள்.

'தீபம்', ஜுலை 1968

# மன்னிக்கத் தெரியாதவர்

'மன்னிப்பு என்பதே மகராஜபிள்ளை அகராதியில் கிடையாது!'

இப்படி அடிக்கடி உறுதியான குரலில் அறிவிப்பார் மகராஜபிள்ளை. அவர் பெரிய மனிதர். உருவம், அந்தஸ்து, செயல், தோரணை முதலிய சகல அம்சங்களிலும்தான்.

'மன்னித்தால், பலரும் திரும்பத் திரும்பக் குற்றம் செய்து கொண்டேயிருப்பார்கள், முதல் தடவையே சரியான படி புத்தி கற்பித்துவிட்டால் ஒழுங்காக வழிக்கு வந்துவிடு வார்கள். அடி உதை உதவுகிறமாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டான்னு சும்மாவா சொல்லியிருக்கிறுங்க?' என்று வேறு விளக்கம் கூறுவார் அவர்.

'குற்றம் செய்வது மனித சுபாவம். குற்றமே செய்யாமல் யாரும் இருந்துவிட முடியாது. மன்னிப்பது பெருந்தன்மை. மன்னிப்பது தெய்வத்தன்மை பெற்றது என்று கூடத்தான் சொல்லிவைத்திருக்கிறுர்கள்' என்று ஒருசிலர் பிள்ளை அவர் களோடு வாயாடிப் பார்த்ததும் உண்டு.

அப்போதெல்லாம் அவர் அலட்சியமாக ஒரு சிரிப்பைச் சிதறுவார். 'மகராஜபிள்ளையும் மனிதன்தான். அவர் தேவனே, தேவகுமாரனே அல்ல. சிறுமைச் செயல்கள் புரிகிற மனிதர்களுக்கு, அவர்களுக்குப் புரிகிற வழிவகை களிலேயே பாடங்கற்பித்து, அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்வதுதான் என்னுடைய நோக்கம்' என்று, பிறர் வாயடைத்துப் போகும்படி பேசுவார்.

அவரிடம் யார் என்ன சொன்னாலும் பேச்சு எடுபடாது. இதை அவருக்கு வேண்டியவர்கள், தெரிந்தவர்கள், சொந்தக் காரர்கள், ஊர்க்காரர்கள் எல்லோருமே அனுபவபூர்வமாக

அறிந்துகொண்டிருந்தார்கள். அதற்காக அவர்மீது அவர்கள் வருத்தமோ கோபமோ கொள்வதும் இல்லை. மாறாக, பிள்ளை அவர்களிடம் மற்றவர்களுக்கிருந்த மதிப்பும் மரியாதையும், ஒருவித பயமும் பக்தியும்தான் அதிகரித்து வந்தன.

'நம்ம ஊருக்கு மகராஜபிள்ளை மாதிரி ஒரு ஆளு வேண்டியதுதான். இல்லேன்னு சொன்னா, ஊரு ஊராக இருக்காது. முரட்டுப்பய லுகளும் போக்கிரிகளும் எத்துவாளிப் பயலுகளும் நம்ம எல்லார் தலையிலும் மிளகு அரைச்சு, ஊரைச்சுருட்டி விழுங்கிப் போடுவானுக!' என்று சிலபேர் பெருமையாகப் பேசிக்கொள்வதும் உண்டு.

'மகராஜபிள்ளை போலீஸ்லே சேர்ந்திருக்க வேண்டிய ஆளு. அவரு மீசையும் உருட்டி முழிக்கிற கண்களும் அவர் வளர்த்தியும்—இதுகளைப் பார்த்ததுமே அரண்டு போயிரு வானுகளே குத்தம் செய்தவனுக. அவர் அதட்டல் போட்டாலே போதும், நடுங்கிச் செத்துப்போவான் திருடன். அப்புறம் இருக்கவே இருக்கு, அடி உதை, தூணிலே புடிச்சுக் கட்டு என்கிறதெல்லாம். அவருடைய திறமைக்கும் மிடுக்குக்கும், அவரு போலீஸ் இலாகாவிலே பெரிய பதவியை சுலபமா எட்டிப்பிடிச்சிர முடியும்' என்று சில தம்பியா பிள்ளைகள் அந்த அண்ணச்சியின் புரவோலத்தைப் புலம்பி மகிழ்வார்கள்.

அதைத் தொடர்ந்து, 'உங்களுக்கு நினைவிருக்குதா? அந்தத் திருட்டிலே அப்படித்தானே நடந்தது? இந்தத் தீ வைப்புக் கேஸ்லே அவுக என்ன செய்தாக தெரியாது?' என்ற ரீதியில் சுவையான விஷயங்கள் அடிபடும்.

அவர்கள் மறக்கமுடியாத—யாருமே மறக்க விரும்பாத—முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று தெற்குத் தெரு வேலுப்பிள்ளை வீட்டில் களவுபோன சங்கதி.

அது நடந்து எத்தனையோ வருஷங்கள் ஓடி மறைந் திருந்தன. என்றாலும், இப்போதுதான் நிகழ்ந்ததுபோல பலருக்கும் நினைவில் நின்றது.

ஒருநாள், பொழுது நன்றாகப் புலரவில்லை. 'ஐயோ! கரிமுடிஞ்சு போவான், குடியைக் கெடுத்தானே, எந்தப் பாவி எத்தனை நாள் காத்திருந்து இந்த மாதிரிச் செஞ் சானே!' என்ற ஓலம் தெற்குத் தெரு மூலையில் எழுந்தது. தொடர்ந்து 'கூ கூ, ஓ' என்று தெளிவில்லாமல் இரைச்சல் களும், திமுதிமுவென ஓடுகிற காலடி ஓசையும் கேட்கலாயின. மகராஜபிள்ளை திடுக்கிட்டுக் கண்விழித்து, கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'என்ன நடந்துவிட்டது இப்போ?' என்று அவர் மனம் கேட்டுக்கொண்டது.

அவர் பதிலைத் தேடவில்லை. விளக்கம் தானாகவே அவரைத் தேடி வந்தது. வேலுப்பிள்ளை உருவத்தில். பார்க்கப் பரிதாபமாக இருந்தது அவன் தோற்றம். அவன் பிள்ளை காலில் வந்து விழுந்தான். 'போச்சு. எல்லாம் போச்சு. கைப்பெட்டி, சேர்த்துவச்ச பணம், அவள் நகை நட்டு எல்லாம் போயிட்டுதே. நான் என்ன செய்வேன்?' என்று அலறினான். 'நீங்கதான் காப்பாத்தணும். நீங்க மனசு வச்சால் திருட்டுப்பய எப்படியும் அகப்பட்டுவிடுவான்' என்று கெஞ்சினான்.

பிள்ளை ஒன்றும் பேசாமல் இருந்தார். அவர் கண்கள் ஜிவுஜிவு என்று கனன்று ஜொலித்தன. 'ஏய் வேலு!' என்று ஒரு அதட்டல் போட்டார். 'இது என்ன பொட்டச்சி மாதிரி? இது எனக்குப் பிடிக்காது' என உறுமினார்.

வேலுப்பிள்ளை அஞ்சி விலகினான். எழுந்து கையைக் கட்டிக்கொண்டு நின்றான். அவன் மனைவி அகிலாண்டம், 'சித்தப்பா, நீங்க இருக்கிற ஊரிலேயே, உங்க கண் முன்னாலேயே இப்படி நடக்கலாமா?' என்று அழுது அரற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

'ஏ அகிலு, பேசாம வீட்டுக்குப் போ. இப்ப யாரு செத்துப் போனாயின்னு லபோ லபோங்கிறே!' என்று அவளை அதட்டினார் பிள்ளை.

'வயிறு எரியுதே சித்தப்பா. என் நகை ஒண்ணு பாக்கி யில்லாம...' என்று அவள் ஆரம்பிக்கவும், 'சரிசரி. இப்படி

அழுது புலம்பினால், போனது வந்திருமா?' என்று சத்தம் போட்டு அவளை அடக்கினார் மகராஜபிள்ளை.

ஒரு ஆளைப் பார்த்து, 'தலைமைக்காரத் தேவரைக் கூட்டிவாரும். கூடவே பாண்டித் தேவரு பெருமாள் தேவரு ரெண்டுபேரையும் வரச்சொல்லும். இப்பவே வரும்படி சொல்லும்' என்று உத்தரவிட்டார் பிள்ளை.

பின்பும் அவர் பரபரப்போ பதட்டமோ கொள்ளவில்லை. சாவகாசமாக வெற்றிலைச் செல்லத்தை வைத்துக்கொண்டு வெற்றிலை போடுவதில் ஈடுபட்டார். நேரம் கட்டித் தொங்க விடப்பட்டதுபோல் கனத்துத் தோன்றியது மற்றவர்களுக்கு. பிள்ளையோ எதையுமே உணர்ந்ததாகத் தோன்றவில்லை.

மகராஜபிள்ளை கூப்பிட்டு ஆள் அனுப்பியிருக்கிறார் என்றால், மறுப்புரை கூறவோ வாய்தா சொல்லவோ துணிவு பெற்ற நபர் மறக்குடியில்கூட இருந்ததில்லை. தலைமைக்காரத் தேவர் என்ற பட்டம் பெற்ற வெள்ளையத் தேவர், பணபலம் பெற்றிருந்த பாண்டித் தேவர், அசாத்தியத் துணிவும் உடல் வலிமையும் கொண்டிருந்த பெருமாள் தேவர், இன்னும் இரண்டு பேர் எல்லோருமாக என்னவோ ஏதோ என்று, பதைபதைப்போடு வந்து சேர்ந்தார்கள்.

தெரு முனையில் வருகிறபோதே, தோளில் கிடந்த துண்டை இறக்கிக் கையில் தொங்கவிட்டவாறு வந்தார்கள். 'எசமான் கும்பிடுகிறோம்' என்று மரியாதையாக வந்து வணங்கினார்கள்.

'உம்' என்று தலை அசைத்தார் பிள்ளை. 'வாங்க தேவர்களே! இப்படி பெஞ்சிலே உட்காருவதுதானே!' என்று சொன்னார். அக்குரலில் தொனித்த குத்தலும் கிண்டலும் வந்தவர்களை லேசாக ஒரு ஆட்டு ஆட்டின. 'என்ன எசமான் நீங்க...' என்று மென்று விழுங்கினார் தலைமைத் தேவர்.

'ஊரிலே தேவமாரு ராச்சியம்தானே நடக்குது! உங்க கொடிகட்டி உயரப் பறக்கையிலே, நான் உங்களுக்கு உரிய

மரியாதை கொடுக்கவேண்டாமா?' என்று எக்காளமாகப் பேசினார் பிள்ளை.

'எசமான் என்னமோ தப்பாக எண்ணிக்கொண்டு...'

தேவரைப் பேசவிடவில்லை பிள்ளை.

'தப்போ சரியோ எனக்குத் தெரியாது. ஊருக்குள்ளே புகுந்து, திருடிக்கொண்டு போகணுமின்னால், உங்க ஆள் களுக்கு என்ன நெஞ்சழுத்தமும் தைரியமும் இருக்கணும்? அதை நீங்களும் விட்டுத்தானே வைச்சிருக்கிறீங்க? இதைக் கேட்கத்தான் உங்களை வரவழைத்தேன்...' என்று சொன்னார். அமைதியாகத்தான் பேசினார் அவர்.

'எங்க ஆளுக இதைச் செய்திருக்க மாட்டானுக, அசலூர்க்காரனுக எவனாவது...' என்று பாண்டித் தேவர் வாய்திறந்தார்.

'தேவரே, என் காது முன்னாலேயே குத்தித்தான் இருக்குது. இப்ப நீரு வந்து காது குத்துற வேலையை எடுக்க வேண்டாம். உள்ளூர் பூனையின் ஒத்துக்கை இல்லாமே அசலூர் ஆனை வந்து இங்கே வாலாட்டிவிடுமோ? என்னவே போட்டுப் பேசுதேரு!' என்று சொல்லிச் சிரித்தார் பிள்ளை.

தேவர்கள் ஆளுக்கு ஒன்றாகச் சமாதானம் சொல்ல முயன்றார்கள். மகராஜபிள்ளையிடமா எடுபடும்?

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போ மணி என்ன? ஆறு ஆகுதா? சரி, ஆறு மணி நேரம் தாறேன். மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குள்ளே கைப்பெட்டி வந்துசேரணும். பணம், நகை எல்லாம் அப்படியே திரும்பி வந்திரணும். தெரிஞ்சுதா? இல்லே, அப்புறம் நடக்கிறதுக்கு என் மேலே குறை சொல்லிப் பயனிராது. ஆமா. மறக்குடி பூராவும் தீப்பிடிச்சு எரியும்படியா, செவலைக் காளையை ஏவி விடுவேன். அதுமட்டுமில்லே, மறத்தி ஒருத்தி கழுத்திலாவது தங்க நகை இருக்காது அப்புறம். மகராஜபிள்ளை எப்படியாப் பட்ட ஆளு என்கிறது புதுக்குடித் தேவமார்களுக்குச் சொல்லியா தெரியணும்? உம். போயிட்டு வாங்க' என்று

அனுப்பிவைத்தார். வேலுப்பிள்ளையையும் மற்றவர்களையும் அமைதியாக இருக்கும்படி கூறி அவரவர் வீட்டுக்குப் போகச் சொன்னார் பிள்ளை.

வேலு வீட்டில் போய் முடங்கிக் கிடந்தான். அவன் மனைவி அழுது மூக்கைச் சிந்திப் போட்டபடி கிடந்தாள். அவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையே அடியோடு நாசமாகி விட்டது என்ற குமைதல்.

'போனது போனதுதான். திருட்டுப்போன பொருள் எங்காவது திரும்பி வருமா?' என்று மற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

மகராஜபிள்ளைக்கு நிச்சயமாகத் தெரியும், எல்லாம் வந்து விடும் என்று. அதனால், அருமையான விருந்துச் சாப்பாடு தயார் செய்யும்படி ஏற்பாடு பண்ணினார்.

மணி பன்னிரண்டு அடிக்கவில்லை. தேவமார்கள் வந்தார்கள். ஒருவன் தலைமீது கைப்பெட்டியும் வந்தது. அது நனைந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது.

'அம்மன் கோயில் பாழுங்கிணத்துக்குள்ளே கிடந்தது பெட்டி. உள்ளே இறங்கி, தண்ணியிலே அமுக்கி வச்சு, மேலே பாரத்துக்காக ஒரு பெரிய கல்லையும் தூக்கி வச்சிருந்திருக்கான். வேத்தாளு வேலைதான் எசமான்...' என்று தலைமைத் தேவர் சொன்னார்.

'தேவரே, அசலு ஆளோ, வேற்றாளோ? உள்ளூர் ஆளோ! நீரும் பாண்டித் தேவரும் பெருமாள் தேவரும் செயலாக இருக்கிற இடத்திலேயே இப்படி ஒரு அவப்பேரு ஏற்படலாமா? போகுது. உங்க பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றிவிட்டீங்க!' என்று பாராட்டினார்.

வேலுப்பிள்ளையும் அகிலாண்டமும் இன்னும் எத்தனையோ பேரும் இதற்குள் அங்கே வந்துவிட்டார்கள். எல்லோருக்கும் 'இது கலிகால அதிசயம்' என்றே தோன்றியது. 'பிள்ளை வீட்டில் இருந்தபடியே சாதித்துவிட்டாரே!' என்பதில் பெரும் வியப்பு.

பிள்ளை உத்திரவிடவும், வேலு பெட்டியைத் திறந்து பரிசோதித்தான். எல்லாம் சரியாக இருந்தன. ஒரு திருகாணி, ஒரு தம்பிடிக்காசு கூடக் குறையவில்லை.

'நீங்கதான் எனக்கு வாழ்வு தந்தீங்க' என்று நன்றி உணர்வோடு, பேச்சு தழுதழுக்க, கண்ணீர் வடிய, வேலு அவர் முன் விழுந்து கும்பிட்டான்.

'சித்தப்பா, நீங்கதான் எங்க வீட்டிலே விளக்கேத்தி வைத்த தெய்வம்' என்று அகிலாண்டமும் கீழே விழுந்து வணங்கினுள்.

'சேச்சே, என்ன இது! இதெல்லாம்தான் எனக்குப் பிடிக்காது' என்று சிடுசிடுத்தார் பிள்ளை.

தேவமார்கள் 'எங்களுக்கு உத்திரவு கொடுங்க' என்று ஆரம்பித்தார்கள்.

'நீங்க விடியக்காலையிலிருந்து எதுவும் சாப்பிடலேன்னு தெரியுது. உங்க முகமே சொல்லுதே. எல்லாரும் சாப்பிட்டு விட்டுப் போங்க' என்றுர் பிள்ளை.

தேவர்கள் தயங்கினுர்கள். வேண்டாம் என்றுர்கள்.

'இலைபோட்டாச்சு, உட்காருங்க' என்று சமையல் காரன் உபசரித்தான்.

'நமக்குள்ளே சண்டையா கட்சியா? நீங்க நம்ம வீட்டிலே ஏன் சாப்பிடக் கூடாது?' என்று உரிமையோடு பேசி, அவர் களுக்கு வயிறு நிறையச் சோறு போட்டு, வெற்றிலைபாக்கும் கொடுத்து அனுப்பிவைத்தார் அவர்.

மகராஜபிள்ளை முரட்டுப் பேர்வழி. என்றுலும், சமயம் வந்தால் குழந்தைபோல் உறவுகொண்டாடி மகிழவும் தயங்கமாட்டார். எந்தச் சமயத்தில் அவர் எப்படி நடந்து கொள்வார் என்று எவராலும் நிதானிக்க முடியாது. அவருக்கு அவரே ராஜா.

அவர் தாமே சொல்வதுபோல், 'நம்பினபேருக்கு நடராஜா, நம்பாத பேருக்கு எமராஜா!'

அது ஒரு காலம்.

'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவர் வீட்டு அம்மியையும் உடைக்கும்' என்று சொல்லுவார்கள். அதிகாரத்துக்கும், அந்தஸ்துக்கும், குலப்பெருமைக்கும், பணத்துக்கும் அப்படித் தனி மதிப்பும், விசேஷ சலுகைகளும் இருந்த காலம் அது.

மக்கள் மத்தியில் பயமும், அறிவின்மையும், அடிமைப் புத்தியும், பெரிய தனத்தை—அதிகாரத்தை—தடலடித்தனத்தைக் கண்டு பணிந்து போகிற சுபாவமும் இயல்புகளாக வேரூன்றியிருந்த காலம் அது.

போலீஸ் இலாகாவினர் மட்டுமல்லாது, சர்க்கார் உத்தியோகஸ்தர் எவருமே, சின்னஞ்சிறு ஊர்களில் 'கப்சிப் தர்பார்' நடத்தி, தன் சித்தம்போல் காரியங்களைச் செய்து, 'செயம் செயம், என்று போட்டு அடிக்கும்படியான, சூழ்நிலை வாய்த்திருந்த காலம் அது.

சர்க்கார் அதிகாரியாக இல்லாதுபோயினும், அதிகாரம் பெற்ற சிலரைக் 'கைக்குள் போட்டுக்கொண்டு' பணப் பெருமை, குடிப்பெருமை, ஆள் முறுக்கு முதலிய மூல பலங்களோடு, ஒரு சிலர் ஒவ்வொரு ஊரிலும் சர்வாதிகார ஆட்சி புரிவதற்கு வசதி இருந்த காலம் அது.

புதுக்குடி என்ற சிற்றூரில் அந்த ஸ்தானத்தை வகித்து வந்தவர் மகராஜபிள்ளை.

அவர் சர்க்கார் வேலை எதுவும் பார்க்கவில்லை. ஆனால் அதிகாரிகள் பலரும் அவருக்கு 'வேண்டியவர்கள்.' அவர் பெரியவீட்டுப் பெரியபிள்ளை. சொத்தும் சுகமும் இருந்தன. அவர் குரல் எடுபட்டது. அவர் அதிகாரம் செல்லுபடியாயிற்று. அவரைப்போன்ற ஒரு நபர் அந்த ஊருக்குத் தேவையாகத்தானிருந்தது.

சில சந்தர்ப்பங்களில் அவருடைய நியாயத்தீர்ப்பும் தண்டனையும் ரொம்பவும் பூர்வீகமானதாக, அநாகரிகமானதாகக்கூடத் தோன்றும். இருந்தாலும் அவற்றை ஜனங்கள்

மௌனமாக ஏற்றுக்கொள்வது வழக்கம். அவர்கள் சுபாவம் அப்படி.

ஒரு சமயம் நடுத்தெரு செயலான வீடுகளில் ஒன்றைச் சேர்ந்த, நல்ல குடும்பத்து வாலிபனான ராமலிங்கம் இளமைத் துடிப்பில் ஒரு வேலை செய்துவிட்டான். 'சேரியிலிருந்த வீடு ஒன்றில் புகுந்து, அங்கே குடியிருந்த விதவை ஒருத்தியோடு உறவுகொண்டுவிட்டான். அவளும் அவனுக்கு உடந்தை தான். இது வளர்ந்து, அவள் அவன் வீடு தேடிவந்து, அங்கேயே இராப்பொழுதுகளைக் கழிக்கும் நிலைமைக்கு முற்றியது. அக்கப்போர் ஆசாமிகள் சிலர் இதைக் கவனித்து விட்டார்கள். ஒருநாள் இரவு, அவளும் அவனும் வீட்டுக்குள் இருக்கிறபோது, வெளியே கதவைத் தாழிட்டு, பெரிய பூட்டாக ஒன்றைப் போட்டுப் பூட்டிவிட்டார்கள். சந்தியில் நின்றுகொண்டு, ''நடுத்தெருவா லெட்சணமா இல்லையே! அக்கம் பக்கத்திலே வீடுகள் இருக்குதே, நல்லவங்க பெரிய வங்க குடியிருக்காங்களே என்கிற உணர்வு மங்கிப் போச்சுதே!'' என்ற தன்மையில் சத்தமிட்டு ரகளை செய் தார்கள்.'

அவர்கள் பேச்சும் கூப்பாடும் மகராஜபிள்ளை காதில் விழாமல் இருக்குமா? அவர் கூப்பிட்டு, 'என்ன, ஏது?' என்று விசாரித்தார். விவரம் அறிந்தார்.

'சரி. விடியட்டும். அவங்க ரெண்டுபேரும் இரவை இஷ்டம்போல் கழிக்கட்டும். நீங்களும் வீட்டுக்குப்போய் தூங்குங்க. விடிந்த உடனே வந்து சேருங்க' என்று பிள்ளை சொன்னார். சாவியை வாங்கி வைத்துக்கொண்டார்.

'மாமா, நீங்க திறந்து விட்டு விடுவீங்களா?' என்று ஒரு மருமகன் கேட்டான்.

'நான் ஏன் திறக்கிறேன்? அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்.'

'மன்னிக்கணும், காப்பாத்தணுமின்னு ராமலிங்கமும் அந்தச் சிறுக்கியும் அழுது கெஞ்சினால்...'

பிள்ளை பெரும் சிரிப்புச் சிரித்தார். 'மன்னிப்பா? மகராஜபிள்ளையிடமா? இந்த இடத்திலே அந்த வார்த்தைக்கு விலையே கிடையாது தம்பி. அது இங்கே செல்லாது' என்று அகங்காரத்தோடு அறிவித்தார்.

'நான் அந்தப் பக்கமே அடியெடுத்து வைக்கமாட்டேன். காலையிலே எல்லோரும் வாங்க. கவனிப்போம்' என்று உறுதி கூறி அவர்களை அனுப்பிவைத்தார்.

'பலபலவென்று' விடிவதற்கு முன்னுடியே 'பிள்ளையாண்டான்கள்' வந்துவிட்டார்கள். ஒரே கூட்டம் நடுத்தெருவில். வைகுண்ட ஏகாதசியன்று 'சொர்க்கவாசல்' திறக்கப்போவதைக்கூட அவ்வளவு ஆவலோடு எதிர்பார்க்க மாட்டார்கள் பக்தர்கள்.

ராமலிங்கம் வீட்டினுள்ளிருந்து கதவைக் குலுக்கு குலுக்கென்று குலுக்கி அலுத்துப் போயிருந்தான். காலை நான்கு மணியிலிருந்து அவனுக்கு அவசரம். அவன் காமினியை யாருக்கும் தெரியாமல் அவள் வீட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டுமே என்றுதான். அதற்கு வழி இல்லாமல் போய் விட்டது! விஷயத்தை ஊகித்துக்கொண்டு, அவன் வசைமாரியில் இறங்கினன். 'என் வீட்டில் நான் என்னவும் செய்வேன். தெரு நாய்களுக்கு ஏன் வீண் அக்கறை? நாய்கள் ஏன் இப்படி அலையணும்?' எனத் தொடங்கி, கண்டபடி ஏசிக்கொண்டிருந்தான்.

மற்றவர்கள் மகராஜபிள்ளையையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவர் இடிக்குரலில் உறுமினர்:

'டேய் ராமு, என்னடா வாய் மிஞ்சிப் போகுது? அடக்கிப் பேசு' என்றார்.

'பின்னே என்ன? வீடு என்றிருந்தால் அதிலே எல்லாம் தான் நடக்கும். தெருக்காரங்க ஏன் நாய்மாதிரி மோப்பம் புடிச்சுக்கிட்டுத் திரியணும்? பொறுமைதான்...' என்று அவன் கத்தினன்.

'வீடு தெருவில்தான் இருக்கு. வீட்டிலே நடைபெறுகிற நல்லது தீயது தெருவையும் ஊரையும் பாதிக்கத்தான் செய்யும், தெரியுதா?'—என்று பதிலுக்குக் கர்ஜித்தார் பிள்ளை.

'சரி சரி. கதவைத் திறந்துவிடுங்க!' என்று வெடு வெடுத்தான் ராமலிங்கம்.

'நீ செய்திருக்கிற குற்றம் ஒண்ணு இல்லே, ரெண்டு இல்லே. எத்தனையோ. அக்கிரமம் செய்தது, சேரிப் பெண்ணை நடுத்தெரு வீட்டுக்குள் கூட்டிவந்து கொட்டம் அடித்தது, தெருக்காரங்களைக் கேவலமாப் பேசியது, ஊர் மரியாதையைக் கெடுத்தது, பெரியவங்களை அவமதித்தது' என்று அடுக்கிஞர் பிள்ளை. 'இதுக்கெல்லாம் தண்டனை இல்லாமல் தப்பிப்போக நினைக்கிறியே, தம்பி!' என்ருர்.

'என்ன, அபராதம் போடுவீகளோ? எவ்வளவு பணம்?' என்று கோபமாகக் கேட்டான் ராமு.

மகராஜபிள்ளை வெளியே நின்றவர்களைப் பார்த்தார். 'உங்க இஷ்டம்போல் செய்யுங்க!' என்ற பதிலை ஏந்தி நின்ற முகங்களையே கண்டார். அலட்சியச் சிரிப்புடன் அறிவித்தார்—

'தம்பி ராமலிங்கம்! உனக்குப் புத்தி கற்பிக்கிறதுக்கு வெறும் அபராதம் பிரயோசனப்படாது. அதுலே உனக்காக ஸ்பெசல் மரியாதை செய்யவேண்டியிருக்குது. ஊரை மதிக்கவில்லே அல்லவா நீ! உன் பெருமையை நீயே ஊருக்கு உணர்த்து. நீயும் உன் ஜோடியும் கைகோர்த்துக்கொண்டு தெருத் தெருவாச் சுத்தி வரணும். உங்க ரெண்டுபேரு கையையும் சேர்த்து இறுக்கிக் கட்டிவிடுவோம். அதோடு... சரி, அதைச் சொல்வானேன்!'

பக்கத்தில் நின்றவர்களிடம் ரகசியம் பேசிஞர் பிள்ளை. அவர்கள் உவகையால் கத்தினர்.

கதவு திறக்கப்பட்டது. ராமலிங்கம் தப்பி ஓட வழியே யில்லை. வெளியே காத்து நின்றவர்களில் பலர் அவனை லபக்

கென்று அமுக்கிப் பிடித்துக்கொண்டார்கள். நாணிக் கோணி ஒதுங்கி நின்றவளையும் பிடித்து, அவனருகில் நிறுத்தினார்கள். இரண்டுபேர் கைகளையும் சேர்த்துக் கட்டினார்கள். துணிச்சல் உள்ள சிலர் துச்சாதனர்களாக முன்வந்து, துகில் உரித்தார்கள். அவ்விருவருடைய போராட்டம் வலுவற்றிருந்தது. அழுகைக்கும் கெஞ்சலுக்கும் கவனிப்பு தரப்படவில்லை. அலங்கோலமான நிலையிலே அவனும் அவளும் தெருக்கள் வழியே நடத்திச் செல்லப்பட்டார்கள்.

புராதன சமுதாயத்தில், எந்தெந்தக் காலத்திலோ, நிகழ்த்தப்பெற்ற தண்டனை முறை நாகரிக நாட்களில் மகராஜபிள்ளை அவர்களின் ஆதரவில் வெற்றிகரமாக அமுல்நடத்திவைக்கப்பட்டது. தெருக்காரர்களுக்கும் ஊராருக்கும் நல்ல வேடிக்கை. பாதிக்கப்பட்டவர்களுக்கோ?

அந்தப் பெண் அன்று இரவே கிணற்றில் விழுந்து செத்துப்போனாள், ராமலிங்கம் இரவோடு இரவாக ஊரைவிட்டே வெளியேறினான். எந்த ஊருக்குள் ஒளிந்து மறைய ஓடிப்போனானோ, பாவம்.

'மகராஜபிள்ளை பெரிய யோக்கியரு! இந்த ஊரிலே உள்ளவங்க எல்லாருமே தவறு செய்யாதவங்கதான்! தெரியாதாக்கும். அவங்க அவங்க வாழ்விலே வந்தால் தெரியும். இந்த மகராஜபிள்ளைதான் இருக்காரே, மன்னிப்பு கிடையாது, தவறுசெய்தால் தண்டனை உண்டு என்கிறாரே; இவரு வீட்டிலே, இவருக்கு நெருக்கமானவங்க, குற்றம் செய்தால் தண்டனையா கொடுப்பாரு? கடுமையான தண்டனை கொடுத்துவிடுவாரா என்ன? அது மாதிரி சந்தர்ப்பத்தில் அல்லவா ஐயாப்பிள்ளையின் நேர்மையும் போக்கும் அம்பலமாகும்!' என்று ராமலிங்கம் போகும்போது முணமுணத்தபடிதான் போனான்.

இராமலிங்கம் எந்த வேளையில் அப்படிச் சொல்லிச் சபித்துவிட்டுப் போனானோ?

அவ்விதமான நெருக்கடி ஒன்று மகராஜபிள்ளை வாழ்க்கையில் தலைகாட்டத்தான் செய்தது.

மகராஜபிள்ளை அவர்களின் மனைவி சண்பகம் அவரை விட வயதில் மிகவும் இளையவள். அவர் வீமன் மாதிரி இருந்தார். அவளோ பூங்கொடிபோல், 'சிற்றுச் சினுக் கென்று செங்கரும்பு மாதிரி' காட்சியளித்தாள். அவள் அவரிடம் பயபக்தியோடு, பணிவுடன், கடமை தவறாத பத்தினியாகத்தான் நடந்து வந்தாள்.

என்றாலும், அவள் மன ஆழத்தில் மக்கிக்கிடந்த ஆசைகள் நெளியவிட்ட மௌனக் கொழுந்துகள் எத்தனையோ! அங்கு மண்டிக்கிடந்த ஏக்கங்களும் ஏமாற்றங்களும் எழுப்பிய எண்ணப் புகைகள் எத்தன்மையனவோ!

கௌதம ரிஷிக்கு நாள் தவறாது அன்புப் பணிவிடையும் கடமைகளும் புரிந்துவந்த அகலிகையின் மனம்கூட, இளம் பருவத்தில் தான் கண்டிருந்த இந்திரனை எண்ணி சஞ்சலித்த தாகச் சிலர் சொல்லவில்லையா என்ன? தந்திரத்தையும் மந்திரத்தையும் துணைகொண்டு, தாடிமுனி ஒரு போட்டியில் வெற்றிபெற்று அகலிகையைப் பரிசாக அடைந்திராவிட்டால் இந்திரனே அவளை அடைந்திருக்கக்கூடும் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள்! இல்லையா?

சண்பகத்தின் வாழ்வுக்கும் இந்தப் புராணம் பொருந்தும். அவள் அத்தை மகன் சுந்தரம் இளமையிலேயே அவள் கவனத்தைக் கவர்ந்திருந்தான். அவள் உள்ளத்தின் மென்மையான பகுதி ஒன்றில் இடம்பெற்றிருந்தான். அவன் அழகன். இளைஞன். அவளுக்கு ஏற்ற துணைவனாகக்கூடிய நலன்கள் பெற்றவன்தான். ஆனால், மகராஜபிள்ளை பணப் பெருமை, நகைகள், பெரியவீட்டு அந்தஸ்து, ஊரிலே செயலும் செல்வாக்கும் என்ற சக்திகளைக் காட்டி, பெண்ணைப் பெற்றவர்களின் மனசை மயக்கி, சண்பகத்தைக் கல்யாணம் செய்துகொள்வது சுலப சாத்தியமான காரியமாக இருந்தது. 'சுந்தரம், பத்தாவது படித்துப் பாஸ்பண்ணியவன். ஏதோ ஒரு ஆபீசில் குமாஸ்தா வேலை பார்க்கிறவன். மாதச் சம்பளம் என்கிற சொற்ப வருமானத்தை வைத்துக்கொண்டு எப்படி நல்லபடியாகக் காலம் தள்ளமுடியும்? நாளைக்கு நம்ம

பெண் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்கக்கூடாது. சொத்தும் சுகமுமா நல்ல நிலையில் வாழவேண்டும்' என்றுதான் பெண்ணைப் பெற்றவர்கள் எண்ணினார்கள்.

மகராஜபிள்ளையை மணந்துகொண்ட சண்பகத்துக்குக் குறை எதுவும் இல்லைதான். அவள் அத்தை மகன் சுந்தரம் குறுக்கிட்டிராவிடில் அவள் சொத்து சுகத்தோடு, சந்தோஷத்தோடு—சராசரிப் பெண்ணுக்கு இருக்கக்கூடிய ஆசைகள் கனவுகள் ஏக்கங்கள் ஏமாற்றங்கள் வகையராவோடும்—காலம் முழுவதும் கழித்திருப்பாள் என்பதிலும் சந்தேகம் வேண்டியதில்லைதான்.

ஆனால், மனித வாழ்க்கை எனும் நெடுங் கதையில், 'இல்லாத பொல்லாத' தில்லுமுல்லுகள் வம்புகள் தும்புகள் எல்லாம் பண்ணுகிற 'வில்லன்' காலம் சண்பகத்தின் வாழ்விலும் தன் சித்து விளையாடல்களைப் புகுத்தியது.

'இந்தப் பக்கமாக வந்தேன். சும்மா அப்படி பார்த்து விட்டுப் போகலாமே என்று இங்கும் எட்டிப் பார்த்தேன்' என்று சொல்லிக்கொண்டு சுந்தரம் முதல் முதலாக ஒரு நாள் வந்துசேர்ந்தான். அதுமுதல் அப்படியே ஒவ்வொரு தடவையும் முதல்தடவையாக வருவதுபோல் அடிக்கடி வரலானான். சண்பகத்தின் மூன்று வயசுப் பையனிடம் அதிகமான பிரியம் காட்டினான். கொஞ்சி விளையாடினான். அதன் மூலம், அம்மாவின் மனசின் ஆழத்தில் உறங்கிக்கிடந்த ஆசைக் கனவுகளுக்குப் புத்துயிரும் பசுமையும் புகுத்தலானான்.

ஒரு சந்தர்ப்பத்தில், மகராஜபிள்ளை முக்கிய அலுவல் காரணமாக வெளியூர் போயிருந்தார். திரும்பிவர இரண்டு நாட்கள் ஆகும் என்று கூறியிருந்தார். தற்செயலாக அன்று சுந்தரம் அங்குவந்து சேர்ந்தான். இதைத்தான் 'வில்லன் காலத்தின் விளையாட்டு' என்ற கணக்கில் சேர்க்கவேண்டும்!

தனிமை இருந்தது. வீட்டில் அவர் இல்லை என்பதனால் உண்டான ஒருவகைச் சுதந்திர உணர்வும் இருந்தது. சபலம் உள்ளத்தில் இருந்தது. உணர்வுகளில் ஒரு கிளுகிளுப்பு

இருந்தது. இருவர் பேச்சும் விளையாட்டும் பார்வையும் நெருக்கத்துக்குத் துணைசெய்வதாயிருந்தன. இரவு தன் சக்தியைக் காட்டியது. எனவே அவனும் அவளும் பொன்னான வாய்ப்பை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

வில்லன் காலம் விளையாட்டோடு நின்றுவிடாது, தன் வினைத்திறனையும் முடுக்கிவிட்டது. வெளியூர் சென்றிருந்த பிள்ளை, அங்குள்ள வேலை விரைவில் முடிந்துவிட்டதனுலோ அல்லது தேடிப்போனவர்கள் இல்லை, வர நாட்கள் பல ஆகும், காத்திருப்பது வீண் என உணர்ந்ததனுலோ, மனைவியிடம் சொல்லிவிட்டுப் போனதற்கு மாருகச் சீக்கிரமே திரும்பினுர். அதிலும், ராத்திரி வேளையிலேயே வீடு வந்து விட்டார். அவர் சந்தேகப்பட்டு எதுவும் செய்யவில்லை. சண்பகத்தின்மீது அவர் சந்தேகம்கொண்டதே கிடையாது. காலம் செய்த சதிவேலைதான் இது.

கதவைத் தட்டு தட்டு என்று தட்டினுர் பிள்ளை. குழப்ப முற்ற சண்பகம், பயத்தோடு, மெதுவாகத்தான் கதவைத் திறந்தாள். 'ஏன் இவ்வளவு நேரம்? ஏன் விளக்கு ஏற்ற வில்லை? விடிவிளக்கை ஏன் அணைத்தே? ரத்தினம் தூங்குருு?' என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனவர், 'யாரது? யார் அங்கே பதுங்கினது?' என்று கத்தினுர். கையிலிருந்த பாட்டரி விளக்கை அழுத்தினுர்.

அது கொட்டிய வெளிச்சம் சுந்தரத்தைக் காட்டிக் கொடுத்தது. சண்பகத்தின் நிலையையும் தெளிவுபடுத்தியது. அவருள் கோபத்தை, ஆத்திரத்தை, கொதிப்பைக் கிளறி விட்டது.

'டேய்!' என்று கூவிக்கொண்டு அவர் பாய்வதற்குள், சண்பகம் துணிச்சலாக பிள்ளையின் குறுக்கே விழுந்தாள். சுந்தரம் தப்பிவெளியே ஓடுவதற்குச் சௌகரியம் ஏற்பட்டது. அவள் போக்கு அவருக்கு வெறி ஏற்றியது. 'கெட்ட சிறுக்கி! நீயும் அவனேடு கெட்டு ஒழி!' என்று கர்ஜித்து, அவள் கூந்தலைப் பிடித்து அவளை இழுத்து வெளியே தள்ளினுர். 'உனக்கு இந்தப் புத்தி ஏன் வந்தது? பாழாய்ப்போறவளே?'

என்று உறுமினர். கதவை அடைத்துப் பலமாகத் தாழ்ப்பா ளிட்டார்.

சண்பகம் கதவைத் தட்டினுள். கெஞ்சினுள். 'இந்த ஒரு தடவை மன்னிச்சிடுங்க. இதுவரை நான் உங்களுக்குத் துரோகம் செய்யலே. இப்போ புத்திகெட்டுப்போயி, தெரியாத்தனமா, போதாத காலத்திலே, தப்பு செய்திட் டேன். ஆணையிடுறேன். இனிமேலே...' என்றெல்லாம் உருக்கமாகப் புலம்பினுள்.

பிள்ளையின் காதுகளும் நெஞ்சும் கல்லாக மாறியிருந்தன.

'மன்னிக்கணும், மன்னிப்புக் கிடையவே கிடையாதா?' என்று மண்டையைக் கதவில் மோதி மோதிக் கதறினுள், சண்பகம்.

வீட்டுக் கதவும் பிள்ளையின் இதயக் கதவும் அடைபட்டது பட்டதுதான்.

'மன்னிப்பு மகராஜபிள்ளையின் அகராதியிலேயே இல்லாத வார்த்தை அல்லவா அது' என்று அவர் மனக் குறளி பேசிக்கொண்டது.

மகராஜபிள்ளை அமர்க்களமாகச் சிரித்து, அழுத்தமாகச் சொல்வது வழக்கம்—

'நீங்க விழுந்து விழுந்து கும்பிடுகிற கடவுள்கள்கூட மன்னிப்பு என்பதிலே நம்பிக்கை வைப்பதில்லை, தெரியுமா? நான் அதிர்ச்சி தரும்படியாக எதையும் சொல்ல வரவில்லை. புதுசாகவும் சொல்லவில்லை. வேத வேதாந்த புராணங்கள்; பக்தர்களின் புலம்பல்கள் எல்லாம் சொல்வதைத்தான் கட்அண்ட் ரைட்டாக எடுத்துச் சொல்கிறேன். வாழ்க்கை என்பதே கடவுள் மனிதருக்கு அளிக்கிற தண்டனை என்று தான் அவை எல்லாம் கூறுகின்றன. சிலர் சுகபோக வாழ்வு வாழ நேர்ந்திருப்பதும், அநேகர் மிகுந்த கஷ்டங்களை அனுப விக்க நேர்வதும் அவரவர் பூர்வஜன்ம பலன் என்றும், முன்பு செய்த பாப புண்ணியங்களுக்குத் தக்கபடி ஆண்டவன் மனிதர் தலையில் எழுதிவைக்கிருன் என்றும் மக்கள் சொல்ல

வில்லையா? பூர்வஜன்ம கர்மா என்று பெரிய வார்த்தைகளைப் போட்டுப் பேசுகிருர்கள் மதவாதிகள். அவரவர் செய்கிற பாவங்கள் பழிகளுக்கு நிச்சயம் தண்டனை உண்டு; அவரவர் வாழ்நாளிலேயே அனுபவிக்க நேர்கிறது பலருக்கு; மற்றவர் கள் இனிவரும் பிறப்புகளில் அனுபவிப்பார்கள் என்றும் சொல்கிருர்கள். இது எல்லாம் எதைக் காட்டுகிறது? கடவுள் மன்னிப்பது கிடையாது; எல்லோருக்கும் உரிய தண்டனை கொடுத்துக்கொண்டிருக்கிருர் என்பதைத்தானே?"

தமது செயல்கள் நியாயமானவை என்று சாதிப்பதற் காகப் பிள்ளை அவர்கள் இதை எல்லாம் பேசுவதாக எண்ணுவதில்லை மற்றவர்கள். அவருடைய அறிவின் பிரகாசம் ஒளிவீசுவதாக எண்ணி, பிரமித்து, மறுப்புரை கூறத் துணிவில்லாமல் இருந்துவிடுவார்கள் ஊராரும் உறவினரும்.

சண்பகத்திற்காகப் பரிந்து பேசவந்த உறவினரிடமும் பிள்ளை இதைத்தான் சொன்னுர். "ஆனுனப்பட்ட முனிவர்கள் கூட இதுபோல் குற்றம் செய்த பெண்களுக்கு சாபம் என்கிற தண்டனை கொடுத்ததாகத்தான் உங்க புராணங்கள் சொல் கின்றன. பின்னே? நான் முனிவரோ, தேவனே இல்லை. விருப்பு வெறுப்புகள்கொண்ட மனிதன்தானே? தனக்குத் துரோகம் செய்த—தனது மானத்தையும் மதிப்பையும் சீர் குலைக்கிற—பெண்டாட்டியை அடித்துத் துரத்துவதிலே என்ன தவறு இருக்கு? அவளை நான் மீண்டும் இந்த வீட்டிலே நடை ஏற்றமுடியாது. அவளுக்குத் தேவையான பணம் கொடுத்து விடுகிறேன். பையனை அவளிடம் அனுப்பமுடியாது. அவனை நான் வளர்த்து ஆளாக்கிவிடுவேன்" என்று திடமாகத் தெரி வித்துவிட்டார்.

சந்தர்ப்பவசத்திஞல், ஒருகணத்தின் பலவீனத்திஞல், தவறு செய்துவிட்டபோதிலும் பிறகு இதயபூர்வமாகத் தன் பிழை உணர்ந்து வருந்தி, பிராயச்சித்தம் கோருகிறவர் களுக்கு மன்னிப்பு தரப்படல் நன்று என்ற தத்துவம் பிள்ளை அவர்களின் ஆமோதிப்பை ஒருபோதும் பெற்றதில்லை.

துணிந்தோ அல்லது எதேச்சையாகவோ, குற்றம் செய்துவிடுபவர்களைப் பெருந்தன்மையோடு மன்னித்து விட்டால் அவர்களுக்குக் 'குளிர் விட்டுப் போகும்.' திரும்பத் திரும்பக் குற்றமே செய்து கொண்டிருப்பார்கள் என்று தான் அவர் கருதினார்.

பெருந்தன்மையோடு உரிய தருணத்தில் மன்னிப்பு அருளினால் மனிதர் உள்ளத்தில் புத்துணர்வும் அவர்கள் வாழ்வில் புதுமலர்ச்சியும் ஏற்படக்கூடும். அப்படி ஒருவேளையில்—சரியான சமயத்தில்—மன்னிப்பு அருளப்படாத காரணத்தினால், கடுமையான தண்டனை பெற்று புறக்கணிக்கப்பட்டதனால், செய்யும் வகை அறியாத ஒரு நிலையிலே சிலர் சீரழிந்துபோக வழிவகைகள் ஏற்படுவதும் உண்டு. இதை மகராஜபிள்ளை உணர மறுத்தார்.

ஆகவே அவரே அவர் மனைவி சண்பகம் 'கெட்டுக் குட்டிச் சுவராவதற்கு' தளம் அமைத்துக் கொடுத்ததுபோல் ஆயிற்று. அவளை அவர் மன்னித்து, வீட்டில் சேர்த்துக் கொண்டு, மகனையும் வளர்த்து வரும்படி நல்வாழ்வு அளித்திருந்தால், அவள் நல்லவளாகவே நாளோட்டியிருக்கக்கூடும். அவள் பாப புண்ணியத்துக்குப் பயந்த பெண்தான்.

ஆனால், பிள்ளை இரவிலே வெளியே தள்ளிக் கதவை அடைத்துவிட்டார். அவள் குளிரிலும் வாடையிலும் கிடந்து இருட்டின் தனிமையில் அஞ்சி, தன் நிலையை எண்ணிக் குமைந்து அழுது புழுங்கினாள்.

அவள் அத்தை மகன் சுந்தரம் ஊரைவிட்டே ஓடிவிடவில்லை. என்ன நடக்கிறது பார்ப்போம் என்று இருளில் பதுங்கி நின்றான்.

விடிவதற்கு முன்பு, சண்பகம் எழுந்து ஏதோ ஒரு முடிவுடன் நடக்க ஆரம்பிக்கவும் அவன் அவளிடம் ஓடி வந்தான், அனுதாபத்தோடு பேசினான்.

அவள் அழுதுகொண்டே, 'இனிமே எனக்கென்ன இருக்கு? நான் குளத்திலே விழுந்து சாகப்போகிறேன்" என்று சொல்லியவாறே நடக்கவும், அவளை அவன் பிடித்து ஆதர

வாக அருகே நடந்து, ஆறுதல் கூறினன். அவளுக்கு நம்பிக்கை ஊட்ட முயன்ருன். அவள் கண்ணீரைத் துடைத்தான். அவளை அவன் தாய் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட முன் வந்தான்.

'எந்த மூஞ்சியோடு நான் அம்மா அப்பா முகத்திலே முழிப்பேன்? நான் செத்துப் போறதுதான் எனக்கும் நல்லது; மத்தவங்களுக்கும் நல்லது' என்று உருக்கமாகப் புலம்பினள் அவள்.

அவனுடைய பிடிவாதமும் மன உறுதியும், தைரியமான வார்த்தைகளும் வெற்றிபெற்றன. சண்பகம் இருளோடு இருளாக ஊரைவிட்டு வெளியேறினள். அத்தான் துணையோடுதான்.

அவன் அவளை அவள் பெற்ருேர் வீட்டில் சேர்ப்பித்தான். பூசி மெழுகும் பேச்சுக்கள் கூறிவிட்டு அவன் போய்விட்டான்.

உண்மை பெற்ருேருக்குத் தெரியாமல் போகுமா? மகராஜபிள்ளைதான் அவர்களுடைய அருமை மகளின் பெருமையை அவர்களுக்கு அறிவிக்காமல் இருப்பாரா? பெற்ருேர் வயிற்றில் தீ புகுந்தது! அவர்கள் வாழ்க்கையில் இடி விழுந்தது மாதிரி ஆயிற்று!

தந்தை குதித்தார். கோபித்தார். 'அந்த இடத்திலேயே உன்னை வெட்டிப்பொங்கலிடாமல் வெளியே பிடித்துத் தள்ளினுரே, அதுவே அவருடைய பெருந்தன்மையைக் காட்டுது' என்று பாராட்டுரை வேறு வழங்கினர். அம்மைக்காரி தலையில் அறைந்துகொண்டு ஒப்பாரி வைக்கலானள். 'என் வயித்திலே இப்படி ஒருத்தி வந்து பொறக்கணுமா?' என்று வயிற்றில் அடி அடி என்று அடித்துக் கொண்டு கதறினள். 'அடிபாவி, என் கையாலேயே உனக்கு பச்சைநாவியைக் கொடுக்கிறேன் பாரு. குடி கெடுக்கிற சண்டாளி!' என்று ஏசினள்.

'இந்த வீட்டுக்கு வந்ததே தப்பு' என உணர்ந்த சண்பகம் ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்து விடுவது என்று துணிந்து கிளம்பி ரயிலடி நோக்கிப் போனள்.

சண்பகத்தின் வாழ்வில் 'விளையாட்டு பண்ணிய' வில்லன் காலம் அவள் கதை அப்படித் திடீர் முடிவு பெறுவதை அங்கீகரிக்கத் தயாராக இல்லை. இங்கே நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்து வரலாமே என்றொரு அவாவை சுந்தரம் மனத்தில் புகுத்தி, அவனை உந்தித் தள்ளியது.

சுந்தரம் சரியான சமயத்தில் வந்து சேர்ந்தான். சண்பகத்தை 'தடுத்து ஆட்கொண்டான்!'

அவனுடைய அன்பும் ஆதரவும், பரிவும் பிரியமும் அவளை இளக்கின. உயிராசை அவளை இயக்கியது. அவன் சொல்லியவாறெல்லாம், அவன் காட்டுகிற வழியில், அவனைப் பின்தொடர அவள் சித்தமானாள்.

சுந்தரத்துக்கு மட்டிலா மகிழ்ச்சி. சாவதற்கிருந்த ஒரு உயிரைக் காப்பாற்றிவிட்ட சந்தோஷம் மட்டுமல்ல. தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய—விதிவசத்தால் தன்னை விட்டு விலகிப் போய் அந்நியமாகியிருந்த—தன் அன்புக்கு உரியவள் தன்னிடமே வந்து சேர்ந்துவிட்டாளே என்ற ஆனந்தக் களிப்பு!

சண்பகம் அத்தான் சுந்தரத்தோடு சேர்ந்து வாழ்கிறாள் என்பதை அறிய நேர்ந்த உற்றாரும் உறவினரும் அவளுக்காகப் பரிந்து பேசுவதை விட்டு விட்டார்கள்.

'சவம் எக்கேடும் கெட்டு எப்படியும் நாசமாப் போகட்டும்! ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும் என்பது வெறும் பேச்சா என்ன? அவள் இந்த வீட்டிலேயே இருந்தாலும், அந்த அயோக்கியப் பய அடிக்கடி வந்து போய்க் கொண்டுதான் இருப்பான். இப்ப இரண்டு பேரும் ஒரே வீட்டிலே சேர்ந்து இருக்கிறாங்க இல்லே? போகட்டும்' என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டார், மகராஜபிள்ளை.

அவர் தன் மகன் ரத்தினத்துக்கு அவன் அம்மாவைப் பற்றிய உண்மை தெரியாமல் இருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டார். அம்மா இல்லாத குறை அவன்

உள்ளத்தில் உறுத்தாதவாறு அவனைச் சீராட்டி, சிறப்பாக வளர்ப்பதில் அதிக அக்கறை காட்டி வரலானார்.

மகராஜபிள்ளை புதுக்குடி எனும் சிற்றூரிலேயே, 'தாத்தா, தாத்தாவுக்கும் தாத்தா காலம் முதற்கொண்டு' செயலாக இருந்துவரும் குடும்பத்தில் வந்தவர். அவரும், அந்த ஊர் அம்மாமார்கள் சொல்லிக்கொள்வதுபோல, 'திண்ணையிலே திண்டு போட்டுச் சாய்ந்து ஆக்கினைகள் செய்து' தமது பெருமையை நிலைநிறுத்தி வருகிறவர். அவர் புதுக்குடியை விட்டு வெளியேற விரும்பியது கிடையாது.

அதற்காக அவருடைய புத்திரபாக்கியமான ரத்தினமும் அவ்விதமே வசிக்க வேண்டும் என்று பிள்ளை அவர்கள் ஆசைப்பட்டதும் இல்லை. 'அப்படி அவனையும் அந்தப் பட்டிக் காட்டுக்குள்ளேயே மூடக்கிப்போடுவது அவனுக்கு நல்லது செய்வது ஆகாது' என்றே அவர் எண்ணினார்.

பிள்ளை 'பெரிய பள்ளிக்கூடம் போய் கோணல் எழுத்து யடித்து'த் தேறவில்லை. அது அவருக்குப் பெரிய குறையாக வும் படவில்லை. அவர் காலத்துக்கு அது சரி. இனிமேல் அது சரிப்பட்டு வராது என்று அவர் உணர்ந்தார்.

முச்சந்திக் கவிராயர் ஒருவர் பாடியது அவர் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. 'இங்கிலீசுக்காரரசு; இந்தியா வரவர சொகுசு!' என்று ஆரம்பித்து, காலவேகத்தில் நாட்டில் ஏற்பட்டு வந்த மாற்றங்களைச் சுவையாக வர்ணித் தது அந்தப் பாடல். அந்த மாறுதல்களை ரத்தினமும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். அவன் அவனுடைய தந்தை யைப் போலவோ, தாத்தா போலவோ அந்த ஊரில் அதிகாரம்பண்ணி வாழ்ந்துவிட முடியாது என்று அவருக்கு நிச்சயமாகப்பட்டது.

மகன் அருகிலுள்ள நகரத்தில் போய் கல்வி கற்க வேண்டியது அவசியம் என்று தந்தை தீர்மானித்தார். 'ஓட்டல் சாப்பாடு அவன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. ஹாஸ்டல் சூழ்நிலை அவனுக்குச் சரிப்பட்டு வராது' என்று

எண்ணினுர். தனி வீடு அமர்த்தி, அவருக்கு அக்காள் முறை ஆகவேண்டிய ஒரு அம்மாளை அவனுக்குச் சமைத்துப்போட்டு நன்கு கவனித்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தார்.

எப்பொழுதாவது அவர் நகரத்துக்கு விஜயம் செய்து, மகனைப் பார்த்து, அன்பாக விசாரிப்பார். அவன் தேவைகளைப் பூர்த்தி செய்வார். அவனுக்கு அவர் குறை எதுவும் வைக்கவில்லை. அவருக்கு அவன்மீது எல்லையில்லாத பாசம். அவன் பண்புடனும் திறமையோடும் படித்துப் பெரியவனுகி வருவதை எண்ண எண்ண அவருக்குத் தனிப் பெருமை. உள்ளத்தில் ஒரு பூரிப்பு.

அவனுடைய அம்மாவைப்பற்றி அவர் அவனிடம் பேசவே மாட்டார். 'அவருக்குப் பிடிக்காத' விஷயங்களை உணர்ந்து, அவற்றைப்பற்றிப் பேச்செடுக்கவே விரும்பாது ஒதுங்கிவிடச் சின்னஞ்சிறு வயசிலேயே கற்றுக்கொண்டான் பையன்.

ஒரு சமயம் பிள்ளை மகனிடம் சொன்னுர்: 'உன் அம்மா ஒரு கெட்ட சொப்பனம் மாதிரி. கெட்ட சொப்பனத்தை யாராவது திரும்பத் திரும்ப நினைத்துப் பார்க்க விரும்புவார்களோ? என்னைப் பொறுத்த வரையில், அவளை நான் மறந்தாச்சு...'

அவரிடம் அவன் அம்மா பற்றிப் பேசுவதை விட்டுவிட்டான். இருந்தாலும், மனம் சுடுகாட்டுத் தன்மை பெற்றுவிடுமா என்ன? உணர்ச்சித் துடிப்புள்ள மனித இதயம் பாலைத் தன்மை பெறுவது சாத்தியமாகிவிடுமா? எனினும், தன் உணர்ச்சிகளைத் தன்னுள்ளேயே அடக்கிவிடுவதில் பயிற்சி பெற முயன்ருன் அவன்.

காலம் அவன் பாதையிலும் குறுக்கிட்டது. ஒரு நாள் அவன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும்போது, 'ரத்னம்!' என்று குழைவுக் குரல் கொடுத்தவாறு எதிரே வந்து நின்ருள் சண்பகம். 'என்னைத் தெரியலையா? மறந்துட்டியா, கண்ணு?' என்று கேட்டாள். கம்மிய குரலில் சோகம் துளும்பியது.

அவனுக்கு அவள் உருவம் நினைவில் நின்றது. 'அம்மா!' என்று ஏக்கத்தோடு, உணர்ச்சியோடு அவன் அழைத்தான்.

அவள் பாசத்தோடு அவனை 'ஆவிச் சேர்த்து'க் கட்டிக் கொண்டாள். தெருவையும், கும்பலையும் அவள் கவனிக்கவே யில்லை. அவள் மகன்! அவனை அன்போடு தழுவிக்கொள் வதைக் கண்டு யார் என்ன சொல்ல முடியும்?

அவனுக்குத்தான் என்னவோ போலிருந்தது. 'நான் என்ன குழந்தையா?' என்று முரண்டினான்.

அவளுக்கு எவ்வளவோ பேச வேண்டும் என்று ஆசை. ஆயினும் பேச முடியவில்லை. குரல் கம்மியது. துக்கம் தொண்டையை அடைத்தது. வேதனை நெஞ்சில் கனத்தது. கண்கள், நீர் பனிக்க, அவனையே பார்த்துக் கொண் டிருந்தன—தீராத தாகத்தோடு; அடக்கமுடியாத ஆசை யோடு.

'ஊம். எனக்குக் கொடுத்துவைக்கவில்லை!' என்று பெருமூச்செறிந்தாள் தாய். 'நானும் இங்கே தான் இருக் கிறேன். நீ இங்கே பெரிய பள்ளிக்கூடத்திலே படிக்கிறே என்கிறது ரெண்டு நாளைக்கு முன்னடிதான் எனக்குத் தெரியும். உன்னைப் பார்க்கணும், பார்க்கணுமின்னு நெஞ்சு துடிச்சுது. நேத்து வந்து நின்னு, கவனிச்சேன். நீ நாலஞ்சு பேர்களோடு போய்க்கிட்டிருந்தே. கூப்பிட முடியலே. இன்னிக்கு எப்படியும் பேசிவிடுவதுன்னு வந்தேன்... இந்தா, இதைச் சாப்பிடு' என்று அவள் செய்து கொண்டு வந்திருந்த வடைகளைத் தந்தாள்.

'தெருவிலே நின்னு எப்படிச் சாப்பிடுவது?' என்று வாங்கி வைத்துக்கொண்டான் மகன்.

'நீ என் கூட வீட்டுக்கு வரணும். இன்னிக்கு வேண்டாம். இன்னொரு நாள் நானே கூட்டிக்கிட்டுப் போறேன்' என்று சொன்ன அம்மா தொடர்ந்து வேண்டிக்கொண்டாள். 'ரத்னம்! என்ன இப்படிக் கேட்கிறேளேன்னு நெனச்சாலும் நெனச்சுக்கோ. ஆனல் அது அவசியம். நீ சத்தியம் செய்ய ணும். என்னை நீ சந்திச்சதாகவோ, நான் உன்னைக் கண்டு

பேசியதாகவோ நீ யாரிடமும் சொல்லக்கூடாது. முக்கியமா உன் அத்தை கிட்டே! அப்பா காதுக்கு இந்தச் சங்கதி எட்டவே படாது!' என்ருள்.

அவள் கோரிக்கை நியாயமானதாகவே மகனுக்குத் தோன்றியது. அவள் விருப்பத்தை அவன் நிறைவேற்றினன்.

அவள் திரும்பித் திரும்பி அவனைப் பார்த்தபடி, பிரிந்து போக மனம் இல்லாமலே, போய்ச் சேர்ந்தாள்.

மூன்று தினங்களுக்குப் பிறகு சண்பகம் அவனை அவள் இருந்த குடிசைக்கு அழைத்துக்கொண்டு போனுள். அவளுடைய வறுமை நிலையைப் பளிச்சென்று காட்டிக் கொண்டிருந்தது அந்த இடம். தரையில் ஒரு பையன் படுத்துக் கிடந்தான். அவனுக்கு மூன்று வயதிருக்கும்.

'உன் தம்பி!' என்று அறிமுகப்படுத்தினுள் தாய். 'நான் உன்னைப் பிரிந்து வருகையில், உனக்கும் மூணு வயசு தான்' என்று அவள் மெதுவாகச் சொன்னுள்.

'ஏன்? ஏன் என்னை விட்டுட்டு வந்தே? ஏன் அப்புறம் வீட்டுக்கே வரலே? ஏன் இங்கே தனியாக இருக்கிறே?' அறிய வேண்டும் எனும் ஆவலில் அவன் அடுக்கினுன்.

அவளோ சிலையாக இருந்தாள். ஆனல் கண்கள் நீரைப் பெருக்கின. பெருமூச்சு பொங்கியது.

'அப்பா உன் கிட்டே ஒண்ணுமே சொல்லலியா!' என்று தீனமாகக் கேட்டாள் அவள்.

'ஊஹும். அப்பாவுக்குப் பிடிக்காத விஷயம் எதைப் பற்றியும் நான் அவங்ககிட்டே கேட்பது கிடையாது. உன்னை மறந்தாச்சு என்று சொன்னுங்க. அம்மா ஒரு கெட்ட சொப்பனம் மாதிரி என்ருங்க. அப்புறம் நான் ஏன் அந்தப் பேச்சை எடுக்கிறேன்?' என்று மகன் தெரிவித்தான்.

கண்ணீர்த்துளிகள் அவள் கன்னங்களில் உருண்டன. 'என் தலை எழுத்து. நான் அனுபவிக்கிறேன். நான் ஒரு தப்பு செய்துவிட்டேன். பெரிய தப்புதான். உங்க அப்பா ரொம்ப வும் கோபித்து என்னை வெளியே அனுப்பிவிட்டாங்க.

மன்னிக்க முடியாதுயின்னு ஒரே அடியாச் சொல்லி விட்டாங்க. நான் எப்படி அங்கே தலைகாட்ட முடியும்!" என்று முணு முணுத்தாள் அவள்.

'அப்புறம் எப்படி எப்படியோ காலம் கழிஞ்சுது. இப்போ உன் தம்பிதான் எனக்குத் துணை' என்றாள் சண்பகம்.

'நீ அடிக்கடி இங்கே வரவேண்டாம், ராசா. அது அப்பாவுக்குத் தெரிஞ்சுபோகும். உன் அப்பா ரொம்பவும் கண்டிப்பான ஆளு. அவருக்கு மன்னிக்கவே தெரியாது. எந்தத் தப்பிதத்தையும் மன்னிக்க மாட்டார். ஆமா. என் விதி என்னோடு போகட்டும். அது உன் தலையிலும் விடிய வேண்டாம்' என்று அவள் பொருமினாள்.

ரத்தினத்துக்கும் அழுகை வந்தது. எதுவும் தெளிவாகப் புரியாத குழப்ப நிலையிலே, அவன் மௌனமாக அவளை நோக்கியவாறு உட்கார்ந்திருந்தான்.

'பாவி பெத்தெடுத்தேனே தவிர, பிள்ளையை வளர்க்கக் கொடுத்து வைக்காதவள் ஆகிவிட்டேன். இப்போதாவது நீ சாப்பிடுவதைக் கண்ணாறப் பார்க்கட்டும்!' என்று அவனுக்குச் சோறு படைத்தாள்.

'அன்பு வறுமையில்' ஆழ்ந்துகிடந்த ரத்தினத்துக்குத் தாயன்பு இதமளித்தது. விழித்தெழுந்த சிறுவனின் விளையாட்டும், அவனோடு ஒட்டிக்கொண்ட தன்மையும், 'அண்ணன், அண்ணன்' என்று கூறி வளைய வந்ததும் 'ஒற்றைக்காட்டு ஓரியாக' வளர்ந்திருந்த அவனுக்குக் குளுமை தந்தன. துரை என்ற அப்பையனிடம் அவனுக்கு இயல்பாகவே ஒரு பாசமும் பிரியமும் ஊறிப் பெருகின.

'நான் எங்கே எப்படி இருந்தா என்ன? நீ நல்லாயிருக்கணும். உன் மனசிலே எனக்கும் உன் தம்பிக்கும் நல்ல இடம் இருக்குயின்னு அறிந்ததே எனக்குப் பெரியதிருப்தி. என் மனசுக்கு எவ்வளவோ நிம்மதி!' என்று சண்பகம், அவனை வழி அனுப்பும்போது கூறினாள்.

அவர்களாகச் சொல்வதைப் பொறுமையோடு கேட்டுக் கொள்வது, எவரிடமும் தூண்டித் துளைத்து எதுவும் கேட்ப தில்லை என்பதை சுபாவமாகவும் கொள்கையாகவும் கொண் டிருந்த ரத்தினம் அவளிடமும் வாய்திறந்து தன் சந்தேகம் எதையும் கேட்கவில்லை.

'தாயானால் என்ன, பிள்ளையானால் என்ன! மனிதர் ஒவ்வொருவரும் மற்றவருக்குப் புதிர்தான்!' என்று அவன் மனம் குறித்துக் கொண்டது.

உருவமற்று, உயிரும் உணர்வும் அற்று, ஆயினும் ஓடிக் கொண்டேயிருப்பது எனும் தொழிலை ஒழுங்காகச் செய்து வருகிற காலம், உடலும் உயிரும் உணர்ச்சிகளும் பெற்ற மனிதர்களை எப்படி எப்படி எல்லாமோ ஆட்டிவைக்கிறது.

கால ஓட்டம் சண்பகத்தின் வாழ்வையும் வெகுவாகப் பாதித்திருந்தது. கணவன் வீட்டிலும் வாழ முடியாதவளாய், பிறந்த வீட்டிலும் நிம்மதியாக நாளோட்ட வகையில்லாத வளாய், சுந்தரத்தை துணையாகவும் பலமாகவும் நம்பி தனி வாழ்வு தொடங்கிய அவள் வாழ்க்கையில் சோதனைகளும் வேதனைகளும் தான் அதிகமாகக் குறுக்கிட்டன.

'காற்றடிக்கும் சோலையிலே கனி அடித்துத் திரிகின்ற செல்லப்பிள்ளை' வர்க்கத்தைச் சேர்ந்தவன் அவன். பொறுப் பற்ற தன்மையில் வளர்ந்தவன். பொறுப்பு, கடமை உணர்வு, கடின உழைப்பு முதலியவைகளைப் பெரும் சுமை யாகக் கருதியவன். இருந்தாலும், உணர்ச்சி உந்துதலால் அவன் சண்பகத்தைக் காப்பாற்றுவதாக வாக்களித்து, ஏதோ சில ஏற்பாடுகளும் செய்தான்.

அக் கூட்டு வாழ்வின் புதுமையும் இனிமையும் சிறிது காலத்துக்கு அவனுக்கு உவகையும் உற்சாகமும் உழைக்கும் ஊக்கமும் கொடுத்தன. நாளடைவில் அவனுக்கு அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. இயல்பான சோம்பலும், 'கோயில் காளை சுபாவமும்' மேலோங்கின. அவன் அடிக்கடி 'வெளியூர் பிரயாணம், வேலை மிகுதி, அவசர சோலி' என்று சாக்குப்

போக்குச் சொல்லி வெளி வட்டாரங்களிலேயே தங்கி விடுவதை வழக்கமாக்கினான்.

சண்பகத்தின் அழுகையும் முணு முணுப்பும், குறை கூறலும் குற்றம் சாட்டலும் சகிக்கமுடியாத மூட்டைப் பூச்சித் தொல்லையாகவும் கொசுக் கடியாகவும் அவனுக்கு எரிச்சல் ஊட்டின. அவள் ஒரு குழந்தையைப் பெற்று அளிக்கவும், அவன் விழிப்புற்ற விசுவாமித்திரன் ஆனான். பொறுப்பையும் சுமையையும் அதிகப்படுத்திக் கொள்ள மனமில்லாதவனாய், அவளை வெறுத்து ஒதுக்கி, சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ கம்பி நீட்டிவிட்டான். 'ஆள் அட்ரஸே தெரியாமல்' போச்சு!

சண்பகம் தன் விதியை எண்ணி அழுதாள். ஒரு சந்தர்ப்பத்தில், செய்யும் செயலின் தன்மையை அறியாத—அதன் பிந்திய விளைவுகள் பற்றிச் சிந்தியாது—உணர்ச்சிக் கிளு கிளுப்பில் செய்துவிட்ட முட்டாள்தனமான ஒரு செயலுக்கு, பாபத்துக்கு, உரிய தண்டனையைத் தொடர்ந்து அனுபவிக்க நேர்ந்துள்ளது; அந்தப் பொறி அழுதாலும் தீராது, அடித்தாலும் தீராது எனத் தேர்ந்தாள். குழந்தைக்காக உயிர் வாழ்வது என்று தீர்மானித்தாள். இட்டிலி சுட்டும், வடை தயாரித்தும், அப்பளாமிட்டும், வற்றல் வடகங்கள் பண்ணியும் விற்பனைசெய்வது; நம்பிக்கையான சிலருக்குச் சோறு சமைத்துப் போடுவது; பல வீடுகளுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுப்பது, வாசல் தெளித்துப் பெருக்குவது போன்ற வேலைகளைச் செய்து காசு சேகரித்து, மிகுந்த சகிப்புத்தன்மையோடு நாளைக் கழிக்கக் கற்றுக்கொண்டாள்.

அவள் தன் முதல் மகன் ரத்தினத்தை மறந்தவள் அல்லள். எப்படி மறக்க முடியும்? அவனைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே என்று ஏங்கித் தவித்தாள். இவ் விஷயத்தில் காலம் அவளுக்குத் துணை புரிந்தது. அவள் இருந்த பெரிய நகரத்துக்கே அவனைக் கொண்டு வந்து சேர்த்தது. அவனைச் சந்திக்க வாய்ப்பும் அளித்தது.

ரத்தினம் அவ்வப்போது அவளைக் கண்டு பேச வீடுதேடி வந்தான். தம்பியிடம் அவனுக்கு ஒட்டுதலும் உறவும் அதிகமாயிற்று. துரையை அவன் ஆசையோடு நேசித்தான்.

துரை பலவீனமான பையன். நோஞ்சான். 'நோஞ்ச மாட்டிலே சதா ஈ அரிப்பதுபோல' பலவிதமான வியாதிகளும் அவனைப் பிய்த்துப் பிடுங்கின. அதனாலும் அவன்மீது அண்ணனுக்கு ஒரு பரிவும் அனுதாபமும் ஏற்பட்டு வளர்ந்தன.

தம்பிக்குக் கதைகள் சொல்வதில் இன்பம் கண்டான் அண்ணன். தம்பியின் அறிவை விசாலமாக்கி, அவனிடம் உயர் பண்புகளை வளர வைக்கவேண்டிய பொறுப்புத் தனக்கு உண்டு என்று அவன் கருதினான். ஆகவே, ஊர் உலகம் வீடு குடும்பம் பற்றி எல்லாம் அண்ணன் கதை கதையாய் பேசினான். அப்பாவின் பெருமைகளை, வீரபராக்கிரமங்களை மகிழ்வுப் பெருக்கோடு வர்ணித்தான். அப்பாவை ஏதோ ஒரு காவியநாயகனாகத் தம்பி மதிக்கிற அளவுக்கு அண்ணன் அவரைப்பற்றிச் சுவையாகச் சொல்லி வந்தான்.

'அப்பாவை நான் பார்க்கவே இல்லையே, பார்க்கணுமின்னு ஆசையாயிருக்கே. என்னைப் பார்க்கணும்னு அப்பாவுக்கு எண்ணமே இராதா?' என்று அந்தப் பிஞ்சு உள்ளம் ஏங்கியது. அம்மாவைத் தொண தொணக்கவும், அவள் ராட்சசி மாதிரிக் கதறினாள். சுளீர், சுளீர் என்று அறை கொடுத்தாள். 'அப்பனாம் அப்பன்! பாராத குறைதான் உனக்குப் பெரிசாயிட்டுதாக்கும்? பேசாமல் கிட சவமே!' என்று கத்தினாள்.

பரிதாபத்துக்கு உரிய சண்பகம் சுந்தரத்தை நினைத்துக் கொண்டு, தன் கொதிப்பை, குமைதலை, ஆத்திரத்தை எல்லாம் அந்த அறியாப் பாலகன்மீது கொட்டினாள். பாவம், அந்தப் பச்சிளம் உள்ளமோ அன்புடன் பழகிய அண்ணன் சித்திரித்த 'மகாப் பெரிய, சக்திவாய்ந்த' கடவுளுக்கு அடுத்த படி என்று அதற்குத் தோன்றிய அப்பாவை அறிமுகம் செய்துகொள்ளத் தவித்தது. அதை அந்த அபலை உணர்ந்தாளில்லை.

பையன் 'பிசாசாக மாறக்கூடிய' தாயைக் கண்டு அஞ்சினான். 'வெந்ததைத் தின்னு, விதியேன்னு வாழ்ந்து, வேளை வந்தால் சாகணும்' என்பதை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டு, அதையே அவனுக்கும் போதித்து, 'வேறு எதைப் பத்தியும் மூச்சுகாட்டப்படாது மூச்சு!' என்று எச்சரித்தும் வைத்தாள் தாய். அவன் பயந்து பணிந்தான். ஆகவே, அவன் மனம் அன்பு அதிகம் காட்டிய அண்ணனை அதிகமாக நாடியதில் வியப்பு இல்லைதான்.

காலம் ஓடியது. அதிக உழைப்பு, அரிக்கும் கவலை, அரைப் பட்டினி நிலைமை, ஓய்வு இல்லாமை எல்லாம் சேர்ந்து சண்பகத்தை ஓடாய் தேய்த்தன, சீக்கில் தள்ளின. அவள் படுத்த படுக்கை ஆகிவிட்டாள். அவள் நினைவெல்லாம், கவலை எல்லாம், வேதனை எல்லாம் 'எனக்குப் பிறகு துரை கதி என்ன ஆகும்?' என்பதுதான்.

அவள் தாயுள்ளத்தில் சிறு ஒளி ஒன்று துருவ நட்சத்திரமாய் இலங்கிக்கொண்டிருந்தது. அதைத்தான் பற்றிக் கொள்ள வேண்டும். வேறு வழியில்லை.

அவள் ரத்தினத்தை அவசரம் என்று வரவழைத்தாள். 'ராசா, நான் பிழைக்கமாட்டேன். துரை உன் தம்பி. அவனுக்கு உன்னை விட்டால் வேறு கதி இல்லை. நீதான் அவனைக் காப்பாத்தணும். நீயும் சின்னப் பையன்தான். இருந்தாலும்...'

அழுகையும் துக்கமும் அவள் வாயை அடைத்தன.

துயரம் கனக்கும் நெஞ்சுடன், 'என் தம்பிக்கு ஒரு குறையும் வராது. நான் கவனித்துக்கொள்கிறேன்' என்று வாக்கு கொடுத்தான் ரத்தினம்.

'ராசா, நீ நல்லாயிருக்கணும்!' என்று நிம்மதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்த்தினாள் தாய்.

அதன் பிறகு அவள் வெகுநாட்கள் உயிரோடு இருக்கவில்லை.

அப்போது துரைக்குப் பன்னிரெண்டு வயசு. அவன் வாழ்வில் வெறுமை புகுந்தது. அதில் பசுமையும் குளுகுளுப் பும் நிரப்பக்கூடிய சக்தி அப்பாவுக்கு உண்டு என்று அவன் எண்ணினன். 'இந்த அம்மாதான் ''பெரிய இது மாதிரி'' காரியங்களைச் செய்துக்கிட்டு, எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச்சுவர் பண்ணிக்கிட்டிருந்தா. இப்படிக் கஷ்டப்படு ரேம்னு அப்பாவுக்குத் தெரியப்படுத்தவேயில்லை. அப்பா வுக்குத் தெரிஞ்சிருந்தால் இதுமாதிரி விட்டு வச்சிருப்பாங் களா?' என்றுதான் அந்த அறியாப் பையனல் எண்ண முடிந்தது.

'அப்பாவைப் பார்க்க வேண்டும்' என்ற ஆசையை அவன் அண்ணனிடம் சொன்னன்.

'அவசியம் போகலாம். எனக்கு லீவு நாள் வரட்டும்' என்று ரத்தினம் கூறினன்.

காலத்தை ஏலத்தில் விட்டுக்கொண்டிருப்பது பையனுக் குப் பிடிக்கவில்லை. அவன் நல்ல காலம் சீக்கிரமே வரவேண் டும் என்று ஆசைப்பட்டான். அதனல் தனியாகவே தந்தை யைப் பார்க்க கிளம்பிவிட்டான். அந்த ஊர் எங்கே இருக் கிறது, வீடு எந்தத் தெருவில் எப்படி உள்ளது, அப்பா எப்படி இருப்பார் என்பதெல்லாம்தான் அவனுக்குத் தெரி யுமே! அண்ணன் தெளிவாக எத்தனையோ தடவைகள் சொல்லவில்லையா? சந்தேகம் வந்தால், விசாரித்துத் தெளிவு பெற வாய் இல்லையா என்ன?

எனவே அவன், அண்ணனுக்குக் கோணல் மாணலாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு, துணிச்சலைத் துணை கொண்டு தனியாகக் கிளம்பினன்.

மகராஜபிள்ளை 'அன்று கண்ட மேனி அழியாமலே' தானிருந்தார். காலவெள்ளம் கூடக் கரைத்து அரிக்க முடியாத கருங்கல் பாறையில் செதுக்கி எடுத்த உருவங்கள் போல் சில பேர் இல்லையா? அவரும் அந்த இனம்தான். அவர் குணங்களிலும் காலம் எவ்வித மாறுதலும் செய்து விடவில்லை.

அன்று அவர் வழக்கம்போல், மினுமினுக்கும் தேக்குமரக் கட்டிலில், ஓய்வாகப் படுத்திருந்தார். உண்ட கிறக்கம். மகனின் நினைப்பு. 'அவனைப் பார்த்து நாளாச்சு. லீவு வருமே? வந்து சேருவான்' என்ற எண்ணம். அவனைப் பற்றிய கனவுகள் அவர் சித்தவெளியில் நிழலாடின.

'அப்பா!' என்ற மென்குரல் அவரைத் திடுக்கிட வைத்தது. 'ஆங், வந்துட்டியா? இப்பத்தான் வாறையா?' என்று கேட்டவாறு பதற்றமாய் எழுந்து உட்கார்ந்தார். விழித்தார்.

ரத்தினத்தைக் காணவில்லை. வாசல் நடையில் எவனோ ஒரு நோஞ்சான் பயல் நிற்பதைத்தான் கண்டார்.

'என்ன, யாரு நீ?' என்று கேட்டார் பிள்ளை. அதட்டலாக உருண்டது அவர் குரல்.

அவர் குரலும், முகத்தோற்றமும் பயந்த சுபாவம் கொண்ட பையனின் உள்ளத்தில் உதைப்பு ஏற்படுத்தியது. அவன் தைரியம் ஓடி மறைந்துவிட்டது.

'ஊம்? யாருடா நீ? என்ன வேணும்?' என்று மீண்டும் உறுமினார் பெரியவர்.

'நான்... நான்... துரை' என்று வார்த்தைகளை மென்று விழுங்க முயன்றான் அவன்.

'துரையா? எந்த வீடு உனக்கு? யார் வீட்டுக்கு வந்திருக்கிறே?' அவருக்கு எதுவும் புரியாத குழப்பம்.

'இங்கேதான், அப்பாவைப் பார்க்கத்தான் வந்தேன் ...'

'இங்கே நான் மட்டும்தான் இருக்கிறேன். உன் அப்பா பேரென்ன?'

'மகராஜபிள்ளை.'

'என்னது?' என்று உறுமி, அவனை முறைத்துப் பார்த்தார் பிள்ளை. 'நீ யார் பையன்?' என்று கேட்டார்.

'சண்பகம் மகன்.'

'ஓ!' என்றார் அவர், அலட்சியமாக. 'அந்தக் கேடு கெட்டவ பெத்த தேவாங்கா?' என்றார் குத்தலாக. 'போடா போக்கத்தவனே! உன் அம்மா ஊர் மேலே போயி உன்னைப் பெத்திருக்கா. உன் அப்பன் எந்தப் பரதேசிப் பயலோ! இனிமேலே என் பேரை உன் வாயாலே கூடச் சொல்லாதே. போ போ, அந்த அடிச்சரியா போன இடத்துக்கே நீயும் போ!' என்று விரட்டினார்.

பையனுக்கு எல்லாம் இருண்டுவிட்டதாகவே தோன்றியது. இந்த விதமான வரவேற்பை, இப்படி ஒருபேச்சை, அவன் 'சர்வ சக்தி வாய்ந்த' அப்பாவிடமிருந்து எதிர் பார்க்கவேயில்லை. அவன் தள்ளாடித் தடுமாறித் தெருவில் இறங்கி நடந்தான். அழுதுகொண்டே நடந்தான். 'நான் செத்துப்போவதே நல்லது. நான் செத்துத்தான் போகணும்' என்று அவன் மனம் உறுத்தியது.

அப்போதுதான் வந்துபோன ரயிலிலிருந்து இறங்கிய ரத்தினம் அவசரம் அவசரமாக நடக்க ஆரம்பித்தபோது, வெறிபிடித்தவன் போல் ரயிலை நோக்கி ஓடும் துரையைப் பார்த்துவிட்டான். 'தம்பீ, தம்பீ! ஏ துரை!' என்று கூவிக் கொண்டு அவனைப் பிடிக்கப் பாய்ந்தான். தம்பியைத் தேடி வந்தவன்தான் அவன்.

அண்ணனைக் கண்டதும் துரையின் இதய வேதனை தாங்க முடியாதது ஆயிற்று. அவன் விம்மி விம்மி அழுது கொண்டு அண்ணன் காலைக் கட்டிப் பிடித்தான்.

'ஏன்? என்ன நடந்தது? ஏன் இப்படி அழுறே?' என்று ஆதரவாய் விசாரித்தான் ரத்தினம்.

'கேடுகெட்டவ பெத்தவனே...எந்தப் பரதேசிக்குப் பொறந்தியோ...நான் உன் அப்பா இல்லே...' துரை விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே சொற்களை சிரமத்தோடு உச்சரித்தான். 'போடா, போ. அடிச்சரியா கிட்டேயே போயின்னு...'

ரத்தினத்தின் உள்ளம் பதறியது. அவன் உடலும் நடுங்கியது. 'யாரு சொன்னு? யாரு இப்படிச் சொன்னது?' என்று படபடத்தான்.

'அப்பா...அப்பா, என்னை விரட்டி விட்டாங்க' என்று அழுகையோடு புலம்பினுன் சிறுவன்.

'அப்பாவா? நம்ம அம்மாவையா அப்படி...' அண்ணன் அதிர்ந்து போனுன்.

'கேடு கெட்டவ பெத்த தேவாங்கா நான்? அண்ணு, நம்ம அம்மா...' அழுகை விம்மி வந்தது.

ரத்தினத்தின் முகம் கறுத்தது. அவன் நெஞ்சில் யாரோ ஓங்கிக் குத்தியதுபோல் வலித்தது.

'அழாதே தம்பி. அவர் உன்னை ஏற்றுக்கொள்ளா விட்டால் போகட்டும். உனக்கு நான் துணை. நீ வருத்தப் படாதே. அழக்கூடாது!' என்று தேற்றி, அவனை அன்புட னும் ஆதரவோடும் தழுவிக்கொண்டான்.

'அப்பா...' என்று தேம்பினுன் பையன்.

'அவர் பேச்சை எடுக்காதே. அவருக்கு மன்னிக்கவே தெரியாது என்று அம்மா ஒரு தடவை சொன்னுள். மன்னிப்பு பெறுவதற்குக்கூட அவர் தகுதியில்லாதவர்தான். ஒரு களங்கமும் அறியாத சின்னஞ்சிறுசை வாயில் வந்தபடி பேசி விரட்டியடிப்பது என்றுல், ஹூங்! அவரும் ஒரு மனுசனு?' ஆங்காரத்தோடு பேசினுன் ரத்தினம்.

சில நிமிஷ நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தது அடுத்த ரயில் வண்டி. அதில் ரத்தினம் தம்பியை ஏற்றி தானும் ஏறிக்கொண்டான். அவர்கள் வாழ்வின் திசை மாறிவிட் டது! இனி அந்த ஊரில் அவர்களுக்கு வேலை இல்லை.

நேரம் ஊர்ந்துகொண்டிருந்தது.

மகராஜபிள்ளைக்கு 'மனசே நல்லா இல்லை' என்றொரு உணர்வு ஏற்பட்டது. அமைதியற்று அவர் கிடந்தார். எழுந்தார். நடந்தார். இருந்தார். மீண்டும் உலாவினுர்.

சாயங்காலம் ஆயிற்று. அந்தி இருள் பரவும் வேளையும் வந்தது.

'அண்ணுச்சி, உங்க மகன் இங்கே வந்தானு' என்று கேட்டுக்கொண்டே, நடுத்தெரு மாணிக்கம் பிள்ளை வந்தார்.

'என் மகனு?' என்று முறைத்தார் பிள்ளை.

'உங்க பதினெட்டு வயசு மகன் ரத்தினம்...' என்று இழுத்தார் மற்றவர்.

'இல்லையே...ஏன்?' அவர் நெஞ்சை வலித்தது.

மாணிக்கம் பிள்ளை ரயிலடியில் நடந்ததைச் சொன்னுர், அந்த ரயிலில்தான் அவரும் வந்திறங்கினுர். அவருக்கு அங்கு நிகழ்ந்த உணர்ச்சி நாடகம் புதுமையாக இருந்தது. மனசுக்குக் கஷ்டம் தருவதாகவும் இருந்தது. இரண்டு பேரும் ரயிலேறி நகரத்துக்குப் போனதைப் பார்த்துவிட்டுத்தான் அவர் ஊர் வந்து சேர்ந்தார்.

அவர் சொல்லச் சொல்ல, மகராஜபிள்ளைக்குத் தம்முள் எதுவோ ஒன்று சரிந்து, தமது பலம் பூராவும் நழுவிப் போவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. 'என் ஐயா' என்று வேதனையோடு கூறி, கட்டிலில் சாய்ந்தார் பிள்ளை.

சிறிது நேரம் காத்திருந்த மாணிக்கம் பிள்ளை, அவர் தனிமையில் இருப்பதே நல்லது எனக் கருதி அங்கிருந்து போய்விட்டார்.

மகராஜபிள்ளைக்கு எல்லாமே சூன்யமாகிவிட்டதுபோல் பட்டது. வாழ்க்கையே திடீரென்று வெறுமையாய், பாழாய், அர்த்தமற்றதாய் மாறி இருண்டுவிட்டது போலிருந்தது. 'மன்னிக்கத் தெரியாதவர்... மன்னிப்பு பெறத் தகுதியில்லாதவர்...அப்படியா சொன்னுன்? என் மகனு சொன்னுன்?' அவர் இதயம் கனத்தது. உள்ளம் வெதும்பியது. அவர் பெருமூச்சு விட்டபடி கிடந்தார்.

இருட்டியது. இருள் கனத்தது. அவரை இருட்டு மூழ்கடித்தது.

விளக்கேற்ற வேண்டும் என்ற பிரக்ஞையே இல்லாமல் விழுந்து கிடந்தார் அவர். மண்ணுளிப் பாம்பு மாதிரிப் புரண்டு நெளிந்துகொண்டே கிடந்தார்.

'தீபம்', டிசம்பர் 1966

# ஹீரோ

அழகை அள்ளிப் பொழிந்துகொண்டிருந்தது நிலவு. உள் ஊழல்களை எல்லாம் அலங்கார ஆடைகளாலும் மேல் பூச்சுக்களாலும் மூடி மறைத்து 'வெளிச்சம் போடும்' வீணர்களையும் ஒய்யாரிகளையும் போலவே, சந்திரிகையைப் போர்த்துக் கொண்டு சொகுசாக விளங்கியது உலகம்.

அன்று பௌர்ணமி.

'புத்தனாகப் பரிணமம் பெறுவதற்கிருந்த சித்தார்த்தன், இத்தகைய பௌர்ணமி இரவு ஒன்றிலேதான் வெளியேறினான்.'

மோகனச் சூழ்நிலையில், சந்திரனின் அமுத ஒளியில் குளிக்கும் கல் சிலையென அமர்ந்திருந்த மாதவனின் உள்ளம் பேசியது இப்படி. உடனே சிரித்தது அவன் மனக் குறளி.

—புத்தனையும் உன்னையும் ஒப்பிடாதே. உன்னோடு எவனையுமே ஒப்பிடாதே. நீ தேர்ந்திருப்பது—துணிந்து நடை போடப் போவது—ஒற்றைத் தனிப் பாதையாகும்...

அழகு போர்த்திய உலகம் அமைதியில் உறங்கிக் கிடந்தது. விண்ணும் மண்ணும், ஆசைநாயகன் எவனுக்காகவோ சிங்காரித்துக்கொண்டு காத்திருக்கும் மோகினிகள் மாதிரித் திகழ்ந்தன.

ஊருக்கு வடக்கேயுள்ள குளத்தின் கரைமீது ஆழ்ந்த யோசனையில் லயித்திருந்த மாதவன் கண்கள்கூட இயற்கையின் மோகன எழிலால் வசீகரிக்கப்பட்டன. ஊர்ந்து நெளியும் காற்றினால் சலனமுற்ற நீர்ப்பரப்பின் சிறுசிறு அசைவுகள் தோறும் அம்புலியின் வெள்ளிய ஒலி அற்புதம் செய்துகொண்டிருந்தது.

சூழ்நிலையில் அமைதி கொலுவிருந்தபோதிலும் அவன உள்ளத்திலே அமைதி இல்லை. கசப்பும் வெறுப்பும், ஒருவித விரக்தியும் மண்டிச் சுழன்றன அங்கு.

—வெறுப்பு, சுற்றுப்புறத்தின்மீது... மனிதர்கள் மீது...அவர்களின் சின்னத்தனங்கள்மீது...தன் மீது கூட அவனுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. பழமையின் பேராலும், பண்பாட்டின் பேராலும், நீதி—நியாயம்—சமூக தர்மம் முதலிய கட்டுப்பாடுகளின் பேராலும் தனிமனிதர் களைச் செயலற்றவர்களாய், கோழைகளாய், துணிச்சல் பெற முடியாதவர்களாய் மாற்றிவிட்ட—இனியும் மாற்றப் போகிற—அமைப்பு முறையின் மீது அவனுக்கு மிகுந்த கசப்பு ஏற்பட்டிருந்தது.

திடீரென்று பிறந்த கசப்பு அல்ல அது. அவனுக்கு இப் பொழுது முப்பத்திரண்டு வயதாகிறது. பதினறு—பதினேழு வயசுவரை அவனும் மனோகரமான இன்பக் கனவுகளிலே மூழ்கி கிடந்தான். இனிமை நிறைந்த எதிர்காலம் பற்றிய பசுமை யான சித்திரங்களைத் தீட்டி மகிழ்ந்தது அவன் மனம். மகத் தான நம்பிக்கை உறைந்திருந்தது அவனுள்.

நாட்கள் தேயத் தேய, அவனுடைய வயது வளர வளர, வருங்காலம் பற்றிய பசுமைகள் எல்லாம் நிகழ்காலத்தின் அனுபவ வெயிலிலே காய்ந்து கருகித் தீய்ந்து போயின. நம்பிக்கை வறட்சி அவனுள்ளத்தில் தலைதூக்கி வளர்ந்தது.

திறமை, உழைப்பு, ஊக்கம், உற்சாகம் மட்டும் இருந் தால் போதாது. ஒருவன் முன்னேறுவதற்கு, நேர்மை, நியாயம், உண்மை, மனித தர்மம் என்று பேசப்படுபவை எல்லாம் வெறும் பேச்சுக்கும் அலங்கார எழுத்துக்கும் எடுப் பாகத்தான் இருக்கின்றன. ஆயினும் அவை வாழ்விலே எவனையும் உருப்பட வைத்ததில்லை.

'ஆனல், தவறுகள் என்று கருதப்படுவனவற்றை எல்லாம் துணிந்து செய்கிறவர்கள்—பாவங்கள் என்று போதிக்கப்படுபவற்றை விழிப்பு உணர்ச்சியோடு கையாள் கிறவர்கள்—சின்னத்தனங்கள் எனக் குறை கூறப்படுகின்ற

வைகளைக் கூசாது செயல்புரிவோர் பிரமாதமாக வாழ முடிகிறது இன்றைய சமுதாயத்திலே.*

மூப்பு, பிணி, சாக்காடு ஆகியவற்றைக் கண்டு மனம் குமைந்து, வாழ்வில் வெறுப்புற்று, விடுதலைக்கு வழிதேடத் தானே தவித்தது சித்தார்த்த உள்ளம்? அவனும், அவனைப் போன்றவர்களும் என்ன வழிகள் கண்டுபிடித்திருந்தாலும், அவ்வழிகளில் எதுவும் வாழ்க்கை முறையிலே மாற்றம் புகுத்திவிடவில்லை. உலகத்தில் உண்மை ஒளி பரவவில்லை...'

மாதவன் இவ்வாறு அடிக்கடி எண்ணினான். அவனிடம் சிந்திக்கும் ஆற்றல் இருந்தது. அறிவுப் பசி பெற்ற அவன் கண்டதை எல்லாம் படித்துப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தான். இவ்விரண்டு பண்புகளும் எவனையாவது வெற்றிகரமாக வாழவைத்திருக்கின்றனவா என்ன? ஆனால் மன உளைச்சல் ஏற்படுத்தாமல் விடுவதுமில்லையே?

மாதவனும் இத்தகைய மனோ வியாதியினால் பீடிக்கப் பட்டு, அமைதி இழந்து தவித்தான், படிப்படியாக வெறுப்பு வளர்ந்து வந்தது. வெறுப்பை உருவற்ற சமுதாயத்தின் மீதும், அது போற்றிப் பாதுகாக்கின்ற—கண்ணுக்குப் புலனாகாத—விலங்குகள் மீதும் தீவிரமாகக் கொட்டினான். அது மட்டும் போதாது; சமூகத்தைத் தண்டிக்க வேண்டும்; அதற்குத் தகுந்த தண்டனை கொடுக்கக்கூடிய தகுதியும் ஆற்றலும் துணிச்சலும் தனக்கே உண்டு என அவன் நம்பினான். எப்படி எப்படிச் செயல்புரியவேணும் என்று தீர்மானித்து திட்டங்களிட்டு, நெஞ்சை உறுதிப்படுத்தி வந்தான் அவன்.

—வாழ்க்கை ஒரு போர்ராட்டம் என்று கருதப்படுகிறது. போர் என்றால், அதில் வெற்றி பெறுவதற்கு எவ்வித யுக்திகளையும் தந்திரங்களையும், ஆயுதங்களையும், சூழ்ச்சிகளையும் அனுஷ்டிக்கலாம் அல்லவா?

மாதவன் இந்தரீதியில்தான் சிந்தித்தான். பதினைந்து வருடகாலம் சிந்தித்தான். ஒவ்வொரு பிறந்த நாளின்

போதும், நினைவின் நோக்கைப் பின்னுக்குச் செலுத்தி தனது வாழ்வுப் பாதையை ஆராய அவன் தவறியதில்லை. அவன் எளிய வாழ்வு வாழ்ந்தான். நேர்மையாளனாய், உண்மை விளம்பியாய், உழைப்பிலே உற்சாகம் உடையவனாய் வாழ்க்கை நடத்தினான். மனிதப் பண்புகள் குன்றாதவனாக விளங்கினான்.

அவன் எவரையும் ஏமாற்றியதில்லை; ஏமாற்ற ஆசைப் பட்டதுமில்லை. ஆனால் அவனை ஏமாந்தவனாக்க அநேகர் தயங்கவில்லை. அவன் யாரையும் பழிக்கவோ பரிகசிக்கவோ ஆர்வம் கொண்டதில்லை. எனினும் அவனை 'உருப்படத் தெரியாதவன்,' 'ஏமாந்த சோணகிரி', 'பைத்தியம்' என் றெல்லாம் மற்றவர்கள் பரிகசித்தார்கள்...

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான் மாதவன். 'இனி நாம் புதியதோர் வழியில் செல்வோம், கெட்ட போரிடும் உலகத்துக்கு அதன் முறைகள் மூலமே புத்தி கற்பிப்போம்' என்று துணிந்தான்.

அன்று அவனது முப்பத்து மூன்றாவது பிறந்த நாள். 'இன்று நாம் புதிதாகப் பிறந்தோம், சந்தேகமில்லை; இனி ஓர் புது சக்தி தோன்றும்' என்று வாழ்த்துக் கூறியது அவன் உள்ளம்.

குளக்கரையில் அமர்ந்திருந்த மாதவன் 'சரி, வேளை வந்து விட்டது!' என்று எழுந்தான். ஊருக்குள் நடந்தான்.

அப்பொழுது இரவு மணி பதினொன்று தானிருக்கும். எனினும்,—'பட்டிக்காட்டோடும் சேராத பட்டணக்கரையு மில்லாத'—அந்த இரண்டுங்கெட்டான் ஊர் சவ உறக்கத் தில் அயர்ந்து கிடந்தது.

பகல் வேளையில் வேகமும் உயிர்ப்பும் நிறைந்து 'ஜே ஜே' என்றிருந்த ஊர் சூனியக்காரி எவளுடைய மாயாஜாலத் துக்கோ உட்பட்டு உணர்வற்று, உயிரற்று, இயக்கமற்று மயங்கிக் கிடப்பதுபோல் தோன்றியது. வீடுகளுக்கும் வீதி களுக்கும் எழில் முலாம் பூசித் திகழ்ந்த பால்நிலவு ஊரின்

இயல்புக்கு முரணான சமாதி நிலையையும் பளிச்செனப் புலப் படுத்தியது.

—அடைபட்டுக் கிடக்கின்ற வீடுகளுக்குள் எல்லாம் உறக்கமும் அமைதியும் கவிந்து கிடக்கவேணும் என்கிற அவசியம் இல்லவே இல்லை. சோக நாடகங்களும், இன்பக் கதைகளும், பயங்கர அனுபவங்களும் நிகழ்ந்து கொண் டிருக்கலாம்.

மெதுவாக நடந்து சென்ற மாதவன் பெருமூச்செறிந் தான். அவன் வாழ்வின் வெறுமையும், அதனால் எழுந்த ஏக்கமும் அதில் பிரதிபலித்தன. தன் நினைவுகளே தன்னைச் சுமையாக அழுத்த, தலைகுனிந்தபடி நடந்த அவனை 'அத்தான்!' என்ற ரகசிய அழைப்பு நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

ஒரு வீட்டில், கதவைச் சிறிதே திறந்துவைத்துக் கொண்டு மறைந்தும் மறையாமலும் காட்சிதந்த பெண் நிலவு அவன் முகத்தில் மலர்ச்சி ஏற்படக் காரணமாயிற்று. அவன் ஏன் என்ற கேள்வியைப் பார்வையில் நிறுத்தினான்.

'தோட்டத்துப் பக்கம் வாங்க, உங்களிடம் முக்கிய விஷயம் பேசணும்' என்று அவள் மிக மெதுவான குரலில் சொன்னாள். அவன் தலை அசைவைப் பெற்றதும், கதவை அடைத்துத் தாழிட்டுவிட்டுப் போனாள்.

மாதவன் ஒரு கணம் தயங்கி நின்றான். அங்கும் இங்கும் பார்வையை எறிந்தான். சூழ்நிலையில் மாறுதல் எதுவும் ஏற் பட்டிருக்கவில்லை.

அவன் நிதானமாக வீட்டின் பின்பக்கம் வந்து சேர்ந்த போது, அவள் அங்கே நிழல் அடர்ந்த மரத்தடியில் அவனுக் காகக் காத்து நின்றாள்.

'என்ன காந்தி, என்ன விஷயம்?' அவன் குரல் அவ னுடைய எச்சரிக்கையான சுபாவத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் அந்த யுவதி 'மெதுவாகப் பேசு' என எச்சரிக்க விரும்பியவளாய், 'உஷ்!' என்று ஒலி செய்து ஒரு விரலைத் தன் உதடுகள்மேல் பதித்துக் காட்டினாள்.

அவன் அவளுக்குச் சமீபமாக வந்ததும், 'நீங்கள் வெளியே போகும்போது நான் பார்த்தேன். எப்படியும் இந்த வழியாகத்தானே திரும்பி வருவீர்கள் என்று காத்திருந்தேன். எவ்வளவு நேரமாக் காத்திருக்கிறேன் தெரியுமா? இன்னிக்கு உங்களுக்கு ஏன் இவ்வளவு நேரம்?' என்றாள் அவள்.

காந்திமதி அவள் பெயர். விசேஷ நாட்களில் பளபள வென்று துலக்கப்பெற்று, பொட்டிட்டு, ஒளி ஏற்றி வைக்கப் படுகிற குத்துவிளக்குபோல் கண் நிறைந்த தோற்றமுடைய பெண். உள்ளத்தின் அன்பும், அழகும், லட்சுமிகரம் என்பார்களே அத்தகைய பொலிவுபூத்த முகத்தில் மலர்ந்து விளங்கும். மாதவனின் மாமா மகள் அவள்.

'இன்றைக்கு விசேஷமான நாள்தான்' என்று மெதுவாக—ஆனால், அழுத்தம் தொனிக்கும்படி—உச்சரித்தான் அவன்.

'என்ன விசேஷம்?'

'என்ன விசேஷம் என்பது இருக்கட்டும், நீ சொல்ல விரும்பும் விஷயத்தை முதலில் சொல்லு.'

'எனக்குக் கல்யாணத்துக்கு நாள் குறித்துவிட்டார்கள். உங்களுக்குத் தெரிந்திருக்குமே?' என்று கூறி அவள் அவன் முகத்தை நோக்கினாள்.

மரத்தின் கீழே கரிய நிழல் படிந்திருந்தபோதிலும் எங்கும் 'பட்டப்பகல்போல் பளிச்சென'ப் பரவிக்கிடந்த ஒளி வெள்ளம் அவ்விடத்தின் இருட்டையும் வெளிறடித்திருந்தது. அனைத்தையும் தனித்தனியே பார்வைப் புலனுக்கு எடுத்துக் காட்டியது.

'ரொம்ப சந்தோஷம்' என்று உணர்ச்சி செத்த குரலில் பேசினான் மாதவன்.

அவனுடைய சிரத்தையின்மையை உணர்ந்து காந்திமதி வேதனைப் பெருமூச்சு உயிர்த்தாள். 'நான் சந்தோஷம்

அடைய முடியவில்லை, அத்தான். நீங்களும் நானும் எவ்வளவோ எண்ணினேம், ஆசைப்பட்டு எதிர்பார்த்தோம்...'

'எதிர்பார்க்கிறவர்கள் ஏமாறுவதும், ஆசைக்குப் பங்கம் ஏற்படுவதும் வாழ்க்கையில் சகஜந்தானே, காந்தி?'

அவன் அவள் முகத்தில் படபடக்கும் விழிகளை எதிர் நோக்க விரும்பாமல், பசிய இலை ஒன்றில் பட்டு, பளபளத்துச் சிதறுகின்ற வெள்ளி நிலவொளியைக் கூர்ந்து கவனித்தான்.

அவள் மார்பு விம்மித் தணிந்தது.

'அத்தான், உங்களுக்கு என்னிடம் ஆசை இல்லையா?' என்று உருக்கமாகக் கேட்டாள் அவள்.

'அப்படி நான் சொல்லவில்லையே!'

'பின் ஏன் இப்படி விரக்தியோடு பேசுகிறீர்கள்?'

'காந்தி, என் விரக்திக்கும் வேதனைக்கும் வெறுப்புக்கும் இதுதான் காரணம் என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? எனக்கு எல்லோர்மீதும், எல்லாவற்றின்பேரிலும் பெரும் வெறுப்பு...'

'என்மேல் கூடவா?' என்ற கேள்வியை அவன் எதிர் பார்க்கவில்லை. அது வெடித்துவிட்டதும் அவன் திகைத்தான்.

'என் நினைவிலே இனிமையாய் நிலைத்திருக்கக்கூடிய பெருமை உனக்கு மட்டுமே உண்டு காந்தி, வறண்ட கோடை போன்ற என் வாழ்க்கையில் உன் அன்புதான் குளிர் தரும் நிழலாக விளங்கியது; இனி உன் நினைவு எனக்குத் துணை நிற்கும்' என்றுன் அவன்.

'நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே, அத்தான்.'

'விடிந்தால் தெரியும் வெளிச்சம். நாளைக்கோ, மறு நாளோ, என்றே எல்லாம் தாஞகப் புரிந்துவிட்டுப் போகிறது!'

'பெரியவர்கள் எனக்காக நிச்சயித்துவிட்ட கல்யாணத்தைக் குறிப்பிடுகிறீர்களா?'

'பெரியவர்கள் எப்பவும் இளையவர்களின் நலத்தை உத்தேசித்துத்தான் செயல்புரிவார்கள் அல்லது அப்படிச் செயல்புரிவதாகச் சொல்கிருர்கள்...'

வறட்டு சிரிப்பு ஒன்று உதிர்ந்தது அவன் உதடுகளி லிருந்து.

'இன்று நீங்கள் என்னவோ போல் பேசுகிறீர்களே, அத்தான்?'

'என்றுமே நான் அப்படித்தான் இருந்திருக்கிறேன், காந்தி. ஆனால் உனது உணர்ச்சிப் பெருக்கிலும், இன்ப நினைவிலும், ஆசைக் கனவிலும் உன்னையே மறந்திருந்த நீ என்னை உள்ளது உள்ளபடி அறியவில்லை. நான் வாழத் தெரியாதவன்...வாழ முடியாதவன்...'

'இப்படியெல்லாம் சொல்லாதீர்கள், அத்தான். எனக்கு நீங்கள்தான் வாழ்வின் ஒளி என்று நம்பியிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், நீங்கள் ரொம்ப நல்லவர்...'

மாதவன் சிரித்தான்—கசப்பு நிறைந்த சிரிப்பு.

'இப்ப ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று திகைப்புடன் வினவினுள் அவள்.

'இன்னும் சில மாதங்களுக்குப் பிறகு நீ இப்படிச் சொல்லமாட்டாய், காந்தி!'

'நான் மாறிவிடுவேன் என்று நினைக்கிறீர்கள்?'

'இல்லை...நான் முற்றிலும் மாறிவிடுவேன். மாறத் திட்டமிட்டு விட்டேன்...'

'அப்படியென்ருல்?'

'காலம் கதையை விடுவிக்கும்! காந்தி, உன்னிடம் நான் விடைபெற்றுக் கொள்கிறேன். மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன சொன்னுலும்—நான் எத்தகைய அயோக்கியனுக மாறியிருந்தாலும்—காலம் என்னை எவ்விதக் கயவனுகவும் கல்நெஞ்சக் கொடியனுகவும் திருத்தி அமைக்கலாம் என்ருலும், உன் இதயத்தில் எனக்காக நீ தந்துள்ள இடத்தை அழித்து

விடாதே. இதுதான் உன்னிடம் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது...'

'இது என்ன அத்தான் இது? நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?...அத்தான்...'

உணர்ச்சித் துடிப்புடன் கைநீட்டிய காந்திமதியின் பிடிக்குள் சிக்க மறுப்பவன்போல் விலகி நின்முன் மாதவன்.

'காந்தி, உன் அப்பாவும் அம்மாவும் நிச்சயம் செய்துள்ள இடம் பெரிய இடம். பணமும் அந்தஸ்தும் நிறைந்தவர்கள்...'

கைகளால் தன் காதுகளைப் பொத்திக்கொண்ட காந்திமதி அலுப்புடன் சொன்னுள்: 'போதும் போதும். நீங்கள் ஒன்றும் வர்ணிக்க வேண்டாம்...'

மாதவன் தொடர்ந்து கூறினுன்: 'நான் எப்படி வாழப் போகிறேன், என்ன ஆவேன் என்று எனக்கே தெரியாது. ஆனுல் ஒன்று நிச்சயம். என் வாழ்க்கைப் பாதை பசும்புல் மெத்தென அமைந்த சமநிலத்தில் செல்லப் போவதில்லை. செங்குத்தான பாறைகள் மீதும், கிடுகிடு பள்ளங்களிலும், வழுக்குப் பிரதேசங்களிலும் செல்லக்கூடும்...'

'எங்கு போனுலும், எப்படி ஆயினும் நானும் உங்கள் நிழல் போல உங்கள் கூடவே வரத் தயாராக இருக்கிறேன். இன்றே இப்பொழுதே உங்கள் பின்னுல் நான் வந்துவிடுகிறேன்; அத்தான், என்னைக் கைவிட்டு விடாதீர்கள்' என்று கெஞ்சினுள் அவள்.

மாதவன் உறுதியாகத் தலை அசைத்தான். 'காந்தி, நான் உனக்குக் கேடு நினைக்க மாட்டேன். உன்னைப் போன்ற உத்தமப் பெண்ணோடு வாழ்ந்து சுகம் பெறும் பாக்கியம் செய்தவனில்லை நான். என்னோடு வாழத் துணிந்தாலும், நீ சுகம் பெறமாட்டாய். உன் வாழ்வை நீ பாழாக்கிக் கொள்வதோடு, என்னையும் செயலற்றவனுக்கி விடுவாய். எனது புதிய திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு...'

'நான் உங்கள் இஷ்டம்போல் துணை புரிவேன். என்னை நம்புங்கள்' என்று அழாக்குறையாக அறிவித்தாள் அவள்.

'கூடாது கூடாது...நான் போகிறேன்' என்று சொல்லி விட்டு வேகமாக நடந்தான் அவன். அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

காந்திமதிக்கு அழுகை பொங்கியது. நெஞ்சம் துயரத் தால் கனக்க, தொண்டையில் சோகம் அடைக்க, கண்கள் நீரைக் கொட்ட அவள் ஏக்கத்தோடும், ஏமாற்றத்தோடும் வீட்டுக்குள்ளே இருளில் கலந்துவிட்டாள்.

நிலவொளியில் குளித்தபடி நடந்த மாதவன் மனத்தில் ஓர் திருப்தி நிறைந்து நின்றது. 'இன்று அவளுக்கு ஏமாற்ற மும் வேதனையுமாகத்தான் இருக்கும். ஆனால் எதிர்காலத்தில் அவளே இந்தச் சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ச்சி அடைவாள் என்பது திண்ணம். குடும்பப் பெண்களில் அநேகருக்குக் கன்னிப் பருவக் காதல் தோல்வியாக முடிந்தபோதிலும், சம்பிரதாய ரீதியில் நடைபெறும் கல்யாணம் வாழ்வில் உறுதியும் நிச்சயமான ஒரு ஸ்தானமும் தகுதியும் பெற்றுத் தரும் நல் வாய்ப்பாகவே அமைகிறது' என்று நினைத்தான்.

'இதுதான் நான் செய்யும் கடைசி நல்ல காரியம்' என்ற எண்ணம் அவன் மனப்பரப்பிலே மின்வெட்டியது. 'நான் செய்ய ஆசைப்பட்ட நல்ல காரியம்கூட இன்னொரு ஆத்மா வுக்கு வேதனையும் அழுகையுமல்லவா தந்துவிட்டது!' என்றும் எண்ணுதிருக்க முடியவில்லை அவனால்.

நல்லவனாக வாழ்வதனால் லாபம் இல்லை என்று உணர்ந்த மாதவனின் முன்னோர்களில் எவரும் பூரண அயோக்கியர் களாக விளங்கியவர்கள் அல்லர்.

அவனுடைய தாத்தா ஒண்டிப்புலியா பிள்ளை ஊரில் நல்ல பெயரோடு வாழ்ந்து, சுய முயற்சியால் சொத்து சேர்த்து வைத்தார். தனது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியும் அளிக்க முடிந்தது அவரால். அவருடைய மூத்த

புதல்வரும், மாதவனின் தந்தையுமான சிதம்பரம் பிள்ளை பூரண யோக்கியருமில்லை. முழு அயோக்கியருமில்லை.

சிதம்பரம் பிள்ளை சர்க்கார் உத்தியோகத்தில், பொறுப்பான ஒரு பதவி வகித்தார். அந்தப் பதவிக்கு உரிய அதிகாரத்தைவிட அதிகமான ஆர்ப்பாட்டங்கள் செய்து அட்டகாசமாக வாழ முடிந்தது அவரால். அவருடைய எடுப்பான தோற்றமும், மிடுக்கான குரலும், யாருக்கும் அஞ்சாத துணிவும் அவருக்குப் பக்க பலங்களாக துணை நின்றன. மேலும், கால நிலையும் மக்களின் பண்பாடும் அவரைப் போன்றவர்களின் ஆட்சிக்கு உறுதியான தளம் அமைத்துக் கொடுத்தன.

'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை, சணப்பன் வீட்டு அம்மியையும் உடைக்கும்' என்ற அபத்தமான பழமொழியை வேதவாக்காக நம்பி, அடங்கி ஒடுங்கி அஞ்சிக்கிடந்தவர்கள் வாழ்ந்த காலம் அது. சிதம்பரம் பிள்ளையைப் போன்ற துணிந்த கட்டைகள் தங்கள் இஷ்டம்போல் ஆட்சிபுரிய முடிந்தது. தங்கள் அதிகார எல்லைக்குள் தாங்களே ராஜாக்கள் என்ற நம்பிக்கையோடு அவர்கள் தடியடி தர்பார் நடத்த முடிந்தது. அந்தக் காலத்திலே, அவர்களைத் தணிக்கை செய்வதாகப் பெயர் பண்ணி, 'அரித்துப் பொறுக்குவதற்காக' மேலதிகாரிகள் விஜயம் செய்தால், 'சில்லறை தேவதைகள்' ஜனங்களிடமிருந்து பிய்த்துப் பிடுங்கி 'துரை'க்குத் திருப்தியாக 'வாய்க்கரிசி போடுவது'ம் அனுபவ சாத்தியமாக இருந்தது அப்போது.

இந்த முறையினுல் இலாகா அதிகாரிகளிடம் நல்ல பெயர் பெற்ற பிள்ளையவர்கள் ஊராரிடம் நற்பெயர் சம்பாதிப்பதற்காகக் கோயில், தானதர்மம் முதலியவைகளில் கொஞ்சம் தாராளத்தனம் காட்டுவார். ஊரார் குறைகளை விசாரித்து ஆலோசனைகளும், தீர்ப்புகளும் வழங்குவார். தனிப்பட்ட முறையில் நலம் பெறுவதற்காக, மதுக்குடி, தாசி உறவு முதலியவற்றில் ஈடுபாடுடைய ரசிகராகவும் வாழ்ந்தார்.

தந்தையின் குணங்கள் மாதவனிடம் படிந்திருந்தன என்று சொல்வதற்கில்லை. சிதம்பரம் பிள்ளையின் போக்கை அங்கீகரிக்க முடியாமலும், இருப்பினும் ஆட்சேபிக்க திராணி இல்லாமலும், அனைத்தையும் ஜீரணித்து தர்மபத்தினிக்கே உரிய பொறுமையோடும், பண்பாட்டு நிறைவோடும் சகித்துக் கொண்டு வந்தாள் மீனாட்சி அம்மாள். அந்தத் தாய் மன வேதனை குமுறிக் கொதிக்கிறபோதெல்லாம் மாதவனை முன்னால் வைத்துக்கொண்டு, 'ஒரு பாட்டம்' புலம்பித் தீர்ப்பாள். தனது 'அம்மாவைக்கொண்டிருந்த' பையனுக்கு அவள் மீது அனுதாபமும் அன்பும் அதிகரித்ததோடு தந்தைமீது கோபமும் கசப்பும் ஏற்பட்டிருந்தன. அவர் செயலுக்கு அடிப்படைக் காரணங்களான மது, சர்க்கார் உத்தியோகம் முதலியவைகள் மேல் ஒரு வெறுப்பும் பிறந்திருந்தது. தனது தாயின் உள்ளத்துக்கு மகிழ்வும் அமைதியும் அளிக்கும் வகையில் தான் மிகவும் நல்லவனாக வளரவேண்டும் என்று ஆசைப்பட்டான். அந்த ஆசையைக் காப்பாற்றியும் வந்தான் அவன்.

தந்தையின் செலவுகளாலும், மரணப்படுக்கையில் கிடந்தபோது அவருக்குச் செய்த வைத்திய சிகிச்சைகளினாலும் குடும்பச் சொத்தும் கைப்பணமும் தீர்ந்து போயின. கடன்தான் மிஞ்சியது. சிதம்பரம் பிள்ளை செத்த பிறகு, அக்குடும்பத்தின் அந்தஸ்து மத்தியதர வர்க்கத்தின் மேல் தட்டிலிருந்து கீழ்ப்படிக்கு இறங்கியது. காலப் போக்கிலே தரித்திர நிலை என்பதையும் தொட்டது. மீனாட்சி அம்மாளும் காலமானபின், மாதவன் எப்படியோ நாள் ஓட்டி வந்தான். 'ஆள் பெயருக்கு' அவனும் நடமாடித் திரிந்தானே தவிர, நன்றாக வாழவில்லை. எனினும், நல்லவனாக வாழ முயல்வதை அவன் விட்டுவிடவில்லை.

'நல்லதனம்' அவனை எந்த வேலையிலும் ஒட்டிக்கொண்டிருக்க விடவில்லை. அரசாங்க இலாகா ஒன்றில் குமாஸ்தா வேலைக்குப் போனான். மேலதிகாரிகளின் மிடுக்கும், அதிகாரத் தோரணையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவ் வேலையை விட்டுவிட்டான். கடை ஒன்றிலே கணக்கு எழுதுகிறவனாகச் சேர்ந்தான். முதலாளிகளின் மனோபாவமும்

எத்துவேலைகளும் அவனுக்கு ஒத்துவரவில்லை. ஆகவே அதற்கும் கும்பிடு போட்டான். இப்படிப் பல துறைகளிலும் புகுந்து பார்த்து, அனுபவப்பட்டதன்மூலம் அவனுக்கு வெறுப்பும் கசப்பும் விரக்தியும்தான் வளர்ந்தன; பொருளாதார லாபம் எதுவுமே கிடையாது. முடிவில், விவசாயத்தில் ஈடுபட்டான். அது அவன் சோம்பலுக்கு உரமிட்டது. 'ஏதோ நமக்கும் பிழைப்பு என்று ஒன்று இருக்கிறது!' என்று பெயர் பண்ண உதவியது. பழங்காலத்துக் கவிராயர்கள் பாடி வைத்திருப்பதுபோல் பெருமதிப்போ, உயர்வோ, ஊதியமோ கொடுத்துவிடவில்லை, விவசாயம்.

அவனுக்கு நேரம் நிறைய இருந்தது. படிப்பதற்கும் சிந்திப்பதற்கும்தான். எனவே சைத்தான் மனசுக்கு சதா தொழில் இருந்தது. இதனுலெல்லாம் அவனுடைய வெறுப்பு நன்கு வளர முடிந்தது.

மாதவனுக்குச் சிறிதாவது இனிய உணர்வுகளும் நினைவுகளும் எழ வசதி அளித்த பூஞ்சோலையாக விளங்கியவள் அவனுடைய மாமா மகள் காந்திமதிதான். அவள் அவனையே மணம் புரிந்துகொள்ள வேண்டும்—கொள்ள முடியும் என்று நம்பியிருந்தாள். அவன் திருமணத்தைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்தது கிடையாது. பெரியோர்களாகப் பார்த்து, நிச்சயித்த 'சுபதினத்தில்' காந்திமதியை அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக்கியிருந்தால் அவன் மிக்க மகிழ்ச்சியே அடைந்திருப்பான்.

ஆனல், காந்திமதியின் தந்தை சங்கரலிங்கம் பிள்ளை சமூகத்தின் சரியான பிரதிநிதி. 'சொத்தோடு சொத்து சேர வேண்டும்' என்று திட்டமிட்டு வேலை செய்வதுதான் அவர் பண்பே தவிர, சொத்து மிகுந்தவர் ஏழையொருவனை வாழ வைக்கலாமே என்ற நல்லெண்ணத்துக்கும் அவருக்கும் 'ஒட்டுமில்லை உறவுமில்லை!' ஆகையினுல் அவர் உறவு முறையைப் பார்க்கவில்லை. பெரிய இடத்துப் பிள்ளையாண்டான்களின் ஜாதகங்களை ஆராய்வதில்தான் அக்கறை காட்டினர். அவர் ஆராய்ச்சி நல்ல பலன் அளித்தது. இருபோகம் வயல், தோட்டம், துரவு, வீடு, மாடுகள், ஏகப்பட்ட பணம் முதலிய

வைகளுக்கு அதிபதியான திருமலையப்பப் பிள்ளை என்பவரின் தன்னந்தனிப் புத்திர பாக்கியமான அம்பலவாணன் அகப் பட்டான். அவன் பட்டம் பெற்றவன் என்றும் பேச்சு அடி பட்டது. மாதவன் 'சும்மா பத்தாவது முடியப் படிச்சவன் தானே! அவன் பட்டம் பெற்ருனு; பாட்டைச் தொலைச் சாஞ? ஒரு எழவுமில்லையே. பின்னே?...'

இதனுலும் மாதவனின் வாழ்க்கையில் வறட்சி அதிக மாயிற்று; வெறுப்பு மிகுந்தது. பாலைப் பெருவெளியிலே தனது வாழ்க்கை வறண்ட தடமாகச் சாரமற்று நீண்டு போகிறது என்று குமைந்தான் அவன். தீவிரமாகச் சிந்தித்து, அதன் திசையைத் திருப்பிவிடுவது என்று துணிந்தும்விட்டான்.

கனவில் கண்ட காட்சியாக இருக்கலாம் அது. அல்லது என்றே ஏதோ ஒரு புத்தகத்தில் படித்து நினைவிலே நீங்காத இடம் பெற்றுவிட்ட சித்திரமாக இருக்குமோ?

அது எவ்வாறு இருப்பினும் மாதவன் உள்ளத்திலே அடிக்கடி நிழலாடும் சிறப்பு பெற்று விளங்கியது.

—கடல் கருமையாய், பயங்கரமாய், சீறிப் புரளும் அலைகளோடு காணப்படுகிறது. கண் பாய்கிற திக்கெல்லாம் தண்ணீர். பார்வை எட்டுகிற தூரமெங்கும் அதே பயனற்ற உப்புநீரின் உக்கிரத் தோற்றம். மேலே நம்பிக்கை அளிக்க இயலாத வானம். ஒரு கப்பல் போய்க்கொண்டிருக்கிறது. மேல் தளத்தில், கைப்பிடிக் கம்பி ஓரத்தில் நின்று வேடிக்கை பார்க்கிருன் ஒருவன், காற்று கொஞ்சம் கடுமையாகத்தான் வீசுகிறது. ஆகவே கப்பலின் அசைவு பயங்கரமாக இருக் கிறது. மனிதர்கள் ஊஞ்சலில் வைத்து ஆவேசமாக ஆட்டப் படுகிறவர்கள்போல் திணறுகிருர்கள்; திகைக்கிருர்கள்; தள் ளாடித் தடுமாறுகிருர்கள். ஓரத்தில் நின்றவன் எப்படியோ வழுக்கிக் கடலுக்குள் விழுந்து விடுகிருன்.

அதிர்ச்சியால் மூழ்கி எழுந்து, அலைகளால் எற்றுண்டு பின் ஒருவாறு சமாளித்து அவன் தலைதூக்கிப் பார்க்கிற

போது, கப்பல் தனக்காக நிறுத்தப்படவில்லை—மற்றவர்கள் தன்னைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை; இருக்கிறுளு, செத் தாளு என்று அக்கறை காட்டவுமில்லை. அவரவர் கவலையே பெரிதாய், அவரவர் காரியமே முக்கியமாய்ச் செயல்புரி கிருர்கள். அவன் கத்துகிருன், அலறுகிருன். அவனைப் பரிகசிப்பதுபோல் காற்று ஓலமிடுகிறது. அவனைக் கேலி செய்வதுபோல் அலைகள் அவன்மீது மோதி, மூஞ்சியில் அறைந்து ஆர்ப்பரிக்கின்றன.

கப்பல் தூர—தூர—தூரமே செல்கிறது. கண்ணுக்குச் சிறிதாகி, புள்ளிபோல் மங்கி, மறைந்தே போகிறது. அவன்—அந்தத் தனிமனிதன் குளிர்ந்த—கருமையான—உப்புச்சுவையே மிகுந்த—வெறிபிடித்த தண்ணீரிலே, செயல் திறம் இழந்த சுண்டெலிபோல் கிடந்து தவிக்கிருன்.

உலகமெனும் கடலிலே, வாழ்க்கைக் கப்பலில், திராணி யற்ற தனி மனிதர்களுக்கு இத்தகைய கவனிப்புதான் கிடைக் கிறது. தளத்திலே தம் கவலையே பெரிதாகித் தம்மிலே தாமே ஆழ்ந்து விளங்கும் ஜனக்கூட்டம்தான் சமூகம்...

இதை நினைக்கும்போதெல்லாம் மாதவனுக்கு, நீர் வெளியிலே நிலையற்றுத் திண்டாடும் அப்பாவி தானேதான் என்ற எண்ணமே படரும். உடனே அவனுடைய வெறுப்பு மிகுந்த வலிமை பெறும்.

'நமது வாழ்க்கையைத் தனியொரு கப்பலாக மாற்று வோம். அது வெறும் கப்பலாக இராது. வியாபார கப்ப லாகவோ, கொள்ளைக் கப்பலாகவோ விளங்காது. இதர கப்பல்களை மூழ்கடிக்கும் போர்க்கப்பலாக—வலுமிகுந்த நீர் மூழ்கியாக—முன்னேறும்' என்று அவன் நெஞ்சோடு கிளத்து வதும் உண்டு.

'வேளை வரவில்லை, இன்னும் வேளைவரவில்லை' என்று காத்திருந்த மாதவன், உரிய காலத்தைக் கணித்துக் கொண்டான். கிளம்பிவிட்டான். தனது துணிச்சலே துணையாக; பொங்கிப் பெருகும் வெறுப்பே துணிச்சலுக்குரிய ஜீவசத்தாக!

மாதவன் பட்டணம் வந்து சேர்ந்தான்.

—'கெட்டும் பட்டணம் சேர்' என்பது மட்டுமே சரி யென்றில்லை. கெடுவதற்கும், வேறு பலரைக் கெடுப்பதற்கும் பட்டணம் சேர்வது முறையேயாகும்.

அவனுடைய திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முதலில் எந்தத் துறையில் பிரவேசிப்பது என்று புரியவில்லை அவனுக்கு. நாளாவட்டத்தில சகல துறைகளிலும் தனது ஆட்சியை நிலைநாட்டுவது என்ற பரந்த லட்சியம் அவனுக்கு இருந்தது. ஆயினும், ஆரம்பத்தில் அடி பதிப்பதற்கு ஒரு சிறு இடமாவது வேண்டாமா?

'ஏதாவது கிடைக்காமலா போகும்! பார்த்துக்கொள்ள லாம்' என்ற தெம்புடன் கிளம்பினான் அவன். அவனிடம் கொஞ்சம் பணம் இருந்தது. பட்டினி கிடக்கக்கூடிய சக்தியும் பழக்கமும் இருந்தன. 'எப்படியும் ஒரு மாதத்தை ஓட்டிவிட லாம், அதற்குள் நிச்சயமாக ஒரு வாய்ப்பு ஏற்பட்டே தீரும்' என்ற நம்பிக்கையும் அவனுள் ஓங்கி வளர்ந்தது.

துணிந்துவிடுகிறவர்களுக்கு அதிர்ஷ்டமும் துணைபுரியும் என்று சொல்கிறார்கள். சில சமயம் அது சரி என்றே தோன்று கிறது. மாதவனுக்கும் 'அதிர்ஷ்டம்' ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொடுத்தது.

தற்செயலாக அவன் பார்வையில் பட்டது பத்திரிகை விளம்பரம் ஒன்று. பணக்காரர் ஒருவரின் செல்வ மகனுக்குக் கல்வி கற்பிக்கவும் நல்ல துணைவராக உதவவும் ஒருவர் தேவை; தங்கும் இடம், உணவு முதலிய வசதிகளும் செய்து தரப்படும் என்று கூறியது அது.

'ஆகா இதைவிட நல்ல வாய்ப்பு நமக்கு எங்கே எதிர்ப் படப் போகிறது? பணக்காரர் தன் பையனுக்குக் கல்வி புகட்ட விரும்புவது நியாயம். ஆனால் அவனுக்கோர் நண்பனாய், ஞானாசிரியனாய், வழிகாட்டியாய் விளங்கக்கூடிய ஒருவனைக் கூலிக்குப் பிடிக்க விரும்புகிறாரே அவர்; பணச் செருக்குத்தானே காரணம்!' என்று எண்ணினான் அவன்.

'காரணம் எதுவாக இருந்தால் நமக்கு என்ன? இந்த வேலை எனக்குக் கிடைத்தால், அதை முதல்படியாகக் கொண்டு மேலே முன்னேற முயற்சிக்கலாமே' என்று தீர்மானித்தான் அவன். குறிப்பிடப்பட்ட விலாசத்தைத் தேடிச் சென்றான்.

மாதவன் சந்தித்த 'பெரிய மனிதர்' பவானந்தம் வசதிகள் பலவும் படைத்தவர். அவருடைய பண மதிப்பு, அவர் தோற்றத்திலும் பார்வையிலும் பேச்சிலும் விளம்பரமாகிக் கொண்டிருந்தது. அவர் வீடு பெரிதாய் விசாலமாய் அமைந்திருந்தது. முன்புற 'கேட்'டிலிருந்து, வீட்டுக்குச் செல்ல ஒரு பர்லாங் தூரத்திற்கு அருமையான பாதை. அதன் இரு புறங்களிலும் பூத்துக் குலுங்கும் மலர்ச் செடிகள். அதை ஒட்டிய தோட்டத்தில் கண்ணுக்குக் குளுமை தரும் வகை வகையான பூச்செடிகளும், வெறும் இலை அடர்ந்த செடிகளும் தளதளவென்று நிமிர்ந்து நின்றன.

'இவ்வீட்டில் பஞ்சத்தின் சாயைக்கூடப் படியாது என்றே தோன்றுகிறது' என நினைத்தான் மாதவன்.

முன் அறையில், நன்கு விளைந்த தக்காளிப் பழத்தை ஞாபகப்படுத்தும் மேனி மினுமினுப்போடு ஈஸிசேரில் சுகமாகச் சாய்ந்திருந்தார் பெரியவர். அவர்தான் உயர்திரு. பவானந்தமாக இருக்கவேண்டும் என்பது முதல் பார்வையிலேயே அவனுக்குப் புரிந்தது.

அவன் திண்ணையில் அடி எடுத்து வைத்ததும் அவர் திரும்பி அவன் பக்கம் பார்வை வீசினார். 'யார்? என்ன விஷயம்?' என்று கேட்பதுபோல் தலையை ஆட்டினார்.

'விளம்பரத்தில் கண்டபடி...'

மாதவன் பேச்சை ஆரம்பித்ததுமே, அவர் வெடுக்கெனச் சொன்னார்: 'சரி சரி, கொஞ்ச நேரம் அங்கே நில்லு!' என்று.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பண மமதை' வாய் திறந்து விசாரிக்க முடியவில்லை, பாரேன். பேசத் தொடங்

கிறல், அதை முழுதும் கேட்கக்கூடவா முடியவில்லை?"— அவன் மனக்குறளி முனங்கியது.

அப்படி அவர் பிரமாதமான வேலை எதுவும் செய்து கொண்டிருக்கவில்லை அப்போது. பத்திரிகை படிப்பதுபோல் சும்மா பாவனை பண்ணுகிறார் என்றுதான் மாதவனுக்குப் பட்டது. 'தேடி வந்தவனை—அதிலும் வேலைகேட்டு வருகிற வனை—உடனடியாக விசாரித்துவிட்டால் அப்புறம் பணம் படைத்த சீமானுக்கு மதிப்பு என்ன இருக்கப்போகிறது? அவர் கௌரவம் இதுபோன்ற சமயங்களில்தானே கொடி கட்டிப் பறக்கமுடியும்!' என்று அவன் எண்ணினான்.

கால்மணி நேரம் கழிந்திருக்கும். அவர் பலமாகக் கனைத்துக்கொண்டார். திண்ணையின் பக்கம் கண் திருப்பினார். அவனை அப்பொழுதுதான் பார்த்தவர்போல, 'யாரது அங்கே நிற்கிறது? இப்படி முன்னாலே வா' என்று உத்திர விட்டார்.

மாதவன் அவர் எதிரே வந்து நின்றான். அவர் அவனை எடைபோடுவதுபோல் ஏற இறங்கப் பார்த்தார். அவன் தோற்றம் அவருக்குப் பிடித்திருந்தது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது எல்லோர் விஷயத்திலும் உண்மையாகிவிடுவதில்லை. குரூர முகம்படைத்த சிலர் நல்ல உள்ளம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். கொடிய செயல் கள் புரியும் சிலர் சதா இன்முகத்தோடு திரிகிறார்கள். மாதவனின் உள்ளத்திலே நிறைந்திருந்த கசப்பையும் வெறுப் பையும் அவன் முகம் எடுத்துக்காட்டவில்லை. 'அன்றலர்ந்த செந்தாமரையை' அது நிகர்த்திருக்கவில்லை என்றாலும் அதிலே ஒரு குளுமையும் சாந்தமும் நிலவியது. அறிவின் ஆழமும் அனுபவமும் ஒருவாறு பெற்றிருந்த அவன் கண் களில் விசேஷ ஒளி கனன்றுகொண்டிருந்தது.

'உம். உன்னை எப்படி நம்புகிறது?' என்று கேட்டார் அவர்.

'என்னை நம்புவதும் நம்பாமலிருப்பதும் உங்கள் மனசைப் பொறுத்தது. பத்திரிகையில் விளம்பரத்தைப் பார்த்தேன்.

அந்த வேலையை என்னால் சிறப்பாக செய்யமுடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால் வந்தேன்' என்று மாதவன் சொன்னான்.

பவானந்தம் அவனைக் கூர்ந்து நோக்கினார். 'நீ இன்னார், இப்படிப்பட்டவன் என்று தெரியாவிட்டாலும், உன்னைப் பற்றி எனக்குத் தெரிந்தவர்கள் எவரும் சிபாரிசு செய்யா விட்டாலும்கூட, நான் உன்னை இந்த வேலைக்கு ஏற்றுக் கொள்கிறேன். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம். உனக்கு உரிய அறையை வேலைக்காரன் காட்டுவான்' என்று அறிவித்தார்.

அந்தச் சமயத்தில் சிறுவன் ஒருவன் ஓடிவந்தான். பையன் பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருந்தான். அவனுக்குப் பன்னிரெண்டு வயது இருக்கும். எனினும், அவ்வயதுக்குரிய வளர்ச்சி பெறவில்லை அவன் உடல். ஒட்டக் கத்திரித்து விடப் பட்டிருந்த தலைமயிர், பருமனான தேங்காய்போன்ற மண்டை யையும், பெரிதாகப் புரண்டுகொண்டிருந்த முண்டக் கண் களையும் பளிச்செனக் காட்டும் பகைப்புலனாக அமைந் திருந்தது. அவன் பற்கள் மஞ்சள் நிறம் படிந்து காணப் பட்டன. அவ்வேளையில்கூட அவன் எதையோ வாயில் ஒதுக்கி வைத்திருந்தான் என்பதைத் துருத்தி நின்ற ஒரு பக்கத்துக் கன்னம் கூறியது. வெள்ளைச் சட்டையும், காக்கிக் கால் சட்டையும் அணிந்திருந்தான் அவன்.

'பாலச்சந்தர், இதோ இவர்தான் இனி உனக்கு உபாத்தி யாயர்—மிஸ்டர் மாதவன். இவர் சொல்படி நடக்க வேண்டும்' என்று பெரியவர் அறிமுகம் செய்துவைத்தார்.

மாதவனிடம் அவர் தெரிவித்தார்: 'நாங்கள் வெளியூர் களிலேயே அதிகம் சுற்றிக்கொண்டிருந்தோம். அதனால் பையனுக்குத் தமிழ் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாது. அதைத்தான் நீர் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். பொது விஷயங்களில் அறிவுபெறச் செய்வதும் முக்கியம்தான்.'

தனிமையில் 'நீ' போட்டுப் பேசிய பெரிய மனிதர் பையன் முன்னே, அவனது வாத்தியார் என்று மதிப்பு

கொடுத்து 'நீர்' என்று குறிப்பிட்டதை மாதவன் கவனிக்கத் தவறவில்லை. அவன் மனம் சிரித்தது.

'மாணிக்கம்!' என்று கூப்பிட்டார் பவானந்தம். வேலைக்காரன் வந்ததும், 'தோட்டத்து ரூமை இவருக்குக் காட்டு. சாவியை இவரிடமே கொடுத்துவிடு. இவருக்குத் தேவையானதை எல்லாம் அவ்வப்போது கவனித்துச் செய்' என்ருர். 'பாலச்சந்தர், நீ சாப்பிடப்போகும்போது, உன் ஸாரையும் கூட்டிக்கொண்டு போ. தினம் அப்படியே செய்யலாம்' என்று மகனிடம் சொன்ஞர்.

'ஓ!' என்று கூறியவாறே ஓடிப்போஞன் அவன்.

'பாலச்சந்திரன் கெட்ட பையன் என்று சொல்ல முடியாது. அடம் கொஞ்சம் ஜாஸ்தி. எதுக்கெடுத்தாலும் அழுவான். அது பலவீனத்தாலும், பிறர் தன்னைப் புறக்கணிக்கிருர்கள் என்ற நினைப்பாலும் வந்த சுபாவமாக இருக்கலாம். நீர் கவனித்து அட்ஜஸ்ட் செய்துகொள்ளும்' என்று கூறி பெரியவர் மாதவனை மாணிக்கத்தோடு அனுப்பிவைத்தார்.

தோட்டத்தின் ஒரு மூலையில், கார் நிறுத்துமிடமருகே 'ஷெட்' போன்ற ஒரு அறை இருந்தது. அதுவும் முன்பு கார் நிற்குமிடமாகவோ, வண்டி நின்ற இடமாகவோ இருந்திருக்கலாம். விசாலமாகத்தான் இருந்தது. சுவர்களில் இரண்டு அலமாரிகள் கதவுகள் இல்லாமல் காட்சி தந்தன. ஒரு பக்கம் ஓரே ஒரு ஜன்னல் காணப்பட்டது. இது போதும். ரயிலடியிலும், பார்க் பெஞ்சிலும் படுத்துத் தூங்கி அனுபவம் பெற்றுள்ளவனுக்கு இது பிரமாதம் என்றே சொல்ல வேண்டும்' என எண்ணிக்கொண்டான் மாதவன்.

மாதவனுக்காக ஒரு நாற்காலி, ஒரு மேஜை, நீளமான பெஞ்சு ஒன்று; சாதாரண ஜமுக்காளம், தலையணை, தண்ணீர் வைக்க மண் கூஜா, கண்ணுடித் தம்ளர், அரிக்கன் லாந்தர், மண்ணெண்ணெய்ப் புட்டி எல்லாம் ஒழுங்காக வந்து சேர்ந்தன. 'பரவாயில்லியே! வசதியான ஏற்பாடுதான்' என்று மகிழ்ந்தது அவன் உள்ளம்.

'வேறு ஏதாவது வேண்டுமா ஸார்?' என்று கேட்டபடி வந்து சேர்ந்தான் பாலச்சந்திரன்.

'எழுதுவதற்குத் தாள், பேனா, மைக்கூடு, பென்சில், புத்தகங்கள் ஏதாவது இருந்தால்...' என்று இழுத்தான் மாதவன்.

'இந்தாங்க. உங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளலாம். அப்பா உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க" என்று கூறி சந்திரன் அவனிடம் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தான்.

'அடடே!' என்று குதித்தது மாதவ மனக்குறளி. 'நான் வாய் திறந்து கேளாதபோதே அவர் இதெல்லாம் ஏற்பாடு செய்வார் என்று எதிர்பார்க்கவே இல்லையே' என்ற எண்ணமும் மகிழ்ச்சியும் பிறந்தன அவனுக்கு.

இதைப்போலவே சாப்பாட்டு வசதியும் பிறவும் அவனுக்கு மிகுந்த திருப்தி தந்தன. 'ஆகவே, அடிப்படைப் பிரச்சினைகளைப்பற்றிய கவலை இப்போதைக்கு இல்லை. முதல் முகாம் அமைத்தாயிற்று. இனி முன்னேறுவதற்கு வேண்டிய வழி வகைகளைப்பற்றி யோசிக்கலாம்' என்று முடிவுசெய்தான் அவன்.

மேஜை முன் அமர்ந்து மாதவன் என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். அந்த இடத்துக்கு அவன் வந்துசேர்ந்த மறுநாள். பிற்பகல் நேரம். பெரிய வீட்டார் அனைவரும் உண்ட கிறக்கத்தில் சொக்கிக் கிடக்கும் வேளை.

வாசலுக்கு வெளியே 'ஸார் மோர் இங்கிறதெல்லாம் இவர்தானுக்கும்?' என்ற இளம் குரல் எழுந்தது. மாதவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். யாரும் தென்படவில்லை. எனினும் அவன் அந்தப் பக்கமே பார்த்தபடி இருந்தான்.

சிறு நெற்றியும், அதன்மீது வந்து விழும் கிராப்புத் தலை முடியும், குறுகுறுக்கும் கண் ஒன்றும்—முகத்தின் ஒரு பகுதி மட்டும்—எட்டிப் பார்க்கவே, மாதவன் புன்னகை புரிந்தான். 'படக்'கென்று பின்வாங்கிக்கொண்டது அந்த முகம்.

அவன் விளையாட்டுக் குரலில் உரக்கவே பேசினன்: 'பார் பார் மந்திரமில்லே; மாயமில்லே! அருமையான வேலே. ஜோரான காட்சி, ஒரு பையன் வரப் போருன் பார். உள்ளே வந்து குதிக்கப் போருன் பார்!'

அடக்கமுடியாத சிரிப்பு பொங்கி வழிந்தது வெளியே. 'ஏஹே, பையனும்! பெண்ணைப்போயி பையன்னு சொல்றர் போய் இந்த ஸார்' என்று கூவிக்கொண்டு வாசலில் வந்து கோலம் முழுதும் காட்டி நின்ருள் ஒரு சிறுமி. அவள் சிரிப்பு இன்னும் குறையவில்லை.

'இந்தப் பெண்ணின் தலைமுடியை வெட்டிவிடாமல் நீளமாக வளரவிட்டிருந்தால் அழகாக இருக்கும்' என்ற நினைப்பே மாதவனுக்கு முதலில் எழுந்தது அந்த அழகு முகத்தைப் பார்த்ததும்.

கவுன் அணிந்து, முற்றிய நாகரிகத்தின் சிற்றுருவப் பதிப் பாக நின்ற அப்பெண் பல்லைக் காட்டினுள். 'சரியான அரிசிப் பல், பச்சரிசிமாதிரி' என்று பேசியது அவன் மனம்.

'நீ பாலச்சந்திரனின் தங்கச்சிதானே?' என்று அவன் கேட்டான்.

'ஏஹே, தங்கச்சியாம்! எனக்கு வயசு பதிமூணு ஆகுது. பாலுவுக்கு பதினெண்ணே முக்கால்தானே ஆகுது. நான் எப்படி தங்கச்சி ஆவேன்?' என்று கைகொட்டிச் சிரித்த அச் சிறுமி அறைக்குள் வந்து ஒரு சுற்றுச் சுற்றி நின்ருள்.

'நீங்கதானே புது ஸார்? எனக்குத் தெரியுமே!' என்று நீட்டினுள் அவள்.

'எப்படித் தெரியும்?'

'தெரியும்' என்று அழுத்தமாகக் கூறினுள் அவள். 'உங்க பேருகூட எனக்குத் தெரியுமே!'

'என்னவாம்?'

'ஊகுங், சொல்லமாட்டேன்' என்று உதடுகளை மூடிக் கொண்டு குட்டையான மயிர் வீசி ஆடப் பலமாகத் தலையசைத்தாள் சிறுமி.

'உன் பேரும் எனக்குத் தெரியும்' என்றான் மாதவன்.

'சொல்லுங்களேன் பார்ப்போம்' என்று சவால் விட்டாள் அவள்.

'சொல்ல முடியாது.'

'ஏஹே, தெரிஞ்சாத்தான் சொல்லுவீங்களே. உங்களுக்குத் தெரியாது அதுதான்' என்று சொல்லிச் சிரித்தாள் அச்சிறுமி.

'அப்படியானால் என் பெயரும் உனக்குத் தெரியாது என்றுதான் சொல்லணும்.'

'எனக்கா தெரியாது? உங்க பெயரு மாதவன்—மிஸ்டர் மாதவன்!'

'உன் பெயர் வந்து...'

'ஏஹே, தெரியாதே! தெரியாதே...ஸார் ஸார்—மொளக்கு ஸார்—கம்பளி மொட்டை டேக்கு ஸார்—வீண் ஜம்பம் பேசுறார்!'

அவளுக்கு உற்சாகமான உற்சாகம்! துள்ளினாள், குதித்தாள், சுற்றிச் சுழன்று பம்பரம் மாதிரி ஆடினாள். ஆடி ஆடி அவன் அருகிலேயே வந்துவிட்டாள்.

அவள் கூத்தாட்டம் சிறிது ஒடுங்கியதும் மாதவன் சொன்னான்: 'உன் பேரு பேபி. ஆமாம், பேபிதான்!'

அவள் ஆச்சர்யத்தால் வாய் பிளந்து, ஆடாமல் அசையாமல் பொம்மை மாதிரி நின்றுவிட்டாள். பிறகு, 'உங்களுக்கு எப்படி ஸார் தெரியும்' என்று கேட்டாள்.

'தெர்ர்ரியும்!' என்று அவளைப்போலவே பேசிக் காட்டினான் அவன்.

'பாலு என்னைப்பற்றி உங்ககிட்டே சொல்லலேன்னு சொன்னானே?'

'அவன் சொல்லலே...'

'பின்னே?'

'எனக்கு மந்திரம் தெரியும்!'

'போங்க ஸார்! உங்களுக்கு மந்திரமும் தெரியாது, ஒரு மண்ணும் தெரியாது. அதுதான் முதல்லேயே புரிஞ்சு போச்சுதே. பெண்ணைப்போயி பையன்னு சொன்னீங்களே, அப்பவே... எப்படித் தெரியும், சொல்லுங்க ஸார்!' அவள் குரலில் கெஞ்சலே மிகுந்திருந்தது.

'எப்படியோ தெரியும்' என்று சொல்லி, குறும்பாகச் சிரித்தான் அவன்.

'எப்படி ஸார்...சொல்லுங்களேன்...ஐயோ, தயவு செய்து சொல்லுங்களேன்!'

'எப்படியா?...வந்து... அனுபவத்திலேதான்!' குறும்புச் சிரிப்பு நீங்காது நின்றது அவன் உதடுகளில்.

'சொல்லமாட்டீங்களா?'

'தமிழ்நாட்டில்...'

'என்னவோ கேட்டால் நீங்க தமிழ்நாட்டிலேன்னு பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கிறீங்களே!' என்று அலுத்துக் கொண்டாள் அவள்.

'அவசரப்படாமல் நான் சொல்வதைக் கேளேன். தமிழ் நாட்டில்—பார்க்கப்போனால், கேரளம், ஆந்திரம் முதலிய பல பிரதேசங்களிலும்கூட—பெற்றோர்கள் தங்கள் முதல் பெண்ணை அல்லது ஏதாவதொரு பெண்ணை, பேபி என்றே அழைக்கிறார்கள். பேபி என்ற பெயரில் அவர்களுக்கு அவ்வளவு மோகம்...'

அவன் பேசுவதை—அசையும் உதடுகளையே—வியப்புடன் கவனித்து நின்ற பேபி 'குபுக்கென்று' சிரித்தாள்.

'என்ன? இப்ப என்ன சிரிப்பு?' என்று அவன் விசாரித்தான்.

'நீங்கள் புத்தகம் மாதிரிப் பேசுகிறீர்களே, சாதாரணப் பேச்சா இது!'

'நான் ரயில் மாதிரி—எக்ஸ்பிரஸ் ட்ரெயின் மாதிரி நடப்பதாக ஒருவர் சொல்வது வழக்கம். நீ என்னடான்னு இப்படிச் சொல்கிறே...'

'ரயில் மாதிரி எப்படி நடக்க முடியும்?'

'அதாவது, வேகமாய்—ரொம்ப வேகமாய்... ஜிகு—ஜிகு ஜிகு—ஜிகு ஜிகுன்னு...'

அவன் வெறும் சொல்லுடன் நின்றுவிடாமல், வேகமாக எழுந்து அதிவேகமாக நடந்து காட்டலானான். அப்பொழுது அவனே ஒரு 'விளையாட்டுப் பிள்ளை'யாகிவிட்டான்.

பேபிக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. வயிற்றைப் பிடித்துக்கொண்டு குனிந்து குனிந்து சிரித்தாள். தரையில் விழுந்து உருண்டு புரண்டு சிரித்தாள். சிரிப்பால் அவள் முகம் செக்கச் சிவந்தது. கண்களில் நீர் தேங்கியது, 'போதும் ஸார்... வயிறு வலிக்குதே...போதுமே' என்று சொல்லிக் கொண்டு சிரித்தாள்.

அவன் நாற்காலியில் அமர்ந்தான். அவள் எழுந்து 'அப்பா!' என்று ஆசுவாசப் பெருமூச்செறிந்தாள். அவளது சின்னஞ்சிறு உதடுகள் துடித்தன. இன்னும் சிரிப்பை அள்ளி அள்ளிக் கொட்டத் தயாராகும் அழகிய ஊற்று மாதிரி தோன்றியது அவள் வாய்.

'நீங்க ரொம்ப நல்ல ஸார்!' என்று சொல்லிக்கொண்டு அவன்மீது சாய்ந்தாள் பேபி.

மாதவனின் மனம் குறுகுறுத்தது, காந்திமதிக்குச் சொன்ன பதிலை—'இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பிறகு நீ இப்படிச் சொல்லமாட்டாய் பெண்ணே!' என்று—இவளிடமும் கூறலாம்போலிருந்தது. ஆயினும் அவன் ஒன்றும் சொல்லாமல் சிரித்து வைத்தான்.

'நீங்க எனக்கும் ஸாராக வரலியேன்னுதான் வருத்தமா இருக்கு' என்று முனங்கினாள் அவள். உடனேயே குதித்து எழுந்து, வெளியே துள்ளி ஓடினாள்.

'சந்தோஷம் மிகுந்த குழந்தை!' என்று நினைத்தான் மாதவன்.

"எனக்கு உங்களை ரொம்பவும் பிடித்திருக்கு ஸார்" என்று பாலசந்திரன் மாதவனிடம் சொன்னான். அவர்கள் இருவரும் பழக ஆரம்பித்துச் சில தினங்கள் சென்ற பிறகு தான் சொன்னான்.

'அப்படியா! ரொம்ப சந்தோஷம்' என்றான் மாதவன். 'பிடிக்காதா பின்னே, உன் இஷ்டம் போலவே எல்லாக் காரியங்களையும் செய்யலாம் என்று ஆதரிக்கிறபோது!' என அவன் மனக்குறளி கனைத்தது.

'அதனாலே இப்ப உங்களுக்கு இதோ ஒரு அன்பளிப்பு' என்று கையை நீட்டினான் சந்திரன். அதில் இனிய சாக்லெட் துண்டுகள் மூன்று பளிச்சிட்டன.

மாதவன் அவற்றை எடுத்துக்கொண்டான்.

'எனக்கு சாக்லட்டு என்றால் உயிர்' என்றான் பையன்.

'சாக்லட்டுகளை மட்டுமே தின்று ஒருவன் உயிர் வாழ முடியுமா என ஆராய்வது அருமையான விஷயமாகத்தானிருக்கும். பயனுள்ள, சுவை மிகுந்த காரியமாகவும் அமையும்.'

'ஆனால் பெரியவங்க அடிக்கடி கண்டிக்கிறாங்க, ஸார். ஏய் சாக்லட்டு நிறையத் தின்னாதே; பல்லு கெட்டுவிடும்; வயிறு கெட்டுப்போம் என்றெல்லாம் மிரட்டுகிறாங்களே?'

'சின்னவர்களைக் கண்டிக்காமலும், அடிக்கடி அதட்டியும் அடித்தும் மிரட்டாமலும் இருந்துவிட்டால் அவர்கள் பெரியவர்கள் என்பது எப்படித் தெரியும்? தங்கள் சூரத்தனங்களை எல்லாம் அவர்கள் பையன்களிடமும் சிறுமிகளிடமும் தானே காட்ட முடியும்!'

மாதவனின் பேச்சு மாணவனுக்குப் பிடித்திருந்ததில் வியப்பெதுவும் இல்லையே!

'பசித்தால்தான் புசிக்க வேண்டும் என்பது சரியா?' என்று கேட்டான் சந்திரன் ஒரு சமயம்.

'சரி என்று எப்படிச் சொல்வது? பசிக்கிறபோது சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் ரொம்பப் பேர். ஆகவே அகப்படுவதை எல்லாம்—அகப்படுகிறபோதெல்லாம்—சாப்பிடுவதுதான் மனிதத் தன்மையாகும்' என்று விளக்கம் கொடுத்தான் மாதவன்.

'பொய் சொல்வதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று சிறுவன் விசாரித்தபோது, மாதவன் அறிவித்தான்:

'பொய் சொல்லவேண்டியது அவசியம்தான். பொய் சொல்லாமலே எவனும் வாழ்ந்துவிட முடியாது, பொய் சொல்வது பாபம் என்பது சும்மா. பொய் சொல்லுவது தனித் திறமையாகும். அதனால் கற்பனை வளரும். பொய் தான் கலைகளுக்கே ஜீவாதாரம்...'

இந்த விதமாக அவன் சிறுவனுக்குப் புதுமுறைப் பயிற்சி அளித்து வந்தான்! பையன் அணில் பிள்ளையைக் குறி வைத்துக் கல்லெறிந்து கொல்வதில் ஆர்வம் காட்டினான். மாதவன் அவனைத் தடுக்கவில்லை. அது தவறு என்று போதிக்கவுமில்லை.

'அணில்களை மட்டும் அடிப்பதுடன் உன் வேட்டை நின்றுவிட வேண்டாம். குருவிகளையும் குறி பார். கொல்ல முடிந்ததை எல்லாம் கொல்லு. இப்படிப் பயிற்சி பெற்றுக் கொண்டே வந்தால் என்றைக்காவது ஒருநாள் நீ சிங்கம், புலி முதலியவற்றைக்கூடக் கொல்லும் திறமை பெற்றுவிடுவாய்' என்று உற்சாகப்படுத்தினான்.

மாதவனின் பயிற்சி உண்மையிலேயே புதிய முறையில் தான் அமைந்திருந்தது. சின்னப் பையனுக்கு இயல்பாக உண்டாகக்கூடிய துஷ்ட குணங்களை எல்லாம் குறும்புத்தனங்கள்—கோளாறுகள்—ஆசைகள்—வெறித்தனங்கள் முதலிய பலவற்றையும் அவன் ஆதரித்தது மட்டுமல்ல; அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய முயற்சிக்காமல், ஓங்கி வளருவதற்குத் தேவையான தூண்டுதல்கள்—அளித்து வந்தான்.

'வாழ்க்கை நல்லவர்களை ஆதரிப்பதில்லை. ஆகவே நல்லவனாகக் காலம் கழிப்பதற்கோ, நல்லவர்களைத் தயாரித்து விடுவதற்கோ, அருகதையற்றது இந்த வாழ்க்கை' என்று அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

மாதவன் பேபிக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஆயினும் அவன் நேரடியாக அந்தச் சிறுமிக்குப் போதனைகளோ, தனது புதுமுறைப் பயிற்சியோ அளிக்க முன்வராமல் கதைகள் மூலமும் ரசமான சம்பாஷணை மூலமும் கோளாறான எண்ணங்களைக் கற்பித்தான்.

மேல்நோக்கில் அவை 'கோளாறான கருத்துக்கள்' என்று தோன்றா. ஆனால் நடைமுறையில் அவை விபரீத பலன்களையே தரும். இதை அவன் நன்கு அறிந்திருந்தான்.

'உண்மை சொல்வது நல்லது, பேபி. மனசில் பட்டதை அப்படியே சொல்லிவிட வேண்டியதுதான்' என்று அவன் அச்சிறுமியிடம் கூறினான்.

'உள்ளதைச் சொல்வதுதான் எனக்குப் பிடிக்கும். சரி என்று பட்டால், நான் கண்டிப்பாய்ச் சத்தம் போட்டுச் சொல்லி விடுவேன்' என்று பேபி பெருமையாகச் சொன்னாள்.

'அதுதான் சரி. உண்மையை எடுத்துச்சொல்ல நாம் ஏன் பயப்படணும்? என் மூஞ்சி நல்லாயில்லை என்றால், மூஞ்சியைப் பாரு கொழுக்கட்டை மூக்கும், கோலிக்காய் கண்ணும், மாட்டுப் பல்லும், மொட்டைத் தலையும்னு உனக்குத் தோணுவதைச் சொல்லிவிடு!'

பேபி சிரித்தாள்: 'நான் எப்பவுமே அப்படித்தான் ஸார். என் மனசில் உள்ளதைச் சொல்லிவிடுவேன். ஒரு தாத்தா வருவார். அவர் மீசை ஆட்டுக்கொம்பு மாதிரி இருக்கும். அதை அவரிடமே சொல்லிப்போட்டேன். வேறொரு மாமாவுக்குத் தொந்தி வயிறு...''இதென்ன, நீங்க பிள்ளையாரு மாதிரி இருக்கிறீங்க! குறைத்துச் சாப்பிடப் படாதோ?'' என்று கேட்டேன்...'

'நல்ல காரியம் செய்தே, பேபி' என்று அவன் பாராட்டினான்.

'பெரியவங்க என்னை வாயாடி, போக்கிரி என்று சொல்றாங்களே!' என்று குறை கூறினாள் அவள்.

'உண்மையைச் சொல்றவங்களை இப்படித்தான் ஏசுவார்கள். அதற்குப் பயந்துதான் முக்கால் வாசிப்பேர் உள்ளதை உள்ளபடி சொல்வதற்குத் தயங்குகிறார்கள்.'

'நான் பயப்படவே மாட்டேன்' என்று திடமாக அறிவித்தாள் பேபி.

'பேஷ்! துணிச்சல்காரி!' என்று அவள் முதுகில் தட்டிக் கொடுத்தான் மாதவன்.

இந்த முறைகள் பலவும் சிறிது சிறிதாகத் தம் வேலையை நிறைவேற்றும் என்பதை அவன் உள்ளம் தெரிந்து கொண்டது. 'எனக்கு அவசரம் எதுவுமில்லை. யார் எதற்காக அவசரப்படவேண்டும்?' என்று எண்ணினான் அவன்.

பாலச்சந்திரனுக்குப் பல இடங்களையும் காட்டுவதாகப் பெயர் பண்ணிக்கொண்டு மாதவன் நகர் நெடுகிலும் சுற்றினான். தான் மட்டும் தனியாகவும் திரிந்தான். நகரத்தையும், நகர மக்களின் வாழ்க்கை முறைகளையும், நாகரிகத்தின் போலித்தன்மைகளையும், சமூகத்தின் கோளாறுகளையும், மனிதரின் சிறுமை பெருமைகளையும் ஆராய்வது அவனுக்குப் பொழுதுபோக்கு ஆயிற்று.

நாகரிகப் பெருநகரம்—முரண்பாடுகளின் கொலு மண்டபம். உயர்வு தாழ்வுகளையும், மேடு பள்ளங்களையும் காட்டியும் காட்டாமலும் பாதுகாக்கின்ற களஞ்சியம். சகலவிதமான பண்புகளும் பல்கிப் பெருக இடமளிக்கும் வளமான பண்ணை...

அதில் காலூன்றி விட்ட மாதவன் தனது எண்ணங்களையும் ஆசைகளையும் பயிரிட்டு வெற்றிகரமான விளைவு காணத் தவித்தான். எதிரியின் கோட்டைக்குள் புகுந்து, அவனுடைய

பலத்தையும் பலவீனத்தையும் விழிப்புடன் கவனித்து உரிய முறையில் படையெடுத்துத் தாக்குவதற்கு வேளையும் வழியும் தேடுகிற உளவாளிபோல் அவனும் கணித்து வந்தான்; காத்திருந்தான்.

அதே சமயத்தில் அவன் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த வெறுப்புத் தீ அணைந்து போகாமலும் கவனித்து வந்தான். உல்லாச வாழ்வு வாழ்கிற சீமான்களையும் ஒய்யாரிகளையும் காணும்போதெல்லாம், 'இப்படி வாழ்வதற்கு இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்று சீறியது அவன் மனம்.

—இப்போது சுக சௌகரியங்களோடு வாழ்கிறவர்கள், செல்வமும் சிறப்பும் பெற்றுள்ளவர்கள் 'போன ஜன்மத்தில்' புண்ணியம் செய்தவர்களாம்! இதுபோன்ற அபத்தமான கருத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா? இன்று அவர்கள் நடத்துகிற வாழ்வு முறைகளைக் கவனித்தால், அவர்கள் முன்பு புனிதராய்—புண்ணியராய்—நல்லவராய்க் காலம் கழித்திருப்பார்கள் என்று தோன்றவில்லை. புண்ணியம் செய்து, 'மறுபிறப்பில்' சீரும் சிறப்புமாக வாழும் பாக்கியம் பெற்றவர்கள் இந்த வாழ்வில் பன்றித்தன வாழ்வு வாழ்வதேன்? இப்படி வாழ்வதற்காக, ஒரு ஜன்மம் பூராவும் நல்லவனாக கஷ்டப்பட வேண்டுமா? இப்பொழுது மோசமாக வாழ்வதற்காக 'அடுத்த ஜன்மம்' தொல்லைகள் நிறைந்ததாக அமையும் என்று சொல்வார்கள். உத்தம வாழ்வு வாழ்ந்ததற்குப் பரிசாக சீர்கெட்ட வாழ்வு வாழ வசதிகளும் பக்குவ நிலையும் அளித்துவிட்டு, அப்புறம் 'இப்படி வாழ்ந்தாயே!' என்று தண்டனை கொடுக்க முனைவதில் என்ன நியாயம் இருக்கமுடியும்? இவ்வாறு வாழ்க்கை நியதிகளை வகுக்கும் சக்தி—அது எதுவாக இருந்தாலும், அதன் பெயர் என்னவாயிருப்பினும்—கொடியது; நேரிய பண்புகளற்றது; அறிவற்றதும்கூட!

மாதவனின் சிந்தனை தடம் புரண்டு ஓடுகிறபோது, அவன் கால்களும் எங்கெங்கோ நடக்கும். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றிலே விசித்திரமான சம்பவம் எதிர்ப்பட்டது.

அந்தி வேளை. ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத தெரு ஒன்றின் நடுவில் அவன் மெதுவாக நடந்து சென்றான். அழகும் அமைதியும் நிறைந்த குறுகலான வீதி அது. திடீரென்று அவனுக்குப் பின்னால் சிரிப்பொலி வெடிக்கவும், அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அருமையான கார் ஒன்று வந்தது. அது வந்த சத்தமே கேட்கவில்லை அவனுக்கு. அதனுள் பகட்டாக ஆடை அணிந்த ஒருவனும், ஒய்யாரி ஒருத்தியும் இருந்தார்கள். அவளிடம் அழகைவிட, கவர்ச்சி அதிகமிருந்தது. அவள் கண்கள் காந்த சக்தி பெற்றிருந்தன!

மாதவன் விலகாமல் அவள் முகத்தையே பார்த்தபடி நின்றுவிட்டான். 'ஏ மடையா, வழியை விட்டு விலகு. ஏன் இப்படி முழிச்சபடி நிக்கிறே?' என்று கத்தினான் காரில் இருந்தவன். அவள் மீண்டும் சிரித்தாள். 'பைத்தியம் போலிருக்கு!' என்று அவள் முணுமுணுத்தாள். அது மாதவன் காதுகளிலும் பட்டது.

அவன் பாதை ஓரம் சென்றான். நின்று, சூடாக ஏதாவது சொல்ல வேண்டும் என்று தீர்மானிப்பதற்குள் கார் வேகமாக நகர்ந்தது 'ம டை ய ன்! பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்க்கிறமாதிரி ...' கார் ஓட்டியவனின் பேச்சு பூராவும் நன்கு காதில் படாதவாறு அமுக்கியது அலங்காரியின் கலகலச் சிரிப்பொலி.

மாதவனுக்கு ஆத்திரம் பொங்கியது. 'பணத்திமிர் படைத்த வீணர்களே!' என்று கத்தினான். காரில் இருந்தவர்களுக்கு அது கேட்டிருக்குமோ என்னவோ, அவனுக்குச் சிறிது திருப்தி ஏற்பட்டது.

'ரோடு கார் வைத்திருப்பவர்களுக்கு மட்டும்தான் சொந்தமோ? நடந்து போகிறவன் எப்பவும் தரித்திரம் பிடித்த—மகா மோசமான—ஓரத்திலேதான் போகவேண்டுமாக்கும்?...மடையனாம்! அந்தப் பயல் பேசிவிட்டான். அவளுக்கு இளிப்பு தாங்கவில்லை. அவள் அவனுடைய மனைவியோ, இல்லை வேறு யாருமோ! காமவெறி பிடித்த

ஆசை நாயகியாகத்தான் இருப்பாள்...' வாழ்க்கையை அனுபவிக்கத் துணிந்த எவளாகவேனும் இருப்பாள்...'

அவன் உளக்கொதிப்பு தணிவதற்கு வெகுநேரம் பிடித்தது. அதற்குள் அவ்விருவருக்கும் அவன் அர்ச்சித்த ஏச்சுக்கு ஒரு அளவு கிடையாது. அப்படியும் திருப்தியுருத அவன் மனம் 'இருக்கட்டும்; அந்த முகத்தை நான் மறக்கமாட்டேன். நான் சிரிப்பதற்கு உரிய காலம் ஒன்று வரும். கடைசியாகச் சிரிப்பவனே வெகு நேரம்வரை சிரிப்பான் என்றொரு வசனம் இருக்கிறதே, அதை மெய்ப்பித்துக் காட்டுவேன்' என்று முணுமுணுத்தது.

பவானந்தம் 'பெரிய மனிதர்' என்று பெயர் பெறுவதில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். தாம் 'ரொம்பப் பெரியவர்' என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. அப்பாவி ஜனங்களுக்கு அது தெரியவில்லையே!

அவரிடம் பணமும் சொத்தும் நிறையவே இருந்ததால், தமது ஆசையை எளிதில் பூர்த்தி செய்து விடலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது.

அது வெகு சீக்கிரமே நிறைவேறிவிடும் என்றுதான் மாதவனுக்குத் தோன்றியது. பவானந்தத்தைக் கண்டு போக வந்தவர்களை எல்லாம் அவன் அளவிட்டதனால் எழுந்த எண்ணம் அது.

கலைஞர்கள் என்று சொல்லிக்கொண்டவர்களும், கவிஞர்கள் எனப் பெயர் பண்ணியவர்களும், பத்திரிகை ஆசிரியர்கள் என வெளிச்சமிட்டவர்களும், அரசியல் தலைவர்கள் என்று விளம்பரப்படுத்திக்கொள்கிறவர்களும் அவரைச் சந்தித்துப் பேச வந்தார்கள். அவருடைய மேலான யோசனைகளையும், சுயம்புவான அபிப்பிராயங்களையும் பொறுமையோடு கேட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அவருடைய அபத்தக் கருத்துக்களைக்கூட 'ஆகா, அபார ஐடியா!' என்று பாராட்டி ஆரவாரித்தார்கள்.

அவர்கள் நடிக்கும் நடிப்பை எல்லாம் காணும் வாய்ப்பு பெற்ற மாதவன் 'பணத்துக்கு இருக்கிற மதிப்புதான் என்னே என்னே!' என்று எண்ணி, மனசால் சிரிப்பது வழக்கம். அவன் அந்த இடத்தில் குறைந்தது ஆறு மாத காலமாவது தான் தங்கியிருக்க வேண்டும்; தனது வளர்ச்சிக்கு வகை செய்யக்கூடிய புதிய இடம் வருவதற்கு முந்தி இதைத் துறந்து விடக்கூடாது என விரும்பியதால், பவானந்தத்தின் குறைபாடுகளை எல்லாம் பெரிதுபடுத்தவில்லை.

பவானந்தம் அநாவசியமாக அவன் விஷயங்களில் தலையிடவுமில்லை; பாலசந்திரன் மாதவனைப் பற்றிக் குறைகூறவுமில்லை; அவனது மேற்பார்வையில் பொழுதுபோக்க நேர்ந்ததற்காக வருத்தப்படவில்லை; அதற்கு மாறாக அவனுடைய ஆனந்தம் அதிகரித்தே வருகிறது என்பதைப் புரிந்து கொண்டார் அவர். அப்புறம் தாம் தலையிட்டுக் குட்டை குழப்புவதற்கு என்ன இருக்கிறது என்றே அவர் கருதினார்.

ஒருநாள் மாலை தோட்டத்தில் பெரியவர் தற்செயலாக மாதவனைச் சந்திக்க நேர்ந்தது. 'பாலச்சந்தர் உன்னைப்பற்றி "ஆகா ஊகூ", என்று புகழ்கிறான். பேபிகூட உன்னிடத்தில் அபாரமான பிரியம் கொண்டிருப்பதாகத் தெரிகிறதே' என்றார். சிரித்தார். பிறகு அவராகவே சொன்னார்:

'நான் "நீ—உன்னை" என்றெல்லாம் சொல்வதற்காக நீ வருத்தப்படமாட்டாய் என்று நினைக்கிறேன். உனது சுயமாரியாதையை அது பாதிக்கிறதாக நீ நினைக்கக்கூடாது. உன்னை நான் வேலையில் வைத்திருப்பதனால் இப்படிப் பேசுவதாக நீ எண்ண வேண்டாம். எனது சுபாவமே இதுதான்.'

அவர் அப்படியும் இப்படியும் நடந்தார். பிறகு நின்றார். 'ஒவ்வொருவனுக்கும் சுயமரியாதை இருக்கவேண்டியது தான். அதை எப்படிப் பாதுகாப்பது என்பதும் தெரிய வேண்டும். அதைவிட முக்கியமான பாயின்ட் ஒன்று உண்டு. சுயமரியாதையை எப்பொழுது இழக்கலாம், எதற்காக விட்டுக்கொடுக்கலாம் என்றும் அறிந்திருக்கவேண்டும். ஒரு காரியத்தைச் சாதிப்பதற்காக அந்தரங்கத்தில் ஒருவன் தனது

சுயமரியாதையை விட்டுக்கொடுக்கலாம். அதனால் வெளியுலகத்தில் அவனுடைய மதிப்பு உயரும் என்றால், அந்தஸ்து பெருகும் என்றால், கௌரவம் வளர வாய்ப்பு ஏற்படுமென்றால், அவன் தனது சுயமரியாதையை இழக்கத் தயங்கக் கூடாது. அப்படி இல்லாமல், எனது தன்மானம்தான் பெரிசு—எனக்கு நானும் என் கருத்துமே முக்கியம்—என்று ஒருவன் அடம்பிடிப்பானேயானால், அவன் உருப்பட மாட்டான். அதுமட்டுமல்ல, அவனைப் போன்ற மடையன்—வாழும் வகை தெரியாத மடச்சாம்பிராணி—கிடையாது என்றே சொல்வேன். நீ என்ன சொல்றே?' என்று மாதவனை நோக்கினார்.

'உமக்குப் பிரசங்கம் பண்ணவேணும் என்ற ஆசை இருக்கிறது; அதற்காக முயற்சி செய்கிறீர் போலும்!' என்று சொல்லத் துடித்தது அவன் மனம். எனினும், 'நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. சரியான யுகதர்மம் இது தான்' என்றது அவன் நாக்கு.

பெரியவருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. 'நான் பல விஷயங்களையும் பற்றி ஆராய்ந்து கண்ட அபிப்பிராயங்களை எல்லாம் ஒரு புத்தகமாக்க எண்ணியிருக்கிறேன். என் பெயரை நிலைநாட்டக்கூடிய மாபெரும் நூலாக—மானுமென்ட்டல் ஒர்க் ஆக—விளங்கும் அது எந்த விஷயத்தையும் அல்பம் என்று நான் ஒதுக்கி விடுவதில்லை. சிறு விஷயத்திலே கூடப் பெரிய பெரிய உண்மைகள் வெளிப்படலாம்' என்றார்.

'ஆமாம். வாஸ்தவம்தான்' என்று தலையாட்டினான் மாதவன்.

'தின்பண்டங்களைப் பற்றி நீ எண்ணிப் பார்த்தது உண்டா?' என்று கேட்ட பவானந்தம் அவன் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. சுவையான பேச்சை ஆரம்பித்தார்.

'பாக்கப்போனால் முக்கால்வாசி தின்பண்டங்கள்—தமிழ் நாட்டின் வீடுகளிலும் ஓட்டல்களிலும் தயாரிக்கப்படுகிறவை தான்—தமிழ் நாட்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. அவை வெளிப் பிரதேசங்களிலிருந்து வந்தவை. இனிப்புப்

பதார்த்தங்கள் எல்லாம் அநேகமாக வட நாட்டிலிருந்து இறக்குமதியானவைதான். அல்வா, ஜிலேபி, ஜாங்கிரி, மைசூர்பாகு, குலோப்ஜாமூன் பார்த்தியா, பேர்களே சொல்லவில்லையா இவை தமிழ்நாட்டுச் சரக்குகள் இல்லை என்று. லட்டு...லட்டுகூட வெளியே இருந்து வந்தது தான். எனக்குத் தெரிந்தவரை அப்பம்— ஐ மீன் தேட் அதிரசம் தான் தமிழ் நாட்டிலேயே பிறந்தது. தென், தேட் பொரி உருண்டை...'

'பூந்தி?' என்று கேட்டு வைத்தான் மாதவன்.

'பூந்தி?...உம்ம். பூந்தி...யோசிக்க வேண்டிய விஷயம் தான்' என்று கூறி மோவாயைத் தடவினார் பெரியவர்.

'பத்தாசி, சுசியன், முந்திரிக்கொத்து இதெல்லாம் அசல் தமிழ்நாட்டுச் சரக்குகள் ஸார்!'

'என்னது என்னது என்னது?' என்று பரபரப்பு அடைந்தார் அவர்.

மாதவன் நிறுத்தி நிதானமாகச் சொன்னான். அவர் பையிலிருந்த காகிதத்தை எடுத்து, பென்சிலால் குறித்துக் கொண்டார்.

'அவற்றை நான் தின்று பார்த்ததில்லை. கேள்விப்பட்டது கூட இல்லையே!...சரி, பார்க்கலாம்...அப்புறம், வடை என்பது தமிழ்நாட்டு விஷயமல்ல. சாம்பார்கூட இங்கே உற்பத்தியானது அல்ல...'

'எனக்கு அப்படித் தோணலே ஸார்!'

'அதுக்கு நான் என்னப்பா செய்வேன்? ஆராய்ச்சி பேசுது அப்பனே, ஆராய்ச்சி பேசுது!' என அழுத்தமாகக் கூறினார் பவானந்தம்.

—'உம்ம ஆராய்ச்சியைக்கொண்டு உடைப்பிலே போடும்' என்று உறுமியது அவன் மனக்குறளி. ஆயினும் அவன் அறிவு தடை விதித்தது.

'ஒரே உலகம் கட்சித் தலைவர் ஞானப்பிரகாசம்கூட இதை ஆட்சேபிக்கவில்லை என்றால், இது எப்படித் தவறாக முடியும்? அவர் மிகவும் பாராட்டினார். இந்தப் புத்தகம் தனது ஒரே உலகம் கொள்கைக்கு வலுவான ஆதரவாக அமையும் என்று அவர் சொன்னாரே' என்றார் பவானந்தம்.

'நீர் அவருக்கு அவ்வப்போது நூறும் இருநூறும் செலவுக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறீர்கள். பின்னே அவர் ஏன் பாராட்டமாட்டார்?' என மாதவன் நினைத்தான்; வாய் திறந்து சொன்னானில்லை.

பெரியவர் தெரிவித்தார்: 'இதை எல்லாம் நான் உன்னிடம் ஏன் சொல்லுகிறேன் என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது; எனக்குத் தமிழ் அவ்வளவாக எழுத வராது. நான் என் ஐடியாவை அப்படி அப்படியே குறித்து வைத்திருக்கிறேன். அவற்றை ஒழுங்குபடுத்தி அமைத்துத் தருகிறேன். நீ அதை நல்ல தமிழிலே எழுதணும். அவ்வளவு தான்.'

'அந்த வேலை எல்லாம் எனக்குப் பிடிக்காதய்யா. வேறு ஆளைப் பாரும்' என்று சொல்லிவிடலாம் என மாதவன் துடித்தான். இருப்பினும், 'இவர் இப்பவேயா குறிப்புகளை எழுதிவிடப் போகிறார்? இவருக்கு இயல்பாக உள்ள சோம்பல் இவரை லேசில் விட்டு விடுமா? உரிய காலத்தில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொன்னால் போச்சு' என்று தன்னையே அடக்கிக்கொண்டான் அவன். 'இ ஹி ஹி, அதுக் கென்ன!' என்று இழுத்தான்.

இந்தச் சமயத்தில் ஒரு வேலைக்காரன் வந்து, 'அம்மா கூப்பிடுறாங்க' என அறிவித்ததால் பவானந்தம் வீடு நோக்கிப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாதவனைத் தேடிக் கொண்டு பாலச்சந்திரனும் பேபியும் வந்தார்கள். 'நல்ல வேளை!' என்று மகிழ்ந்தான் அவன்.

ஸ்ரீமதி பவானந்தம் ஆகிய விசாலாட்சி அம்மாளை அடிக்கடி காணும் பாக்கியம் மாதவனுக்குக் கிட்டவில்லை.

அதற்குக் காரணம் அவ்வம்மையார் எழுந்து நடமாடும் சுபாவம் பெற்றிராததேயாகும்.

அந்த அம்மாள் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழவேண்டுமானுல் யாராவது உதவி புரிந்தால்தான் முடியும். 'வட்டப் பாறை மாதிரி, பருமனுய் பெரிசாய்' இருந்தாள் அவள். தனது உடலைத் தூக்கிக்கொண்டு நிற்பதே அவளுக்குப் பெரும் சிரமமாக இருந்தபோது, அவள் அங்குமிங்கும் அலைந்து திரிவது எப்படி சாத்தியமாகும்?

பெரிய அம்மாளை மாதவன் முதலில் பார்த்தபோது திகைப்படைந்து விட்டான். 'மனித உடல்—அதிலும் ஒரு பெண் உருவம்—இவ்வளவு பெரிதாகவும் விகாரமாகவும் வளர முடியும் என நான் எண்ணியதே கிடையாது. மேல் பாகம் சிறுத்து, மத்திய பாகம் மிகுதியாகப் பெருத்து, மீண்டும் குறுகலாகி, .சேச்சே, காணச்சகியாத தோற்றம்! சதை அங்கங்கே உருட்டித் திரட்டிப் பூசி வைக்கப் பட்டது போல, உருவ அமைதி இழந்து கோரமாய்ப் பிதுக்கிக் கொண்டு நிற்கின்றது. இந்த உடல் இப்படி வளருவதற்கு எத்தனை வருஷங்கள் பிடித்தனவோ! எத்தனை டன் தீனி தேவைப்பட்டதோ!' என்று நினைத்துப் பெருமூச்சுவிட்டான் அவன்.

விசாலாட்சி அம்மாள் அபூர்வமாக எப்பாவது காரில் வெளியே போய் வருவாள். முக்கிய உறவினர் அல்லது பிரமுகர் வீட்டு விசேஷம் எதற்காவது செல்வாள். மாலை வேளைகளில்—'குளிருதே... உடம்புக்கு என்னவோ மாதிரி இருக்குதே' என்று தோன்றுதபோது—வீட்டு வராந்தாவில் அவளுக்கென ஒதுக்கப்பெற்றிருந்த பெரிய சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பாள். மரத்திஞல் செய்யப்பட்ட பழங் காலத்து நாற்காலி அது. ஈஸிசேர் மாதிரி இருக்கும். சீக்குக் காரர்கள் சுகமாகச் சாய்ந்திருக்கவும், முதியவர்கள் ஓய்வு பெறுவதற்கும் பெரிய வீட்டார் அத்தகைய நாற்காலியை உபயோகித்து வந்தார்கள்.

பூதம் போன்ற உடலையும், சதை தளதளத்து வெளிறிய மஞ்சள் நிறமாய்த் தொங்கிய கன்னங்களையும், ஒளி மங்கிய

கண்ணாடிக் கோலிகள் போன்ற—உணர்ச்சி எதையும் பிரதி பலிக்காத—சலனமற்ற கண்களையும் பார்த்தபோது, 'இந்த மாமிசப் பர்வதம் எதற்காக உயிர் வாழ்கிறது? இதனால் யாருக்கு என்ன பிரயோசனம்' என்றுதான் மாதவன் எண்ணினான்.

அவளைப் பார்த்துப்போக, பெரிய இடத்து அம்மாள்கள் அநேகர் விஜயம் செய்வது வழக்கம். அவர்களில் சிலர்—விசாலாட்சி மாதிரி பணப் பெருக்கத்தையும் சுகவாசத்தையும் அறிவிக்கும் அளவு பெரியவர்களாகத்தான் காட்சி தந்தார்கள். பகட்டான பட்டாடையும், மின்னும் ஆபரணங்களும், பெருமித நடையும் தோரணையும் அவர்களது செல்வப் பெருக்கைப் பிரகடனப்படுத்தும்.

அவர்களைக் காணும்போதெல்லாம் மாதவனின் மனக் கசப்பு மிகும். 'உண்பதும், உடல் அவஸ்தைகளைத் தீர்த்துக் கொள்வதும் தவிர வேறு உழைப்பு என்பதையே அறியாத சோம்பேறிப் பிண்டங்கள். மனித உணர்ச்சியற்ற பதார்த்தங்கள். பெரும்பாலர் ஒருவேளைகூட வயிறார உண்ண முடியாமல் வாடி மெலிகிற நாட்டில், அவர்களைப்பற்றிய பிரக்ஞையே இல்லாமல் உண்டு கொழுத்து உல்லாசமாக வாழ்கிற இந்தச் சதைக் குன்றுகளுக்கு யார் பாடம் கற்றுக் கொடுப்பது? வசதிகள் வஞ்சிக்கப்பட்டுள்ள பெரும்பாலரும் உணர்வுபெற்று உரிமைக் குரல் கொடுத்து ஒன்றுபட்டுக் கிளம்பினால்தான் இவர்களுக்குப் புத்தி புகட்ட முடியும். அந்தக் காலம் என்று வரப் போகிறது!'

அவன் உள்ளம் உலைக்களம் ஆகிவிடும். அனல் மூச்சு பொங்கி எழும். செயல்திறமற்ற வெறும் கோபத்தால் குமைவான் அவன். 'இவர்கள் எப்படியும் பாழாகட்டும்! வாழ முடியாத மிகப் பலரும் எவ்வாறும் நாசமாய்ப் போகட்டும்! நான் வாழ்ந்து, அனுபவிக்க வேண்டும். காலக் கிண்ணத்தில் தரப்படுகிற வாழ்க்கை மதுவை அடிமண்டி வரை உறிஞ்சிச் சுவைத்துச் சகலவித ருசிகளையும் ரசித்து மகிழவேணும். அதற்கு முக்கியமானது பணம். நினைத்ததை எல்லாம் கைக்கு எட்டும்படி செய்ய வல்ல மாய சாதனமான

பணத்தை நான் எப்படியேனும் பெற்றே தீரவேண்டும்' என்று அவன் உள்ளம் 'ஆயிரத்தெட்டாவது' முறையாக உருப்போடும்.

இவ்வாறு வெறித்தனமான எண்ணத்தில் மூழ்கி மாதவன் தோட்டத்தில் ஒரு செடி அருகே நின்றபோது, ஒருநாள் பேபி அவனுக்குப் பின்னால் 'இவர்தான் பாலுவின் டீச்சர். ரொம்ப நல்லவர்னு நான் அடிக்கடி சொல்லலே, அவரே தான்' என்று பேசியது கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான்.

பேபி அரிசிப் பற்கள் முழுவதையும் காட்டிக்கொண்டு நின்றாள். அவளுக்கு அருகில் இனிய தோற்றமுடைய மங்கை ஒருத்தி நின்றாள். அவள் முகம் சிரிப்பின் அழகும் ஏற்று, அதிகமான கவர்ச்சியோடு திகழ்ந்தது. அவளுக்கு முப்பது வயசுக்குக் கொஞ்சம் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். சற்றே அதிகமான சதைப்பிடிப்பு பெற்றிருந்த அவளை பருமனானவள் என்று சொல்ல முடியாது; ஆனாலும் மெலிந்தவள், ஒல்லியானவள் என்று கணக்கிடவும் இயலாது. அவள் உயரத்துக்கு அவ்வுடலின் வளர்ச்சி அமைவாகவும் எடுப்பாகவும் இருந்தது. அவள் அழகி. அதில் சந்தேகமில்லை. அழகுக்கு அழகு சேர்த்தது அவள் சிரிப்பு.

'ஆமாம். பேபி உங்களைப்பற்றி என்னிடம் சொல்லாத நாளே கிடையாது. அந்த ஸார் இன்னிக்கு இப்படி ஒரு கதை சொன்னார், அப்படிச் செய்தார்—இதுபோல் ஏதாவது விஷயம் இருக்கும், அவள் உற்சாகமாகச் சொல்வதற்கு.'

அவள் குரல் சன்னமாய், காதில் இனிமை சேர்ப்பதாய் இழைந்தது. மாதவனுக்கு அவளை பிடித்துவிட்டது. அவள் மனசுக்கும் அவனைப் பிடித்திருக்கத்தான் வேண்டும். இல்லையேல் அவள் ஏன் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கவேண்டும்? ஏன் காரணம் இல்லாமலே சிரிக்கவேண்டும்? ஏன் கண்ணிலே கண்ணிட்டு மீட்டுக்கொண்டு, பின்னரும் கண்ணோடு கண் சேர்ப்பதில் ஆர்வம் உடையளாதல் வேண்டும்? பொருளில்லாப் பேச்சு பல பேசிப் பொழுது போக்குவதிலே ஏன் அவள் மகிழ்வு காட்டவேண்டும்,

தன் பெயர் வசந்தா என்று அறிவித்தாள் அவள். கலை வளர்ச்சி, சமூக சேவை, குழந்தைப் பயிற்சி முதலிய விஷயங் களில் தனக்கு ஆர்வமும் ஈடுபாடும் உண்டு என்று அவளாகவே சொன்னாள். ஒருவாறு அங்கிருந்து நகர்ந்தாள். போகும் போதோ திரும்பித் திரும்பி அவனைப் பார்த்துச் சிரித்தபடி சென்றாள்.

'உலகம் பலவிதம்!' என்று முனங்கினான் மாதவன். 'இவள் நமக்குப் பயன்படக்கூடும் என்று தோன்றுகிறது. இவள் உறவை வளர்க்க முயற்சிப்பது நன்று' என்று அவன் மனம் கணக்குப்பண்ணியது.

வசந்தாவின் உள்ளமும் அவ்விதமே எண்ணியிருக்க வேண்டும். ஏனெனில் அவள் அந்த வீட்டுக்கு வர நேர்ந்த போதெல்லாம் தோட்டத்துப் பக்கம் வந்தாள். மாதவன் வெளியே காணப்படாவிட்டால், அவன் இருக்குமிடத்தின் அருகே சென்று எட்டிப் பார்த்து, பேச்சுக்கொடுப்பதை வழக்கமாகக் கொண்டாள்.

'நீங்கள் உங்கள் ரூமை சுத்தமாக வைத்திருக்கிறீர்களே. பேஷ்...சுத்தமே ஒரு அழகுதான். அது எங்கே எல்லோருக் கும் தெரிகிறது!' என்று ஸர்டிபிகேட் வழங்கினாள் அவள். சிரித்தாள். காரணமில்லாமல், தேவை இல்லாமல்—சிரிக்கும் பண்பு பெற்றவள் அவள் என்பதை மாதவன் புரிந்து கொண்டான்.

'சுத்தம் அழகானது. சுத்தத்துக்குத் துணைபுரியும் வெயில் மிக அழகானது. வீட்டினுள் வெயில் படர்வது நன்று. அதில்லாவிட்டாலும், களிதுலங்கும் சிரிப்பு வீட்டில் நிறைந்திருந்தால் போதும். ஆனந்தம் துளும்பும் சிரிப்பு அகத்தில் மின்னும் இளவெயிலாம் என்பார்கள். சிரித்த முகங்களை நான் ரசிக்கத் தயங்குவதில்லை' என்று கூறினான் அவன்.

அவள் முகம் செம்மை ஏற்றது. அவள் மகிழ்வு அதிகரித் தது. ஒரு கணம் தலைதாழ்த்தி நின்றவள் மீண்டும் எழில்

பூத்த முகம் நிமிர்த்தினாள். ஒளி சுடரும் விழிகளால் அவனை ஆசையோடு பார்த்தாள். கவர்ச்சிகரமாகச் சிரித்து, 'நீங்கள் அழகாகப் பேசுகிறீர்கள்' என்றாள்.

காந்தம் இரும்பை இழுத்தது. வண்டு மலரை நாடியது. வீணை நாதத்தைத் தேடியது. ஒளி விண்ணில் நிறைந்துவிட விரைந்தது. காலம் எல்லாவற்றுக்கும் துணைபுரிந்தது.

ஒருநாள் மத்தியான வேளையில், நல்ல வெயில் காய்கிற போது, மாதவன் ஒரு ரஸ்தாவில் அவசரமில்லாமல் நடந்து கொண்டிருந்தான். எதிரே ஒரு கார் வந்தது. அதை ஒரு பெண் ஓட்டி வருவதைக் கண்டதும் அவன் கூர்ந்து நோக்கினான். 'அடடே, நம்ம வசந்தாபோலிருக்குதே!' என்ற நினைப்பு துள்ளியது அவனுள்.

'ஆகா, நம்ம மாதவன் போலிருக்கே!' என்றுதான் அவளும் எண்ணியிருக்கவேண்டும். காரை நிறுத்தினாள். எதிர்பாராமல் அவனைச் சந்திக்க முடிந்ததில் அவளுக்கு அளவிலா ஆனந்தம் என்பதை அவள் முகமலர்ச்சி காட்டிக் கொடுத்தது.

'எங்கே இப்படி இந்த வெயிலில்?' என்று வசந்தா விசாரித்தாள்.

'வெயிலானாலும் மழையானாலும், நிலவானாலும் இருட்டானாலும்...'

'புயலானாலும் அமைதியானாலும், பனியானாலும் குளிரானாலும்...' என்று நீட்டி நீட்டிப் பேசிவிட்டுக் கலகல வென நகைத்தாள் அவள்.

'எனக்கு வீதிகளில் சும்மா சுற்றுவது பிடிக்கும்' என மாதவன் சொன்னான்.

'காரில் பிரயாணம் செய்யப் பிடிக்காதோ?' அவள் வாய் மட்டும் பேசவில்லை, மை தீட்டிய அழகு விழிகளும் ரகசியம் பேசின.

'ஓ. பிடிக்குமே! அதிலும், சிங்காரி—ஒய்யாரி—ஜகத்தை மயக்குமிந்த மதிமுகத்தைப் படைத்திட்ட அலங்காரி—அதிதீரி—அற்புதி—பிரமாதி ட்ரைவ் செய்கிற காரிலே...' என்று பாடல்போல் வசனத்தை இழுத்தான் அவன்.

வசந்தா 'ஐயோ. ஐயோ. ஐயோ!' என்ருள். அவள் உதடுகள் குவிந்ததும், கன்னங்கள் குழிந்ததும், கண்கள் ஒளிர்ந்ததும் கன ஜோராக இருந்தன. மாதவன் ரசித்து மகிழாமலா நிற்பான்?

'சரி. ஏறிக்கொள்ளுங்கள்' என்று தனக்குப் பக்கத்தில் உள்ள கதவைத் திறந்தாள் அழகி.

அவனும் ஏறி ஜம்மென்று அமர்ந்துகொண்டான். கார் வெறும் பாதையில் செல்வதாகத் தோன்றவில்லை அவனுக்கு. இன்ப யாத்திரையில் மனோகரமாகச் செல்லும் ரதத்தில் உல்லாச மோகினியோடு மிதந்துபோவதுபோலவே இருந்தது.

அன்று அவனுக்கு நல்ல நாள்தான். ஆனந்தமும் இன்பமும் திகட்டக்கூடிய அளவுக்கு அளித்துத் தானும் மகிழ்ந்தாள் வசந்தா.

தனது இடத்துக்குத் திரும்பிய மாதவன் 'லட்சியப் பாதையில் மற்றுமொரு மைல் முன்னேறிவிட்டோம், நமது திட்டத்திலே மேலும் ஒருபடி உயர்ந்துவிட்டோம்' என்று எண்ணி மிகுந்த குதூகலம் அடைந்தான்.

வசந்தாவின் நட்பு ஏற்பட்டதிலிருந்து மாதவன் வாழ்வில் அதிகமான பசுமை பூக்கலாயிற்று. அவள் அவனுக்கு இன்பம் அளித்தாள். அவ்வப்போது இனிய உணவு தந்தாள். உற்சாகம் மிகுந்தபோது, தனது ஞாபகார்த்தமாக இருக்கட்டும் என்று பவுண்டன் பேனாவும், ஸில்க் கைக்குட்டையும், ஜோரான சட்டையும் உவந்தளித்தாள். செலவுக்குப் பணமும் கொடுத்தாள்.

அவள் கணவன் ஏதோ பெரிய உத்தியோகம் பார்த்து வந்தார். அவர் உயரமாய், பருமனாய், தொந்தி வயிறும்

மந்தகுணமும் பெற்றவராய்க் காணப்பட்டார். எப்பொழுதும் வேலைமீதும், பணம் பண்ணுவதிலுமே கருத்தாக இருந்தார். அதனால் அவர் மனைவி பொழுதுபோக்குக்கும் உல்லாசத்துக்கும் இளைஞர்களை நாடியதில் விசித்திரம் எதுவுமில்லை.

தனக்குக் கிடைத்த புதிய சிநேகிதியின் குணாதிசயங்களைப் பற்றி மாதவன் ரொம்பவாகக் கவலைப்படவில்லை. 'இன்று அவளுக்கு என்மீது பிரியம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் திடீரென்று அவள் அன்பு வற்றிப்போகலாம். அதைப்பற்றி எல்லாம் நான் வீணாக எண்ணி என் மனசைக் குழப்பிக் கொள்வானேன்? நிகழ்காலம் இனிய பசுமை பெற்றதாகத் திகழ்கிறது. அது போதும்' என்றே அவன் கருதினான்.

அவன் பவானந்தம் வீட்டுக்கு வந்து ஆறேழு மாதங்கள் ஆகியிருக்கலாம். வரவர அந்தச் சூழ்நிலையும் அங்குள்ள மனிதர்களும் அவனுக்கு அலுப்பு ஏற்படுத்துவதாகவே அவன் நினைத்தான். தனது லட்சியப் பாதையில் மேலும் முன்னேறவேண்டுமேயல்லாது, தேங்கி நிற்பதைத் தான் விரும்புவதற்கில்லை என்று அவன் மனக்குறளி முனங்கியது. ஆகவே அந்த இடத்தைவிட்டு வெளியேறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை அவன் நோக்கியிருந்தான்.

ஒருநாள், விரும்பத்தகாத—அதாவது பவானந்தம் வீட்டாரின் நோக்கிலேதான்—நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது.

பாலச்சந்திரனுக்கும் வேறொரு சிறுவனுக்கும் சண்டை பிறந்தது. அந்தப் பையன் வெளியே எங்கிருந்தோ வந்து இந்த வீட்டுக் காம்பவுண்டுச் சுவர்மீது ஏறி உட்கார்ந்திருக்கிறான். பாலுதான் அவனை முதலில் பார்த்தான். 'ஏய் திருட்டுப்பயலே, இறங்கிப்போடா!' என்று கூவினான். அந்தச் சிறுவன் பற்களைக் காட்டினானே தவிர, பயப்பட்டானில்லை. 'போடாங்கிறேன், நீ என்னடா இளிக்கிறே? ஓடிப்போறியா, இல்லே...' என்று மிரட்டினான் பாலு.

'நீ சாப்பிடுவ, போடா பொட்டைப் பையா!' என்று கத்தினான் சுவர்மேல் இருந்தவன்.

'திருட்டு ராஸ்கல்! இதோ பாரு' என்று சொன்ன பாலு கால் சட்டைப் பையிலிருந்து 'கேட்டாபுல்டை' எடுத்தான். சிறு கல் ஒன்றை எடுத்து, குறிபார்த்து அந்தப் பையன் மண்டையை நோக்கி அடித்தான். கிண்ணென்று பறந்து சென்ற கல் சரியானபடி தாக்கியது சிறுவனின் நெற்றியில்.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. அவன் உள்ளே குதித்து, ஓடிவந்து பாலச்சந்திரனைத் தாக்கினான். இவனும் தாக்குப் பிடிக்க முயற்சித்தான். ஆனால் வந்தவனோ முரடன். தெருப் பையன்களோடு சண்டையிட்டுத் தேர்ந்தவன். அவன் கைகளில் பாலு சிக்கிக்கொண்டு திண்டாடினான். தோட்ட வேலைக்காரன் கவனித்து ஓடிவந்தான். அவன் வருவதைப் பார்த்ததுமே முரட்டுப்பயல் பாய்ந்து ஓடி, சுவரேறிக் குதித்து மாயமாய் மறைந்துவிட்டான்.

அடிபட்ட பாலச்சந்திரன் தரையிலிருந்து எழுந்து உடம்பி லும் கால் சட்டையிலும் படிந்திருந்த புழுதியைத் தட்டுவதில் முனைந்தான். 'அயோக்கியப் பயல்! ரோஜாச் செடியைத் திருடிக்கொண்டு போகத்தான் வந்திருப்பான்' என்று அவன் முணுமுணுத்தான்.

'என்ன இருந்தாலும் நீங்க இதுமாதிரிப் பயல்களோடு சண்டைக்குப் போகப்படாது முதலாளி. என்னைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை சொல்லவேண்டியதுதானே? அவனைப் பிடித்துக் கையையும் காலையும் கட்டி, கிணற்றுக்குள்ளே இறக்கி, தண்ணீரிலே முக்கி முக்கி எடுத்து, அவனுக்குப் பயம் ஏற்படுத்தியிருப்பேனே!' என்று ஜம்பமாகச் சொன்னான் தோட்டக்காரன்.

இவ்வளவு நேரமும் நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மாதவன், "அதுதான் தப்பு...தலையிடும் கொள்கை கூடவே கூடாது. அவரவர் சாமர்த்தியப்படி சமாளித்துக்கொள்ளட்டும் என்று விடுவதுதான் நல்லது" என்றான்.

வேலைக்காரன் அவனை ஒரு மாதிரியாக நோக்கினான். 'நடந்ததை எல்லாம் பார்த்துக்கொண்டுதான் நின்றீங்களா நீங்களும்?' என்று கேட்டான்.

'பின்னே கண்ணை மூடிக்கொண்டு நின்றிருக்கணும் என்கிறாயா?' என்று கிண்டலாகப் பேசினான் மாதவன்.

'அந்தப் பயலை உதைத்து அனுப்பியிருக்கவேண்டாம்? அல்லது சண்டைபோடாமலாவது விலக்கியிருக்கலாமே!'

'வலு உள்ளவர்கள் வலு இல்லாதவர்களைத் தாக்குவதும் நசுக்குவதும் தானே வாழ்க்கையில் சகஜமாக இருக்கிறது. அதை எல்லாம் யார் தடுக்கிறார்கள்?' என்றான் மாதவன்.

தோட்டக்காரன் அவனை வெறித்துப் பார்த்துவிட்டு நகர்ந்தான். 'வாங்க ஐயா, வீட்டுக்குப் போகலாம்' என்று அவன் அழைத்தபோது பாலச்சந்திரன் தலையசைத்து மறுத்து விட்டான்.

அவன் போன பிறகு பாலு சொன்னான்: 'அடுத்த தடவை அந்த அயோக்கியப் பையன் வரட்டும்! அவன் பல்லை உதிர்த்துவிடுகிறேன்' என்று.

'அதுதான் சரி. பல்லை உதிர்ப்பது மட்டும் போதாது, எத்தனை இருக்குது எண்ணிப் பாருடா கழுதையின்னு சொல்லி அவன் கையிலே கொடுக்கணும்' என்று மாதவன் சிறுவனுக்கு உற்சாகமூட்டினான்.

'உங்களைப் பெரிய எசமான் கூட்டிவரச் சொன்னாங்க. சின்ன ஐயாவையும் அழைச்சிட்டு வரும்படி சொன்னாங்க' என்று அறிவித்துக்கொண்டு ஒரு ஆள் வந்தான்.

'இதோ வந்தாச்சு!' என்று கிளம்பினான் மாதவன். பாலச்சந்திரனும் அவனுக்குப் பின்னாலேயே போனான்...

இதே வேளையில் வீட்டில் மற்றொரு புதுமை நிகழ்ந்திருந்தது.

'உண்மை சொல்ல அஞ்சாத' பேபி, தான் சொல்ல வேண்டும் என வெகு காலமாக எண்ணிவந்த சிலவற்றை

வாய்விட்டுக் கூற அன்றுதான் நல்லநாள் பார்த்திருந்தாள் போலும்!

அவள் ஓடிக் குதித்து விளையாடிக்கொண்டிருந்ததைப் பெரும் தொந்தரவாகக் கருதிய தாய் சீறி விழுந்தாள். 'ஏட்டி, பொட்டைக் கழுதை, இப்படியா திங்குதிங்கென்று குதித்துக் கூத்தாடுவது? அமரிக்கையாக ஒரு இடத்திலே உட்கார்ந்து ஏதாவது செய்யேன்' என்றாள்.

'நீ ஓடியாடி விளையாடாததுனாலேதான் இப்படி யானைக் குட்டி மாதிரி ஆகியிருக்கிறே. பொம்பிளை இப்படியா செக்கு மாதிரி வளருவது? குனிஞ்சு நிமிர்ந்து வேலை வெட்டி செஞ்சிருக்கணும். தினசரி அஞ்சாறு மைலாவது நடந்து பழகணும். நீயும் சரி, உன்னைப் பார்க்க வருகிறவங்களும் சரி, பூதங்கள் மாதிரி வளர்ந்து...'

பேபி மேற்கொண்டு பேசவில்லை. 'ஐயோ அட கடவுளே! ...ஷாக்கிங் இது டூ மச்' என்று எட்டு வீட்டுக்குக் கேட்கும்படி ஓலமிட்டாள் விசாலாட்சி அம்மாள்.

தான் செய்துகொண்டிருந்த அலுவலை அப்படியே போட்டுவிட்டு, 'ஏன்? என்ன நடந்தது?' என்று பதறியடித்து வந்தார் பவானந்தம்.

'என்ன நடக்கணும்? இதைவிட வேற என்ன நடக்கணும்? உங்க அருமை மகளையே கேளுங்கள்' என்று அவள் கூச்சலிட்டாள்.

'பேபி, என்ன விஷயம்?' என்று விசாரித்தார் தந்தை.

பேபி நடந்ததைச் சொல்லத் தயங்கவே இல்லை.

'இப்படிப் பேச உனக்கு வெட்கமாயில்லே? பெரியவங்களிடம் இதுமாதிரிப் பேசுவது தப்பு என்று தெரியாது உனக்கு?' என்று அதட்டினார் பெரியவர்.

'உண்மையைச் சொல்வதிலே என்ன அப்பா தப்பு? உள்ளதை எடுத்துச் சொல்ல ஏன் வெட்கப்படணும்?'

மகளின் கேள்விகள் தந்தைக்கும் அதிர்ச்சியாகவே பட்டன. ஆனால் பேபி இயல்பாக அறிவித்தாள்:

'ஸார் சொன்னது சரிதான். பெரியவங்க உண்மையைச் சொல்லவும் பயப்படறாங்க. உண்மையைக் கேட்கவும் தயங்குறாங்க ... உண்மையைப் பார்க்கவும் கூசுறாங்க...'

'இந்த மேதாவி ஸார் யாரோ?' என்று கேலியாக விசாரித்தார் தந்தை.

'மாதவன்ஸார் தான்' என்ற பதிலைக்கேட்டு அவர் திடுக்கிட்டார்.

'இந்த மாதிரி எல்லாம் உனக்குப் பாடம் சொல்லித் தருவதற்காகவா அவனை இந்த வீட்டிலே வைத்திருக்கு? ஏய் போய் மாதவனைக் கூட்டிவா!' என்று உத்திரவிட்டபடி திண்ணைக்கு வந்தார் பவானந்தம்.

அங்கே நின்ற தோட்டக்காரன் காதுகளிலும் அந்த உத்தரவு விழுந்தது. 'ஒரு முக்கிய விஷயம் எசமான். இதை யும் கேட்டு விட்டு அவருக்கு ஆள் அனுப்புங்க' என்றான்.

'என்ன?' என்று உறுமிக்கொண்டே நாற்காலியில் அமர்ந்தார் பெரியவர். தோட்டக்காரன் நடந்த விஷயத்தைச் சொல்லச் சொல்ல அவர் ஆத்திரமும் கோப மும் அதிகரித்தன. மேலும் தாமதம் செய்யாமல் ஒரு வேலையாளை அனுப்பி வைத்தார்.

மாதவன் வந்ததும் அவனை மேலும் கீழுமாக வெறித்துப் பார்த்தார் அவர். பாலச்சந்திரனின் அலங்கோல நிலையையும் கவனித்தார். 'இதெல்லாம் என்ன?' என்ற கர்ஜனை வெடித் தது அவரிடமிருந்து.

'பாலச்சந்தர், இதென்ன அலங்கோலம்?' என்று கத்தினார் தந்தை.

'ஒண்ணுமில்லை, அப்பா!' என்று தீனக்குரலில் தெரிவித் தான் பாலு.

'ஏய், என்னடா ஒண்ணுமில்லேங்கிற? பொய் சொல்லலாமின்னு உங்க வாத்தியார் கற்றுக் கொடுத்திருக் கிறாரா?'

'பொய் சொல்லறது தப்பு இல்லே என்று தான் சொன்னார்' என்று பையன் சொல்வான் என அவர் எதிர் பார்க்கவில்லை. ஆனால் பாலச்சந்திரன் சொன்ன பதில் அது தான். பேபியின் பதிலைப்போலவே, மகனின் கூற்றும் அவரைத் திடுக்கிட வைத்தது.

'பிள்ளைகளைக் கெடுப்பதுதான் உன் தொழிலோ? அதுக் குத்தான் உன்னை இந்த வீட்டில் சேர்த்தேனோ?' என்று பவானந்தம் கூப்பாடு போட்டார்.

'பிள்ளைகளை யாரும் கெடுப்பதில்லை. அவரவருக்கு இயல் பான சில குணங்கள் உண்டு. அவற்றை ஒடுக்கிவிட முயல் கிறார்கள் பெரியவர்கள். குழந்தைகளின் சுபாவமான பண்பு களைக் கவனித்து, அவற்றை அடக்கி ஒடுக்காமல் வளரவிட்டு வாழ வழி வகுத்துக் கொடுப்பது தான் புதுமுறைக் கல்வி...'

'நிறுத்துடா உன் அதிகப் பிரசங்கத்தை!' என்று எரிந்து விழுந்தார் பெரியவர். 'இனிமேல் உனக்கும் நமக்கும் சரிப் பட்டு வராது. நாளைக்கே நீ இங்கிருந்து போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனி, போ!' என்றார்.

'இதிலென்ன வாய்தா? நான் இப்பவே கிளம்பிவிடு கிறேன்...'

'பணம் பாக்கியெல்லாம் கணக்குப் பார்க்கணும்' என்று இழுத்தார் அவர்.

'அதெல்லாம் தேவையில்லை. பணம் பாக்கி எதுவுமில்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள்' என்று மாதவன் புன்னகை யோடு கூறினான்.

'ஸார்!' என்று கண்கலங்க அவனை நெருங்கினான் பாலச்சந்திரன். 'ஸார்' என்று அழுதுகொண்டு ஓடிவந்தாள் பேபி.

'ஸாருமாச்சு, கீருமாச்சு! டேய் சந்தர், ஏய் பேபி, உள்ளே போறீங்களா? சவுக்கை எடுக்கட்டுமா?' என்று ஆவேசமாக எழுந்தார் தந்தை.

குழந்தைகள் அஞ்சி நடுங்கி மறைவிடம் தேடினார்கள்.

'குழந்தைகளை அடிப்பதுதான் அவர்களைக் கெடுக்கும் வழியாகும். குழந்தைகளை அடிப்பது மகா மடத்தனம் என்று அறிஞர்கள் அநேகர் எழுதியிருக்கிறார்கள்...' என்று மாதவன் பேசவும், அவருக்கு எரியும் தீயில் பெட்ரோல் ஊற்றுவது மாதிரி ஆயிற்று.

'சரிதாம் போடா, அயோக்கிய நாயே!' என்று சீறிப் பாய்ந்தார் அவர்.

'ஒவ்வொருவனும் தன்னையே உலகத்தில் காண்கிறான். தன்னைக் கொண்டே உலகத்தை எடை போடுகிறான்...'

'ஏய்... இங்கேருந்து போறியா, இல்லே...'

மாதவன் முறுவல் பூத்தான். 'ஐயா. ஒரு முக்கிய பாயிண்ட். தமிழ் நாட்டுப் பலகார வரிசைகளில், இனிப்பு ரகத்திலே மோதகம் என்பதும் சேரும். முறுக்கு, சீடை, தேங்குழல் இதெல்லாம் தமிழர்களின் கண்டுபிடிப்புதான். உங்கள் ஆராய்ச்சி நூலில் இந்த உண்மையை எழுத மறந்து விடாதீர்கள்' என்று அமைதியாகச் சொன்னான். அவர் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து நகர்ந்தான்.

மாதவனின் பொருள்கள் எல்லாம் ஒரு சிறு பெட்டிக்குள் அடங்கிவிட்டன. அந்தப் பெட்டியை கையில் பிடித்தவனாய் அவன் முச்சந்தி ஒன்றில் நின்றான். இனி எங்கே போகலாம்? எங்கு தங்குவது?

இப்பிரச்சினையுடன் ஒவ்வொரு வீதியாக மாறி மாறிப் பார்த்து நின்றபோது, வசந்தாவின் கார் வருவது தென்பட்டது. 'அட இம்முறையும் அதிர்ஷ்டம் நம் பக்கத்தில் தான் இருக்கிறது போலும்!' என்று உளம் மகிழ்ந்தான் அவன்.

வசந்தா அவனைப் பார்த்ததும், காரை அவனருகில் கொண்டு வந்து நிறுத்தினாள். 'ஏது இவ்வேளையில் பெட்டியும் கையுமாகக் கிளம்பி விட்டீர்கள்? எங்கு பிரயாணம்?' என்று விசாரித்தாள்.

'எங்கே போவது என்று எனக்கே தெரியவில்லை. திடீரென்று நான் நடுத்தெரு நாராயணன் ஆகிவிட்டேன்' எனக் கவலை கொஞ்சமும் இல்லாத குரலில் பேசினான் அவன்.

'என்ன விஷயம்? பாலுவின் டீச்சர் என்ற பதவி என்ன ஆயிற்று?'

'நான் எதிர்பாராதவிதமாக அது என்னை வந்தடைந்தது; நான் எதிர்பாராத விதத்திலேயே என்னை விட்டுப் போய் விட்டது!'

'அப்புறம்!'

'நானறியேன் பராபரமே' என்று கூறிச் சிரித்தான் அவன்.

அவளும் நகைத்தாள். 'சரி. காரில் ஏறுங்கள். பெட்டியை பின்னால் வையுங்கள். முதலில் ஒரு ரெஸ்டாரெண்டுக்குப் போவோம்' என்று வசந்தா சொன்னாள்.

'அருமையான யோசனை' என்று ஆமோதித்தான் மாதவன்.

காரில் போகிறபோதே, நடந்த விஷயங்களை ஒருவாறு கேட்டறிந்துகொண்டாள் அவள். 'உங்கள் போக்கு சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. ஆனால் இதே மாதிரிப் போனால் வாழ்க்கை என்ன ஆகிறது?' என்று கேட்டாள்.

'அதைப்பற்றி வாழ்க்கை கவலைப்படட்டுமே! நான் ஏன் கவலைப்படவேண்டும்?' என்றான் அவன்.

அவன் பேச்சு புரியாததனாலோ அல்லது என்ன பதில் சொல்லுவது என்று தெரியாததனாலோ, அவள் சும்மா சிரித்து வைத்தாள். எனினும் அவள் மனம் வேலை செய்து

கொண்டிருந்தது. அது ஓட்டலில் டிபன் சாப்பிடுகையில் விளங்கிற்று.

'நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கியிருக்க முடியாது...' என்று ஆரம்பித்தாள் வசந்தா.

'தெரியும். அந்த எண்ணம் எனக்கு இல்லவுமில்லை. அப்படி நான் நினைத்திருந்தால் நான் முச்சந்திப் பிள்ளையாராக நின்று பொழுது போக்கியிருப்பேனே என்ன?'

'நீங்கள் தவருக எண்ணிவிடக்கூடாது. எனக்கு உரிமைகள் நிறையவே இருந்தாலும், நான் சுதந்திரமானவள் அல்ல...'

'எவர் பேச்சையும் நான் தவருகக் கருதுவது கிடையாது. மேலும் நமக்குள் சமாதானங்களும், காரண காரிய விளக்கங்களும் தேவை இல்லை'—என்று தீர்மானமாகத் தெரிவித்தான் மாதவன்.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள் அவள். பிறகு, 'உங்களுக்கு சினிமா உலகத்தின்மீது வெறுப்பு எதுவும் கிடையாதே?' என்று கேட்டாள்.

மாதவன் நல்ல தமாஷை அனுபவிப்பதுபோல் உரக்கச் சிரித்தான்.

அவள் விஷயம் புரியாதவளாய், 'என்ன? ஏன் சிரிக்கிறீர்கள்?' என்ருள்.

'இந்த உலகத்தில் உள்ள சகலவற்றின்மீதும் எனக்குத் தீவிரமான வெறுப்பு உண்டு. சினிமா உலகம் மட்டும் விதிவிலக்கா என்ன?'

'ஏன் கேட்கிறேன் என்ருல், சினிமா உலகத்தில் ஈடுபட்டு உழைக்க நீங்கள்...'

'வாய்ப்புக் கிடைத்தால் எந்த உலகத்திலும் எந்த வேலையாளுலும் பார்க்க நான் தயார். நரகலோகத்துக்குப் போக வேண்டுமாளுலும் நான் மகிழ்ச்சியோடு போவேன்.'

'சினிமா உலகம் வாழத் தெரிந்தவர்களுக்குச் சொர்க்க பூமியாகத்தான் இருக்கிறது. நீங்கள் வீணாக நரகத்தின் பேச்சை எடுக்க வேண்டாம்' என்று கூறிய வசந்தா, 'உம் அப்படியானால் நாம் நேரே அவரைச் சந்திக்கப் போகலாம்' என்றாள்.

'யாரை?'

'படாதிபதி ஒருவரை எனக்குத் தெரியும். அவர் இப்ப புதிதாக ஒரு படம் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். படத் தின் பேர், கதை, யார் யார் நடிக்கிறார்கள் என்பதெதுவும் எனக்குத் தெரியாது. அவரே கதை எழுதியிருப்பதாகவும், வசனம் எழுத உதவிக்கு ஒரு ஆள் தேடிக்கொண்டிருப்பதாக வும் சொன்னார் அந்த முதலாளி. அப்படி ஒரு ஆள் அவருக்கு அகப்பட்டிருந்தாலும் பரவால்லே. நான் சொன்னால், அவர் உங்களையும் எடுத்துக்கொள்வார். கம்பெனி வீடு என்கிற இடம் ரொம்ப வசதியாகவும், சரியான சோம்பேறி மடமாக வும் விளங்குகிறது. வேளை தவறாமல் அருமையான சாப்பாடு. சாயங்காலம் ஸ்வீட், காரம், காப்பி. இதற்கெல்லாம் குறைவே கிடையாது. நீங்கள் அங்கு போனபிறகு நிலைமையை ஆராய்ந்து, உங்கள் திறமைக்குத் தக்கபடி...'

'வந்தனம் வசந்தா. இதற்கு மேல் எனக்கு வழிகாட்ட வேண்டிய சிரமம் உனக்கு வேண்டாம்' என்று ஒரு கும்பிடு போட்டான் மாதவன். சிரிப்பின் செல்வியான வசந்தா குலுங்கிக் குலுங்கி சிரித்தாள்.

'அந்தப் படாதிபதியின் பெயர் என்னவோ?' என்று மாதவன் கேட்டான்.

'பிறவிப்பெருமாள்! உண்மையிலேயே அவர் பெரிய ஆள்தான்' என்றாள் அவள்.

'அவர் பெரிய பணக்காரரா?'

'பவானந்தம் அளவு பணம் அவரிடம் கிடையாது. இருந்தாலும் வசதிகள் நிறைந்தவர். எப்படிப் பணம் பண்ணுவது என்ற வித்தையை நன்கு அறிந்தவர்...'

'இல்லே. சொந்தத்திலே படம் பிடிக்கத் துணிந்திருக்கிருரே என்பதனுல் விசாரித்தேன். வேறெண்ணுமில்லே' என்று இழுத்தான் அவன்.

'பணம் மிகுதியாகப் பெற்றவர்கள்தான் படம்பிடிக்க முன்வருவார்கள் என்று நீங்கள் நினைத்தால், அது தப்பு. பணம் ஒரு சிலரிடம் ரொம்ப நிறைய இருக்கிறது. அதைச் செலவு செய்யும் வழி நமக்குத் தெரியும்; செலவு செய்யாதவர்களின் பணத்தை எடுத்து, வாரி வாரிச் செலவு செய்யும் தகுதி நமக்கு இருக்கிறது என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டால் போதும், நீங்கள்கூட ஒரு பட முதலாளி ஆகிவிடலாம்' என்ற வசந்தா தனது பேச்சை ரசித்து அதிகமாகச் சிரித்தாள்.

படாதிபதி பிறவிப்பெருமாள் வசந்தாவின் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்லவில்லே. மாதவனைத் தமது 'விடிவெள்ளி புரடக்ஷன்ஸி'ல் சேர்த்துக்கொண்டார். 'இனி மேல் நீங்க கவலேப்படவே வேண்டாம். இவரு நம்ம ஆளு ஆயிட்டாரு இன்று முதல்' என்ருர் முதலாளி.

அவர் கூறியபடியே கவனித்துக்கொண்டார். மாதவனுக்கு 'அஸிஸ்டன்ட்' என்ற பொறுப்பு அளிக்கப்பட்டது. யாருக்கும், எதற்கும், எப்பவும் 'அஸிஸ்டன்ட்' ஆகப் பணி புரியலாம் அவன். முதலில் மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் என்று அறிவித்தார் அவர்.

'இவ்வளவு ரூபாயை நான் எப்படிச் செலவு செய்யப் போகிறேன்!' என்று மலேத்தான் மாதவன். 'சாப்பாடு இலவசம். தங்குமிடம் சும்மா. எங்காவது போக வேண்டுமானுல் கம்பெனிக் காரிலேயே போகலாம். அப்புறம் என்ன செலவு ஏற்படப்போகிறது!' என்று திகைத்தான்.

சினிமா உலகம் அதிசயமானது. அது ஒரு தனி உலகம். காலத்தையும் பணத்தையும் பற்றிய கவலே அங்கு சஞ்சரிப்பவர்களுக்குக் கிடையாது. சும்மா வெட்டிப் பொழுது போக்குவதுதான் அங்கே காணப்படும் பெரும்பாலாரின்

நோக்கம். தங்களை ஆடம்பரமாக அலங்காரம் செய்து கொள்வதிலும் ஜம்பம் பண்ணுவதிலும், திறமை இல்லா விட்டாலும் இருப்பதுபோல் நடப்பதிலும் கடன் வாங்கி யாவது ஜாலி பண்ணுவதிலும் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். திறமை என்று உண்மையாகவே கருதப்படுகிற அம்சத்துக்கு அவ்வுலகில் மதிப்புக் கிடையாது. உண்மையான திறமை சாலிகள் உண்மையாக உழைத்து உயர்வு காண்பது நிச்சயம் என்கிற நிலை எதுவும் அங்கு செல்லுபடியாகாது. அவ் வுலகில் சுகமாக வாழவும், சிறப்பாக முன்னேறவும் முக்கிய மான சில கலைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

மாதவன் அங்கு புகுந்த சில மாதங்களிலேயே இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்து, அவ்வுலகில் நீடித்து வாழ்வதற்கு மட்டுமல்ல, நன்றாக முன்னேறுவதற்கும் தேவையான யுக்தி களையும் கற்றுக்கொண்டான். தீவிரமாகக் கையாண்டான், பலனும் பெற்றான்.

பிறவிப் பெருமாளுக்குக் கதை எழுதுவதிலும், வசனம் தயாரிப்பதிலும் உதவிபுரிந்தான். டைரக்டருக்கு எதெற் கெல்லாமோ உதவினான். புரடக்ஷன் மானேஜருக்கு மிகுந்த பக்கபலமாக இருந்தான். முக்கிய நடிகர்களுக்கும், நடிகை களுக்கும் நல்லவனாக விளங்கினான். எல்லோருக்கும் அவனைப் பிடித்துவிட்டது.

படாதிபதிக்கு அவனை ரொம்ப ரொம்பப் பிடித்தது. 'மாதவன், நீயும் ஒரு ஆக்டிலே வந்து பாரேன்!' என்றார்.

'என்னாலே என்னங்க நடிக்க முடியும்!' என்று தலையைச் சொறிந்தான் அவன்.

'ஒவ்வொருவனும் ஒரு நடிகன் தாம்ப்பா. அதை வளர்க் காததனாலே அது வீணாகிவிடுது. நீ சும்மா நடி தம்பி!' என்று உற்சாகப்படுத்தினார் முதலாளி. 'சும்மான்னு காசில் லாமே என்கிறதுக்குச் சொல்லலே அப்பேன்! பணம் தரா மல் இருப்பேனா?' என்று ஹாஸ்யமும் பண்ணினார்.

அவனும் துணிந்து நடிக்க இசைந்தான். கதையில் தனக்கு ஏற்ற முறையில் ஒரு பாத்திரத்தை சிருஷ்டித்துக் கொண்டான்.

சினிமா உலக நியதிப்படி 'விடிவெள்ளி புரடக்ஷன்'ஸின் படம் அவசரமில்லாமலே வளர்ந்து, ஒரு மாதிரி படமும் வந்தது, வெற்றியும் பெற்றது. மாதவனைப் பாராட்டுவதற்கும் ஆட்கள் இருந்தார்கள்.

மாதவன் வசந்தாவைச் சந்தித்து வந்தான், என்றாலும், வர வர அவள் விலகிச் செல்வது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அதற்காக அவன் கவலை கொள்ளவுமில்லை. அவளுக்குப் புதிய நண்பன் எவனாவது கிடைத்திருக்கலாம் என்று எண்ணினான்.

அவனுக்கும் புதிதாக ஒரு சிநேகிதி கிடைத்துவிட்டாள். அந்தக் கம்பெனியின் இரண்டாவது படத்தில் நடித்துக் கொண்டிருந்த குமாரி சம்பா மாதவனின் தோற்றத்தாலும், பேச்சினாலும், குணத்தினாலும் வசீகரிக்கப்பட்டாள். அவனும் அவளும் படத்தில் ஜோடியாக நடித்தனர். எங்கும் எப்பொழுதும் ஜோடியாகக் காட்சி அளிக்கலாயினர்.

குமாரி சம்பா வேறு கம்பெனிப் படங்களிலும் நடித்துக் கொண்டிருந்தாள். கதாநாயகி பார்ட் அவளுக்கு அளிக்கப்படுவதில்லை. பிரபல நட்சத்திரங்களுக்கே அத்தகைய வேடமெல்லாம் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தன. ஆயினும், கதாநாயகிக்கு அடுத்தபடியான பாகங்கள் அவளுக்குக் கிடைத்தன. பணமும் தாராளமாக அவளிடம் சேர்ந்தது.

மாதவனிடமும் ஆயிரக்கணக்கில் பணம் புரளத் தொடங்கியது. அவன் உடைகளில் மாறுதல் ஏற்பட்டது முதலில். கழுத்தில் தங்கச் சங்கிலியும், விரலில் மோதிரம் ஒன்றும் கொலுவிருந்தன. அவனிடமிருந்து இனிய வாசனை அலைகள் பரவின. சம்பாவோ வாசனைக் குளத்திலே மூழ்கி எழுந்தவள்போல 'நெஞ்சில் கனல் மணக்கும்' சுகந்த பதார்த்தமாகவே திரிந்தாள்.

மாதவன் சிறிது சிறிதாகப் பிரயோகித்த போதனைகள் சரியானபடி வேலை செய்தன. 'சம்பா, நீ ஏன் இப்படி இரண்டாந்தர, மூன்றாந்தர வேஷங்களையே ஏற்று நடிக்க வேண்டும்? கதாநாயகியாக நடிக்கும் ஸ்டார்கள் உன்னைவிட என்ன உயர்ந்துவிட்டார்கள்? அவர்களிடம் இருப்பதைவிட அதிகமான திறமையும், கவர்ச்சியும், இளமையும் உன்னிடம் இருக்கின்றன. நீ முதல்தர ஹீரோயின் ஆக நடிக்க முடியும். சுலபத்தில் ஸ்டார் ஆகிவிடலாம். நாமே படம் பிடிப்போம். அதுதான் சிறந்த வழி" என்று அவன் கூறி வந்தான்.

அவளும் அதற்கு இசைந்தாள். மாதவனே ஒரு கதை எழுதினான். ஜனங்களின் ருசிகளை நன்கு அறிந்து வைத்திருந்த அவன், அவர்களைத் திருப்தி செய்யக்கூடிய முறையிலும், தன்னுடைய திறமையும் சம்பாவின் திறமையும் நன்கு சோபிக்கக்கூடிய வகையிலும், அருமையான கதை ஒன்றைத் தயாரித்தான். படம் வெற்றி பெறுவதற்குத் துணைபுரியக் கூடியவர்களின் உதவியை எல்லாம் தேடிப் பிடித்துப் பயன்படுத்திக்கொள்ள அவன் தவறவில்லை.

இதற்குள், 'விடிவெள்ளி'யின் இரண்டாவது படமும் வெளிவந்து, வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

மாதவன் 'நாட் குறிப்பு' எழுதுவதில்லை. அப்படி எழுதினால், அதில்—பொன்னிற மை கிடையாததால்—சிவப்பு மையால் பொறிக்கப்பட வேண்டியது என அவன் கருதிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது ஒருநாள்.

மாதவன் கடைவீதியில் கார் அருகே நின்றுகொண்டிருந்தான். சம்பா ஜவுளிக் கடைக்குள் சென்றிருந்தாள். வீதியில் அவ்வளவாகக் கூட்டமில்லாத நேரம். மேலும், 'ரஸிக மகா ஜனங்'களால் முற்றுகையிடப்படக்கூடிய அந்தஸ்தை அவ்விருவரும் இன்னும் பெறவில்லை. ஆகவே, அவர்கள் சாதாரணமாகக் கடைவீதியிலும் கடலோரத்திலும் காட்சி தர முடிந்தது.

திடீரென்று அவன் பக்கத்தில் வந்து நின்ற ஒருவர் அவனைக் கூர்ந்து கவனித்தார். வாய் பிளந்து நின்றார்.

'என்னடே, நீ தானு! ஆளே ஒரே அடியா மாறிப்போயிட்டியே?' என்று பல்லெல்லாம் காட்டிப் பேசினுர்.

மாதவன் அவரைப் பார்த்தான். இறந்த காலத்தின் சாயை தன் முன் முளைத்து நிற்கிறதே என்ற வியப்பு பிறந்தது அவனுக்கு. சில வருஷங்களுக்கு முன்பு அவன் அளவிட முடியா அன்புசெலுத்திய காந்திமதியின் தந்தை சங்கரலிங்கம் பிள்ளைதான் அவர். பட்டணத்துக்கு ஏதோ 'கேஸ் விஷயமாக' வந்திருந்தார். தற்செயலாக அவனைக் கண்டு விட்டார்.

'ஆமாம். மாருமல் எப்படி இருக்க முடியும்? மாறுதல் வளர்ச்சியின் அறிகுறிதானே!' என்ருன் மாதவன்.

'மாட்டு வால் வளர்ச்சியாக இருந்தாலும் சரிதானே?' என்று கிண்டலாகக் கேட்டார் பிள்ளை.

'என்னது?'—வெடுக்கென்று தெறித்தது அவன் கேள்வி.

'மாட்டு வாலும் வளரத்தானே செய்யுது? கீழ்நோக்கி. அதைத்தான் சொன்னேன்' என்ருர் பிள்ளை.

மாதவன் அதை அலட்சியப்படுத்தக் கருதி, பேச்சை மாற்றினுன். 'காந்திக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?' என்று விசாரித்தான்.

'ஓ! இரண்டு குழந்தைகள்கூட இருக்கு' என்று பெருமையாகச் சொன்ஞர் அவர்.

'ரெண்டு பிறந்துவிட்டதா? பேஷ் பேஷ்! அப்ப அவளுக்குக் குறை எதுவும் இராதுதான்!' அவன் குரலில் பரிகாசம் தொனித்தது.

'போயும் போயும் நீ கூத்தாடியாக மாறுவேன்னு யாரும் எண்ணலேடே. நீ சொல்லாமப் புரயாமே வீட்டை விட்டு, ஊரைவிட்டு ஓடிப்போனதும், எங்காவது குளத்திலேயோ, இல்லே ரயிலடியிலேயோ விழுந்து செத்திருப்பேஅப்டீன்னு நெனச்சோம். பிறகு ஒருநாள் திடீர்னு நம்ம ஊர்க்காரன்லாம் உன்னேப்பத்தி பேச ஆரம்பிச்சிட்டானுக, ஏதோ ஒரு படத்தைப் பார்க்கப்போன பயலுக, ஏய்-நம்ம

மாதவன்லா அது இன்னு கத்திவிட்டானுக. அவனுக வந்து ஊரு பூராவும் தமுக்கடிக்க ... அப்புறம் இருந்தான் குடியா எல்லாரும் அந்தப் படத்தைப் பார்க்கப் போக...'

'நீங்களும் பார்க்கப் போனீங்களா?' என்று குறுக்கிட்டான் மாதவன்.

'போனேன் போனேன்.'

'பின்னே என்ன பேச்சு வாழுது? விட்டுத் தள்ளுங்க!' என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

'என்ன இருந்தாலும் மாதவா, இது நம்ம குடும்ப அந்தஸ்துக்கு அடுக்குமா? உன் தாத்தா வாழ்ந்த வாழ்வென்ன? உன் அப்பா—அவுக...அடா அடா, ராஜா மாதிரி போடு போடுன்னு வாழ்க்கை நடத்தினுக. அவுக பேரைக் கெடுக்கிற மாதிரி நீ...'

'சரிதான் நிறுத்தும். வீணுக வாயை மேய விடாதியும்!' என்முன் அவன்.

சங்கரலிங்கம் பிள்ளை அசந்துபோய் விட்டார். அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவாரோ என்றுகூடத் தோன்றியது. தன்னை மரியாதைக் குறைவாக எவனுமே பேசத் துணியாத, தன் முன்னுலேயே ஒருவன் இப்படி அதட்டிவிட்டானே என்ற நினைப்பு அவர் தேகத்தைப் படபடக்க வைத்தது.

மாதவனே வெறிபிடித்தவன்போல் பேசினன்: 'முப்பத்திரெண்டு வருஷ காலம் நானும் குடும்பப் பெருமை, முன்னேர் கௌரவம், தருமம், நியாயம் என்றெல்லாம் பயந்து பயந்துதான் வாழ்ந்தேன். அப்போ தினம் வயிற்றச் சாப்பிடக்கூட முடிந்ததில்லை என்னுல். சாப்பாடு கிடைக்கலே; செலவுக்குக் காசு கிடையாது. எவனும் கடன் தரவும் துணியலே. நான் நல்லவனுகவே வாழணும்—என் அப்பா பெயரும், தாத்தா நினைவும் சீர்குன்றுமல் இருக்கணும்—என்கிற எண்ணம் உண்மையாகவே உமக்கு இருந்திருக்குமானுல், நீர் எனக்கு உதவி செய்திருக்க முடியாதா, என்ன?

காந்திக்கு பணக்கார இடமாகத் தேடி அலைந்திருப்பீரா? இப்ப நான் ஜாம் ஜாம்னு வாழ்கிறபோது என்னைப் பழித்துப் பேச வந்துவிட்டீரே!...'

அவன் தன்னை மறந்த நிலையிலே கத்திக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் சிறு கும்பல் கூடிவிட்டது.

'அப்பா! என்ன இது?' என்ற குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது. பிள்ளை அவர்களுக்கும் உணர்வூட்டியது.

மாதவன் எதிரே பார்த்தான். காந்திமதி, இடுப்பில் ஒரு குழந்தையுடன் நின்றாள். தன் குழந்தையின் கையைப் பற்றியபடி அவனையே கூர்ந்து நோக்கி நின்றாள்.

'மாமா என்ன விஷயம்?' என்று கேட்டபடி, அவள் கணவன் அம்பலவாணனும் அங்கு ஆஜரானான். அவன் கையிலும் ஒரு குழந்தை இருந்தது. அவன் மாதவனை முறைத்துப் பார்த்தான்.

மாதவன் அவளைக் கவனித்தான். அவள் முன்னைவிடப் பருமனாக வளர்ந்திருந்தாள். குழந்தைகள் பெற்றதனாலும், மிதமிஞ்சிய தீவனத்தாலும், சுகவாசத்தாலும் அவள் உடல் பொலிவுகுன்றிக் காணப்பட்டது. அவன் போற்றி வியந்த இனிய அழகு—பெண்மையின் பூரண சௌந்தர்யம்—அவளை விட்டு விலகி மறைந்திருந்தது.

'அத்தான்?' என்று முணுமுணுத்தன அவள் உதடுகள்.

'ஏய்!' என்ற அதட்டல்--அதிகார அடக்குமுறை—கணவனிடமிருந்து பிறந்தது உரிமையோடு.

'இந்த அயோக்கியனா உன் அத்தான்? அப்படிச் சொன்ன வாயை வெந்நிவிட்டு அலம்பு, முதல் காரியமாக' என்று சங்கரலிங்கம் பிள்ளை சொன்னார்.

மாதவன் சிரித்தான். 'உனக்குத் தெரிந்திருந்த அத்தான் செத்து எத்தனையோ வருஷங்களாச்சு. நான் வேறு மாதவன். அந்தப் பழைய அப்பாவியையும், ஒரு பௌர்ணமியின்போது அவன் சொன்ன பேச்சுகளையும் நீ

மறந்துவிடலாம் அம்மா. அவசியம் மறந்துவிடத்தான் வேண்டும்' என்ருன்.

'இதென்ன நாடகம்? ஏனிவ்வளவு கும்பல்?' என்று கேட்டுக்கொண்டே, குமாரி சம்பா, ஜவுளிப் பொட்டணத் துடன் மாதவன் அருகே வந்து சேர்ந்தாள். காரைத் திறந்து, ஜம்மென்று உட்கார்ந்தாள். 'உம் ஏறலாமே!' என்ருள்.

மாதவன் எதுவுமே நடவாததுபோல், அங்கு நின்றவர் களில் யாரையும் அறியாதவன்போல்...காரில் அமர்ந்தான். அவனையும் அவன் அருகில் இருந்தவளையும் மாறிமாறிப் பார்த்த காந்திமதி பெருமூச்செறிந்தாள். அவள் கண்கள் கலங்கின.

'இங்கேயே நிற்பானேன்? உம், நட' என்று அவளுக்கு உத்திரவிட்ட அம்பலவாணன் 'வாங்க மாமா' என்று கூறி, முன் நடந்தான்.

'உம். எல்லாம் நம்ம தலைவிதி...காலம் கெட்டுப் போச்சு!' என்று முனங்கிக்கொண்டே பின்தொடர்ந்தார் பிள்ளை.

மாதவன் 'தொட்டது அனைத்தும் துலங்கும்' காலம் அது என்றே தோன்றியது.

'சம்பா ஆர்ட் புரடக்ஷன்'ஸின் முதல் படம் பிரமாத மான வெற்றி பெற்றது. அதன் மூலம் குமாரி சம்பா நட்சத் திர மதிப்பு பெற்ருள். மாதவன் புகழ் உயர்ந்துகொண்டே போயிற்று.

ரசிக மகா ஜனங்களின் உள்ளத்திலே உறுதியான இடம் பெற்றுவிட்டான் அவன். மாதவன் 'ரொம்ப ஸீரியஸ்' ஆகவும் நடிக்கவில்லை. ஒரே கோமாளிக் கூத்தும் அடிக்க வில்லை. ஹீரோவுக்கு வேண்டிய காம்பீரியத்துடன் நடந் தான். அதே சமயத்தில் சிறிது கோமாளித்தனத்தையும் கலந்து அளித்தான். கத்திச் சண்டை செய்தான் அவன். அதைக்கூட, அமெரிக்கப் பட உலக நடிகன் ஒருவன் செய் வதுபோல தமாஷாகவும், சாமர்த்தியமாகவும் செய்து

காட்டி, படத்தில் வரும் எதிரிகளை ஏமாற்றி, படம் பார்க்கிறவர்களைச் சிரிக்கச் சிரிக்க அடித்தான். சிரத்தையோடு கதை உருவாக்கி, சிரமத்தோடு உழைத்து, பலரது ஒத்துழைப்பையும் பெற்று, எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய அழகான கலைச் சித்திரத்தை அவன் தயாரித்துக் காட்டினான்.

எனவே, அவனுக்கும் அவனோடு உழைத்தவர்களுக்கும் நல்ல வெற்றி. பணமும் புகழும் தாராளமாக வந்து குவிந்தன. ஐம்பதாவது நாள். நூறாவது நாள்..இருபத்தைந்தாவது வாரம் என்று வெற்றிவிழா ஊர்தோறும் கொண்டாடப்பட்டது. விழா நிகழும் ஊருக்கெல்லாம் மாதவனும், குமாரி சம்பாவும் விஜயம் செய்தார்கள். ஆரவாரமான வரவேற்பு பெற்றார்கள்.

மாதவன் 'மகோன்னதமான இரண்டாவது படம்' தயாரிப்பதில் ஈடுபட்டான். இடைக்காலத்தில் ஜோரான பங்களா ஒன்றும் கட்டி முடித்தான். அதில் சகல வசதிகளும் நிரம்பியிருந்தன. அழகு அம்சங்களும் கலைநயத்துடன் சேர்க்கப்பட்டிருந்தன. 'வாழ்வது என்றால் இவ்வாறு வாழ்க்கை நடத்துவது அல்லவா வாழ்வு!' என்று அவன் எண்ணி எண்ணி மகிழ்ந்தான். சம்பாவுக்குப் பெருமை யாவது பெருமை! அவளும் அந்த வீட்டிலேயே வசித்தாள். ராணி மாதிரி வாழ்ந்தாள் அவள்.

'ராஜா மாதிரி வாழவேண்டும்' என்று ஆசைப்பட்டான் மாதவன். 'ராஜா மாதிரி என்ன? ராஜாவாகவே வாழலாம். இக்காலத்தில் சினிமா நட்சத்திரங்கள் தான் அப்படி வாழ முடியும். நாம் துணிந்து வழிகாட்டலாமே!' என்று தூண்டியது அவன் மனம்.

எண்ணியதை எண்ணியபடி செய்து முடிக்கும் வசதிகள் தான் அவனிடம் இருந்தனவே! ஆகையால் அனைவரும் பிரமிக்கத்தக்க வகையில் செயல்புரிந்தான் அவன்.

புராதன ரோம் நாட்டின் பிரமுகர்கள் அணிந்தது போன்ற அங்கியும் அதன்மீது துவண்டு தொங்கிக் கிடக்கும் 'டோகா'வும் தயாரித்துக்கொண்டான் மாதவன். அங்

கங்கே மின்னும் பொன் ஜரிகை வேலைகள் செய்தான் அவற்றிலே. கம்பீரத் தோற்றமுடைய குதிரை ஒன்று வாங்கினுன்.

கறுப்புநிறக் குதிரை. மினுமினுக்கும் உடல் வனப்பு. எடுப்பான வளர்ச்சியும் மிடுக்கான நடையும் பெற்றிருந்த அது சும்மா நடந்துபோனுலே, எல்லோரும் திரும்பித் திரும்பிப் பார்ப்பார்கள். அத்தகைய கவர்ச்சிபெற்ற அழகான குதிரை அது. அதன் நெற்றியில் எழிலான திலகம் போல சிறிது வெண்மை படிந்திருந்தது.

மாதவன் குதிரையேற்றம் பயின்று, தகுந்த தேர்ச்சி பெற்றதும், ஒருநாள் தனது புதிய ஆடையை அணிந்து கொண்டு குதிரைமீது பவனி வந்தான். பட்டணத்தின் முக்கிய வீதிகளில் எல்லாம் காணப்பட்டான். ஜன நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் எல்லாம் அவன் ஜம்மென்று குதிரை சவாரி செய்தான்.

எல்லோர் கண்களும் அவன்மீதே மொய்த்தன. தெருவில் நடந்தவர்கள் நின்று பார்த்தார்கள். வீடுகளில் வாசற்படியில் நின்றவர்கள் ஆச்சரியமாகக் கவனித்ததோடு, உள்ளேயிருந்தவர்களுக்கும் செய்திகூற, ஜன்னல்களின் பின்னும் மொட்டை மாடிகளிலும் வேடிக்கை பார்க்கும் முகங்கள் பூத்தன.

பிரமாதமான ஓர் காரியத்தைச் செய்துவிட்ட திருப்தி நிறைந்தது அவன் உள்ளத்திலே. அன்று முதல் மாலை வேளைகளில் அவ்விதம் பவனி வருவதை வழக்கமாக்கிக் கொண்டான் அவன்.

அத்துடன் மாதவன் திருப்தி அடைந்துவிடவில்லை, அருமையான சாரட்டு வண்டி ஒன்று செய்து முடித்தான். ஜோரான இரண்டு வெண் புரவிகள் வாங்கினுன். அவ் வண்டியில் அவனும் சம்பாவும் உல்லாசமாக ஊர்வலம் வந்தபோது, எங்கும் ஏற்பட்ட பரபரப்பு! ஆகா, அதற்கு இணை அது தான்.

பழங்கால ராஜாக்கள் அணிந்துவந்தது போன்ற பகட்டான அங்கிகளை ரகம் ரகமான வர்ணங்களில், தயார்

செய்துகொண்டு நாளைக்கொரு தினுசாகவும் வேளைக்கு ஓர் விதமாகவும் சிங்காரித்துக்கொண்டு காட்சி அளித்தான் அவன்.

இவை எல்லாம் அருமையான சுய விளம்பரங்களாக உதவின. அவன் மக்களின் கவனத்தைக் கவர்ந்தான். எல்லோர் பேச்சுக்கும் பொருள் ஆனான். மங்கையரின் நினைவிலே நிழலாடினான். எழிலிகள், ஒய்யாரிகள், உல்லாசிகள் பலரது உள்ளத்திலும் நீங்காத இடம்பெற்றான்.

முதன் முதலாக சம்பளம் என்று இருநூறு ரூபாய் கிடைத்ததும், இந்தத் தொகையை எப்படிச் செலவு செய்வது என்று புரியாது திகைத்த மாதவன், இப்போது ஆயிரம் ஆயிரமாக வீசி எறிந்து கொண்டிருந்தான். 'பணம் நம்ம செலவுக்குப் போதவில்லையே, எவ்வளவு வந்தாலும் கட்டுபடியாகாது போலிருக்குதே!' என்று வருத்தப்படவும் செய்தான்.

குமாரி சம்பாவும் அவனுக்கு ஏற்ற தோழியாகத்தான் விளங்கினாள். அவள் நாகரிக முறைகளிலும், அலங்காரக் கலையிலும் தலைசிறந்தவளாகி விட்டாள். அவள் செய்து கொள்ளும் சிங்காரிப்புகள் எல்லாம், அணிந்துகொள்ளும் ஆடை அணிகள் எல்லாம், வெகு விரைவிலேயே 'புதிய பாஷன்' என்று எங்கும் பரவின.

இதனாலெல்லாம், குமாரி சம்பாவும் மாதவனும் நடித்த படங்களுக்கு அமோகமான ஆதரவு கிட்டியது. எல்லாம் வெற்றி! எங்கும் மகத்தான வசூல்!

மாதவன் பணம் பெருகப் பெருக தாராளத்தனம் காட்டினான். 'பணம் என்பது செலவு செய்யப்படுவதற்காகத் தான். சேமித்து வைப்பதற்காக அல்ல' என்று கூறினான் அவன். நாம் வாழ்வதோடு மற்றும் பலரும் வாழட்டுமே என்று அவன் தர்ம ஸ்தாபனங்களுக்கும், சங்கங்களுக்கும், சேவா நிலையங்களுக்கும், பரோபகார விடுதிகளுக்கும், தகுதி பெற்ற தனி மனிதர்களுக்கும் கஞ்சத்தனம் இல்லாமல் வழங்கினான்.

அவன் பெயரும் புகழும் எங்கும் பரவின. சில 'மஞ்சள் பத்திரிகைகள்' அவனைப்பற்றி வசைபாடின. அதற்காக அவன் வருந்தவில்லை. 'லட்சியப் பாதையில் நான் வெற்றிகரமாக முன்னேறுகிறேன் என்றுதான் இதற்கு அர்த்தம்' என்று சொல்லிச் சிரித்தான் மாதவன்.

தனது வாழ்வின் வளர்ச்சிபற்றி திருப்திகொள்ளும் மாதவனின் உள்ளத்தில், அடிக்கடி ஒரு குறை வேதனையாக உறுத்திக்கொண்டே இருந்தது. அவன் நினைவில் ஒரு முகம் தோன்றும். கேலியாகச் சிரிக்கும். அந்தச் சிரிப்பொலி நீங்காது எதிரொலித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை எழும் அவனுக்கு.

என்றோ ஒருநாள் எவளோ ஒருத்தி அவனைப் பார்த்துச் சிரித்தாளே அதை அவன் மறக்கவில்லை. அவன் நினைவு அவள் முகத்தை அழியாமல் பாதுகாத்து வந்தது. அவன் கண்கள் விழிப்புடனிருந்து அவளுக்காக எங்கும் எப்பொழுதும் வலைவீசின. அவளை எப்படியும் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை அவனுள் அழுத்தமாகப் பதிந்து கிடந்தது.

கம்பீரமாகக் குதிரைமீது செல்லும்போதும், ஒய்யாரமாக சாரட்டில் போகும்போதும் அவன் விழிகள் எங்கெங்கோ நீந்திய முகக் காடுகளிலும், அழகு முகங்களின் அற்புதத் தொகுதிகளிலும் சுழன்று சஞ்சரித்தன. எவ்வளவோ முகங்கள் அவனைப் பார்த்தன. ஆயினும், அந்த ஒரு முகத்தை, சிரிக்கும் சுடர்க் கண்களை—அவன் காண முடியவில்லை. அதனால் அவன் நம்பிக்கை வறட்சி எய்திவிடவுமில்லை.

ஒரு சமயம் அந்தச் சிங்காரியை அவன் பார்த்ததாக நினைத்தான். ஒரு சினிமாவில் விசேஷக் காட்சி முடிந்து கும்பல் நெருக்கி இடித்து நகர்ந்துகொண்டிருந்தது. கூட்டத்தில் ஒரு இடத்தில், அடர்த்தியான இலைகளுக்கு மத்தியில் மலர்ந்து காணப்படும் தாமரைபோல, அம்முகம் பளிச்சிட்டது. அவன் அப்பெருங் கூட்டத்தினுள் புகுந்து அவள் அருகில் செல்வது சாத்தியம் அல்ல. அவன் அவளை நெருங்குவதற்குள்

அவள் காரில் ஏறி மறைந்துவிடலாம். மேலும், அவன் சிறிது தூரம்கூட செல்ல முடியாதபடி கும்பல் அவனை மொய்த்து நெருக்கிவிடுமே!

வேறொரு சந்தர்ப்பத்தில் அவன் குதிரைமீது அமர்ந்து ரஸ்தாவில் ஒரு 'லெவல் கிராஸிங்' அருகே ரயில் வண்டி போய், கதவு திறக்கப்படுவதற்காகக் காத்து நின்றான். அப்பொழுது வேகமாகச் சென்ற வண்டித் தொடரின் ஒரு ஜன்னல் ஓரத்தில் அந்த முகம் காட்சி தந்தது.

ஆகவே அவள் பட்டணத்தில்தான் இருக்கிறாள் என்ற உறுதி அவனுக்கிருந்தது. அவளை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு அவசியம் வரும்; வந்தே தீரும் என்று அவன் நெஞ்சில் எதுவோ ஒன்று சதா அறிவுறுத்தி வந்தது. கனவிலேகூட அவள் அவனைப் பார்த்துப் பரிகசிப்பது போன்ற காட்சிகளே மிகுதியாக வந்து போயின.

'தான் என்னதான் வெற்றி பெற்றாலும்' எவ்வளவு ஆடம்பரமாகவும் பெருமையோடும் வாழ்ந்தாலும், இனம் தெரியாத அந்த அலங்காரியைச் சந்தித்து அவளுக்குச் சரியான பாடம் கற்பிக்காவிட்டால், தன் உள்ளத்தில் அமைதி ஏற்படவே ஏற்படாது என்றே தோன்றியது அவனுக்கு. தனக்கு இதுவரை உதவிபுரிந்து ஊக்குவித்த காலம் என்றாவது ஒருநாள் அவளையும் தன்முன் கொண்டு வந்து நிறுத்தாமல் போகாது என்று அவன் திடமாக நம்பினான்.

அவனுடைய நம்பிக்கை பொய்த்து விடவில்லை.

ஒருநாள் காலையில் மாதவன் சாரட்டில் கிளம்பி, 'மன அமைதி நாடி'ச் செல்வதாகச் சொல்லி வெகுதூரம் சென்றான். பல மைல்களுக்கு அப்பாலுள்ள அழகிய சிற்றூர் ஒன்றை அடைந்து, அவ்வூர் ஓரமாக அமைதியோடு திகழும் கடற்கரைப் பக்கம் சேர்ந்தான். அங்கு சிறிதுநேரம் போக்கி விட்டுத் திரும்பும்போது மணி பதினொன்றிருக்கலாம்.

நல்ல வெயில். பட்டணத்துக்கு இரண்டு மைல் தள்ளி, ஜன நடமாட்டம் இல்லாத ரஸ்தாவில், ஒரு கார் அசைவற்று

நின்றது. அதன் அருகே ஒரு ஒய்யாரி கவலைபடர்ந்த முகத்தோடு நின்றாள்.

அந்த முகத்தைக் கண்டதும் மாதவனின் உள்ளம் குதூகலித்தது. அவன் முகம் மலர்ச்சியுற்றது. வண்டியை அக் காரின் சமீபமாக—மிக மெதுவாய்—செலுத்தும்படி அவன் சாரதிக்கு உத்தரவிட்டான். அவன் பார்வை அவள் முகத்திலேயே பதிந்து நின்றது.

அவள் இமைகள் படபடத்தன. குழப்பத்தோடு அவள் அப்படியும் இப்படியும் முகம் திருப்பினாள். சற்றே தயங்கினாள். பிறகு அவன் முகத்தை நன்றாக நேரே நோக்கினாள். அவன் யார் என்பது அவளுக்குப் புரிந்திருக்கவேண்டும். ஆகவே அவள் முகம் பிரகாசம் பெற்றது. இதழ்களில் புன்னகை ஊர்ந்தது. 'நமஸ்காரம்' என்று கரம் குவித்தாள் அவள்.

அவளை அந்நேரத்தில் அந்த இடத்தில் சந்திக்க முடியும் என மாதவன் எண்ணியதில்லை. அதே மாதிரிதான், சந்திக்க நேரிட்டால் அவளாகவே முன்வந்து பேசத்துணிவாள் என்று அவன் நினைத்ததும் கிடையாது.

அவளைக் கண்டால் எப்படி அணுகலாம், எவ்வாறு பேச்சு கொடுத்து வம்புக்கு இழுக்கலாம் என்பது பற்றி எல்லாம் அவன் எண்ணத் தறியில் இழைகள் ஓடவிட்டுப் பொழுது போக்குவது வழக்கம்தான். ஆனால், இப்போது அவன் திட்டமிட்டிராத முறையிலே ஒரு வாய்ப்பு கிட்டிவிட்டது. இனி அவனுக்கு மிகவும் சௌகரியமான சந்தர்ப்பம் அது.

அவன் முறுவல் புரிந்தவாறே வண்டியை விட்டுக் கீழே இறங்கினான். 'நமஸ்காரம்' என்றான்.

'என்னை உங்களுக்குத் தெரிகிறதா?' என்று கேட்டான் மாதவன்.

பிரமாதமான ஹாஸ்யத்தைக் கேள்வியுற்றவள்போல அவள் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு! அவன் மறக்கமுடியாத—நினைவிலே நீங்காத வலிமையுடன் நின்று

அவன் இதயத்தை சதா குத்திக் குடைந்துகொண்டிருந்த—அதே சிரிப்பு! இப்போதுகூட அவன் உள்ளத்திலே ஏதோ ஒரு நரம்பு எப்படியோ இசைகேடாக முறுக்கேறிக் கொண்டது போல் வேதனை பிறந்தது.

அவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவளை முதன் முதலில் பார்த்துப் பல வருஷங்கள் கழிந்திருந்தபோதிலும், அவள் முன் போலவே இளமையோடு, அழகோடு, குளுமையான சிங்காரத் தோற்றத்தோடுதான் காட்சி தந்தாள். 'இவள் நினைவுத் திறனும் பசுமையாகவா இருக்கும்?' என்று வியப்படைந்தான் அவன்.

அவளுடைய சிரிப்பு ஒருவாறு அடங்கியதும் அவள் சொன்னாள்: 'உங்களை இந்த நாட்டின் பச்சைக் குழந்தைகூட இனம் கண்டுகொள்ளுமே! அவ்வளவு புகழ் இருக்கிறது உங்களுக்கு. நீங்கள்தான் பெரிய ஸ்டார் ஆச்சுதே...'

அவன் மனப் பாரம் நழுவி விழுந்தது. அப்பாடா!—இவளுக்குப் பழைய நினைவு இல்லை. இருக்கமுடியாது. நடுத் தெருவில் திரிந்துகொண்டிருந்த எவனோ ஒருவனைப்பற்றி இவள் ஏன் எண்ணிக்கொண்டிருக்க வேண்டும்! அப்படி நான் நினைத்ததே பேதமையில்லையா?...அவன் மனம் சிரித்தது இப்படி.

'உங்கள் காருக்கு என்ன? பெட்ரோல் இல்லையா?' என்று கேட்டான் அவன்.

'பெட்ரோல் எல்லாம் இருக்குது. என்னவோ பிரேக் ஆயிட்டுது. யாராவது ஒரு ஆளை அனுப்பித்தான் சரிப் படுத்தச் சொல்லணும். அதுவரை கார் இங்கேயே கிடக்க வேண்டியதுதான்.'

'நீங்கள் ரொம்ப நேரமாக இப்படி நிற்கிறீர்களா?'

'முக்கால் மணிக்கும் அதிகமிருக்கும்!'

'அடடா!' என்றான் அவன்.

'ஏதாவது கார் வரும் என்று நானும் பாத்தபடி நிற்கிறேன். இதுவரை எதுவுமே தலைகாட்டலே, என்

அதிர்ஷ்டம் அப்படி இருக்கு!' என்று சொல்லி, லேசாகச் சிரித்தாள்.

'என் அதிர்ஷ்டம்தானோ என்னவோ!' என்று அவன் நினைத்தான், சொல்லவில்லை.

'நீங்கள் விரும்பினால், என் வண்டியில் வரலாம். எங்கு போகவேண்டுமோ, அங்கேயே கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்' என்று குழைவாகப் பேசினான் அவன்.

'வீட்டுக்குத்தான் போகணும். வழியில், மெக்கானிக் ஒருவனிடம் தெரிவித்துவிட்டுப் போகணும்—ஆள் அனுப்பிக் காரைக் கவனிக்கும்படி' என்று இழுத்தாள் அவள்.

'சரி. ஏறுங்கள்' என்றான் மாதவன்.

அவள் அவனது சாரட்டில் ஏறி உட்கார்ந்த பிறகு அவனும் அமர்ந்துகொண்டான். வண்டி கிளம்பியது.

மாதவனின் உள்ளம் உல்லாசச் சிறகுகள் பெற்று ஆனந்த வானிலே சஞ்சரித்தது. அவள் உள்ளம்கூட குதூகலிப்புடன் மிதந்துகொண்டிருந்தது. அவள் முகம், முந்திய கவலையைத் துறந்துவிட்டு, அளவிலா மகிழ்ச்சியால் நன்கு சோபித்தது.

'உங்களைப்பற்றி நான் அறிந்துகொள்ளலாமோ?' என்று வினவினான் அவன்.

'களுக்கு'ச் சிரிப்பு உதிர்த்தாள் அவள், 'என் பெயர் ஜெயந்தி' என்றாள். அவள் வீடு இருக்கும் இடம்பற்றி அறிவித்தாள். சொந்த விஷயமாக அவள் காரில் தனியாகக் கிளம்பி வந்தாள்; எதிர்பாராதவிதமாக காருக்குக் கோளாறு ஏற்பட்டுவிட்டது. மாதவன் வராதிருந்தால் அவள் இன்னும் எவ்வளவு நேரம் அங்கேயே வெயிலில் கருகிக்கொண்டு நிற்க வேண்டுமோ! அவள் இவ்விஷயங்களைச் சொல்லி முடிப்பதற்குள் எத்தனையோ தடவைகள் சிரித்துவிட்டாள்.

'சிரிக்காமல் இருக்கமுடியாதுபோலும் இவளால்!' என்று முனங்கியது அவன் மனம்.

ஜெவந்தி குறிப்பிட்ட விலாசத்தை அடைந்ததும் மாதவன், 'இதுதான் உங்கள் வீடா?' என்றான்.

அது தனித்து, ஒரு காம்பவுண்டினுள், கவர்ச்சிகரமாக அமைந்திருந்தது. சிறு கட்டிடம்தான். ஆயினும் எடுப்பாக விளங்கியது. நாலைந்து அரளிச் செடிகளும் நன்கு வளர்ந்து நின்றன.

'ஆமாம். வாங்கி இரண்டு வருஷம்தான் ஆகிறது. உள்ளே வந்து பாருங்களேன்' என்று கனிவுடன் அழைத்தாள் காரிகை.

'எதுக்கு! இங்கே இருந்து பார்த்தாலே...'

அவன் ஒப்புக்காக இழுத்த பேச்சைக்கூட முடிக்கவிடவில்லை அவள்.

'நல்லாயிருக்குது நீங்கள் பேசுவது! எனக்கு உதவி செய்த உங்களை நான் சும்மா அனுப்பிவிடலாமா?' என்று கூறிச் சிரித்தாள். அவள் கருவிழிகளின் நீளிமைகளும் 'வா வா' என்று அழைப்பதுபோல் அடித்துக்கொண்டன.

'இது என்ன பிரமாத உதவி!' என்று யாரும் சகஜமாகச் சொல்லக்கூடிய பதிலையே மாதவனும் சொன்னான்.

'உங்களைப் போன்ற ஸ்டாரின் உதவியைப் பெறுவது சாதாரண விஷயமா?...சரி, இறங்குங்கள்' என்று தூண்டுதல் அளித்தாள் ஒய்யாரி.

அவனும் இறங்கி அவள் பின்னாலேயே சென்றான். நடு அறையில் கிடந்த ஸோபாவில் உட்காரும்படி அவனை உபசரித்தாள் ஜெவந்தி. 'கொஞ்சம் இருங்கள், ஓவல் தயாரிக்கச் சொல்லிவிட்டு வருகிறேன்' என்று உள்ளே செல்ல முயன்றாள்.

'இப்ப அது எதுக்கு? வீட்டிலே போய் சாப்பிட வேண்டியதுதானே!'

ஜெவந்தி உற்சாகமாகப் பேசினாள்: 'நல்லதாப் போச்சு. நீங்கள் இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகலாம்...'

அவன் எவ்வளவோ மறுத்தும் அவள் கேட்கத் தயாராக இல்லை. வெளியே போய் சாரதியிடம் சாரட்டை ஓட்டிக் கொண்டு போகும்படியும், மாலை ஐந்து—ஐந்தரை மணிக்கு வரும்படியும் அவளே அறிவித்துவிட்டாள். வண்டி போன பிறகு, அவள் உள்ளே சென்று சமையல்காரிக்குச் சில உத்திர விட்டாள். ஓவலும் கொண்டு தந்தாள்.

'உங்கள் உபசரிப்பு ரொம்ப பலமாக இருக்குதே!' என்றான் அவன், சிறு சிரிப்புடன்.

அவள் சிரித்தாள். அவள் கண்கள் பேசத் தொடங்கின.

மாதவன் பார்வை சுவர்மீதெல்லாம் மேய்ந்தது. சில போட்டோக்கள் தொங்கின. அங்கு அவற்றில் சில முன்பு கார் ஓட்டிவந்த உல்லாசியை—மாதவனைப் பழித்த ஆசாமியை—நினைவுபடுத்தின.

'வீட்டை நன்றாகப் பாருங்கள்!' என்று அவள் அவனுக்கு ஒவ்வொரு அறையையும் காட்டினாள். அலங்காரப் பொருள் களும், ஆடம்பரச் சாமான்களும் தாராளமாகவே தென் பட்டன அறைதோறும்.

'மாடிக்குப் போகலாம், வாங்க' என அவள் அவனுக்கு வழிகாட்டினாள். மாடி அறைகளும் ஜோராகத்தான் இருந்தன. ஒரு இடத்தில் அவனுக்கு அறிமுகமாகியிருந்த நபரின் பெரிய படம் ஒன்று எடுப்பாக விளங்கியது.

'இவர்தான் உங்கள் கணவரா?' என்று விசாரித்தான் மாதவன்.

'அப்படியும் சொல்லலாம்' என்று புன்னகையோடு கூறினாள் ஜெவந்தி.

அவன் விழித்தான், அவள் சிரிப்பு அதிகமாயிற்று.

'எனக்குப் புரியவில்லை' என்றான் அவன்.

இவள் அவனுடைய காமினியாக இருக்கலாம் என முதன் முதலிலேயே தான் சந்தேகித்தது மாதவனுக்கு நினைவு வந்தது; அவ்விஷயத்தை அவன் அப்படியே விட்டுவிட்டான்.

அவள் ஒரு அறையைத் திறந்தாள். சிறிய அறைதான் அது. எனினும் மிக மனோகரமாக இருந்தது. 'கம்மென்று' ஒரு வாசனை அங்கு நிறைந்து நின்றது. பெரிய கட்டில் ஒன்று—நேர்த்தியான வேலைப்பாடுகள் உடையது—அந்த அறையின் பெரும்பகுதியை அடைத்துக் கிடந்தது. அதன் மீது வசீகரமான மெத்தையும் தலையணைகளும் கிடந்தன. கட்டிலுக்கு உயரே அழகிய பூந்திரைகள் மடக்கிச் சுருட்டிக் கட்டப்பட்டிருந்தன.

ஒரு பார்வையிலேயே அது என்ன அறை என்பது அவனுக்கு விளங்கிவிட்டது. எனினும், அவள் புன்சிரிப்போடு 'இதுதான் பெட்ரூம்' என்று சொல்லி வைத்தாள். அப்பொழுது அவள் பார்த்த பார்வை அவனை என்னென்னவோ பண்ணியது.

'நான் சாயங்காலம்தான் வருவேன் என்று சொல்லியிருந்ததால், சமையல் எதுவும் ஆகவில்லை. இப்ப சொல்லியிருக்கிறேன். சீக்கிரமே தயாராகிவிடும்' என்றாள் அவள்.

'மெதுவாகத்தான் ஆகட்டுமே! சாப்பாட்டுக்கு என்ன அவசரம்?' என்றான் மாதவன். அவன் கண்கள் அவள் விழிகளைத் தொட்டன.

அவள் அவன் நடித்த படங்களைப்பற்றி, தான் ரசித்த காட்சிகளைப்பற்றி எல்லாம் இனிமையாகப் பேசினாள். அவன் குதிரை சவாரி செய்து ஜம்மென்று உலா போகும் நேர்த்தி பற்றியும் உவகையோடு குறிப்பிட்டாள்.

பேச்சு சுவாரஸ்யத்தில் அவர்கள் எப்பொழுது எப்படி மனோகரமான சிருங்கார அறையின் ஒய்யாரக் கட்டில்மீது அமர்ந்தார்கள். இருவருக்குமிடையே இருந்த தூரம் எவ்வாறு தேய்ந்து குறுகி இல்லாது ஒழிந்தது என்பது எதுவும் அவர்களுக்கே தெரியாது. நெருக்கமும் உணர்வும் தங்கள் வேலையைத் தீவிரமாகச் செய்தன. அப்புறம் இருவரும் ஒன்றுவதற்கு அவர்கள் தனித்தனியே விசேஷ முயற்சிகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லைதான்.

இன்ப விருந்தும் இன்சுவை உணவும் பெற்று மகிழ்ந்து, தன் வீடு திரும்புவதற்குத் தயாராக இருந்த மாதவன் பெரிய நிலைக்கண்ணாடி முன் நின்று தன்னை பெருமையோடு பார்த்துக் கொண்டான். அவனுக்குப் பொங்கி வந்த ஆனந்தத்தால் முகம் சிரிப்பாக வெடித்தது, விரிந்தது.

அங்கே வந்து நின்ற ஜெவந்தியைப் பார்த்ததும் அவன் சிரிப்பு அடக்கமுடியாமல் சிதறியது. முன்னிலும் அதிகமான கவர்ச்சியோடு சிங்காரித்து வந்துநின்ற அவள் தனது அலங் காரத்தில் ஏதாவது குறை இருக்குமோ என்று தன்னையே பார்த்துக்கொண்டாள். பிறகு அவன் அருகில் வந்து இடித்த படி நின்று கண்ணாடியில் பார்த்தாள். 'இப்ப ஏன் இத்தனை சிரிப்பு?' என்றாள்.

'ஜெவந்தி, உனக்கு மறந்துவிட்டது என்றே தோன்று கிறது. முன்பு ஒருநாள் நீ என்னைக் கேவலமாகக் கருதினாய். தெருவில் நடந்துகொண்டிருந்த என்னை அலட்சியமாகப் பார்த்து, கேலியாகச் சிரித்து, அவமதித்தாய். இன்று... இன்று...'

சிரிப்பு அவனை பேசவிடாமல் தடுத்தது. அவன் எண்ணியபடி—எதிர்பார்த்தபடி—ஜெவந்தி நடந்து கொள்ள வில்லை. அவள் நாணித் தலைகுனியவில்லை. அவமானத்தால் முகம் சிவக்கவில்லை. அழுது, ஏசவுமில்லை.

அவள் முகம் வியப்பால் முழுதலர்ந்தது. அவள் கண் களில் தனிப் பிரகாசம் நிறைந்தது. இதழ்கள் மோகன மாய்ப் பிரிந்தன. முத்துப் பற்கள் கவர்ச்சி நிறைந்து காணப் பட்டன.

'இப்படியே இவளை முத்தமிட வேண்டும்' என்ற துடிப்பு ஏற்பட்டது அவனுக்கு.

'அப்படியா! எனக்கு ஞாபகமில்லை!' என்றாள் ஜெவந்தி. 'அதனாலென்ன! காலம் எப்படியோ ஆட்டி வைக்கிறது' என்றும் பேசினாள். 'நீங்கள் ராஜா மாதிரி ஆகி விட்டீர்கள்' என்று சொன்னவள் அவன் தோளில் தொத்தி, முகத்தில் இதழ் பதித்தாள்.

வெளியே வண்டி வந்து நின்ற ஓசை கடகடத்தது. அவன் அவளை விலக்கிவிட்டுப் புறப்பட்டான். 'நீங்கள் அடிக்கடி வரணும். இன்னொரு நாள் கண்டிப்பாய் வரணும்' என்று கூறி வழி அனுப்பினாள் அவள்.

வண்டியில் அமர்ந்து, தனித்திருந்து, நிகழ்ந்தது பற்றி எண்ணிப்பார்த்த மாதவனுக்கு, அது ஒரு வெற்றி என்றே படவில்லை. அவள் எதிரிபோல் நடந்து கொள்ளவில்லை! தன்னோடு ஒத்துழைக்கத் துடித்த துணைபோலவே திகழ்ந்தாள் என்ற உணர்வு அவனுக்கு இருந்தது. மேலும் அவள் தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள சாகசம் செய்து... சாமர்த்தியமாக அவனைச் சிக்க வைத்துவிட்டாள் என்ற உண்மையும் அவனுக்குப் புலப்பட்டது. அந்நோக்கிலே இது அவளுடைய வெற்றி என்றே தோன்றியது அவனுக்கு.

இப்படி எண்ணிக் குழம்பிய மாதவன் பெருமூச்செறிந்தான். முடிவில் அவனுடைய மனக்குறளி திருப்திகரமான, ஒரு விடை கண்டுபிடித்தது. வெற்றி என்று கொண்டால் இரண்டு பேருக்கும் வெற்றிதான்; தோல்வி என்றால், இருவருக்கும் தோல்விதான். வெற்றியும் தோல்வியும் கலந்த இனிய அனுபவம் இது என்று நினைத்தது அது.

பட்டங்கள்மீது இந்நாட்டினருக்கு இருப்பது போன்ற மோகம் வேறு எந்நாட்டினருக்கும் இராது என்றே தோன்றுகிறது.

சாதாரண ஜனங்கள் தங்களினின்றும் மாறுபட்டவர்களுக்குப் பட்டங்கள் வழங்குகிறார்கள். தம்மினும் உயர்ந்தவர்களைக் கௌரவிக்கப் பட்டங்கள் அளிக்கிறார்கள். உயர்ந்துவிட்டவர்கள் தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்ளவும், தங்களுக்கு வேண்டியவர்களை உயர்வுபடுத்தவும் பட்டங்கள் கொடுக்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே பெருமை தேடிக்கொள்ளப் பாடுபடுகிறவர்கள் தங்கள் புகழ் பாடிகள் சிலரைக்கொண்டு பட்டம் சூட்டும் விழாவுக்கு ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். இத்தகைய யுகதர்மங்கள் எவ்வளவோ!

அநேகமாக அவற்றில் அனைத்தையும் ஈடுபடுத்தி வெற்றி கரமாக முன்னுக்கு வந்தவர் 'சிந்தனைச் சூரியன்' பரப் பிரம்மம் பி. ஏ. 'கலாசாரக் கழகம்' என்ற அமைப்பின் தனிப் பெரும் தலைவர் அவர். கட்சிகள் மலிந்த இந்த நாட்டில் தானும் ஒரு கட்சி அமைத்து, தான் வாழ்வதோடு தன்னை நம்பிவரும் சிலரையும் வாழவைக்க ஆசைப்பட்டார் அவர். தனது கட்சியையும் 'கட்சி' என்று சொன்னால், 'பத்தோடு பதினொண்ணு; அத்தோடு இதுவுமொண்ணு, என்று மற்றவர் கள் ஒதுக்கிவிடுவார்கள் என்ற அச்சம் அவருக்கு எழுந்தது. ஆகவே அவர் 'நமது கலாசாரக் கழகம் ஒரு கட்சி அல்ல: ஒற்றைத் தனி அமைப்பு' என்று சந்தர்ப்பங்களிலும் அசந்தர்ப்பங்களிலும் நாப்பறை அறைந்து வந்தார். 'அமைப்பு' என்றால் என்ன என்று கேட்டால் 'ஸ்தாபனம்' என்றும், 'ஸ்தாபனம்' பற்றி விளக்கம் கோருகிறவர்களிடம் 'அமைப்பு' என்று எடுத்துச் சொல்லியும் மிரட்டி வந்தார் அவர்.

வாய்வீச்சு வல்லவர்களும், சொல் புரட்டர்களும் மற்ற வர்களின் அறியாமையை மூலதனமாக்கி, கட்சியை வியாபார அமைப்பாக மாற்றி, தங்கள் சொந்த வாழ்க்கையை வெற்றிகரமானதாக வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை நீடிக்கிற இந்த நாட்டிலே, பரப்பிரம்மம் பி. ஏ. ஒரு சில வருஷங்களில் உயர முடிந்தது ஆச்சர்யமில்லைதான்.

ஆரம்பத்தில் 'வாரத்தாள்' ஒன்றிலே உதவி ஆசிரிய ராகப் பணிபுரிந்தார் அவர். தமிழ் நாட்டில் பத்திரிகையின் உதவி ஆசிரியருக்கும் ஒரு 'புரூப் ரீடரு'ருக்கும் வித்தியாசம் எதுவும் கிடையாது என்பதையும் 'உ. ஆ.' வேறு பல அலுவல்களையும் கவனித்தாக வேண்டிய அந்தஸ்து பெற்றவர் என்பதையும் அவர் அனுபவபூர்வமாகக் கற்றுக்கொண்டார். இரண்டரை வருடகால அனுபவ ஞானம் அவருக்கு இன்னும் எவ்வளவோ உண்மைகளைக் கற்றுக் கொடுத்தது.

எழுதிப் பிழைக்கத் துணிகிறவனைவிட பேசிப் பிழைக்க முன்வருகிறவன் வெற்றிகரமாக வாழமுடியும், சுலபப் பெயர் பெறமுடியும், எளிதில் பணம் பண்ணவும் கூடும் என அறிந்

தார் அவர். பலரைப் புகழ்ந்தும். சிலரை 'காக்கா' பிடித்தும், உரிய முறைப்படி 'கம்பி இழுத்தும்' (வயர்—புல்லிங்), பெருந்தலைகளின் 'முதுகைச் சொறி'ந்தும், தேவைப்பட்ட சமயத்தில் பலன் தரக்கூடிய இடங்களில் சாமர்த்தியமாகக் 'காது குத்தி'யும், தனக்கெனத் தனி இடம் பிடித்தார். அதை அஸ்திவாரமாக்கி மேலும் மேலும் முன்னேறுவதற்கு ஏற்ற வழி தனிக்கட்சி அமைப்பதுதான் என்று உணர்ந்தார் அவர். உடனடியாக அமைத்தும் தீர்த்தார்.

மக்களின் நற்பண்புகளைப் போற்றி வளர்ப்பது சிரமம்; நல்லவர்களாக வாழவைக்க வழிகாட்டுவதன்மூலம் ஏகப் பட்டவர்களை ஒன்று கூட்ட முடியாது; நல்லுபதேசங்கள் மிகக் குறைந்த சீடர்களையே சேர்த்துத் தரும்; ஆனால், மக்களின் வெறுப்பை வளர்ப்பதன் மூலம்—வெறியைத் தூண்டுவதனால்- மிகப்பலரை ஒன்று திரட்டலாம். இதைப் புரிந்து கொண்டார் பரப்பிரம்மம் பி. ஏ. எனவே, அவர் எல்லாவற்றையும் காரசாரமாகத் தாக்கினார். எல்லோரையும் குறை கூறினார். குறுகிய காலத்திற்குள் 'சிந்தனைச் சூரியன்' என்ற பட்டமும் பெற்று விட்டார்.

'நமது அமைப்பு பலம் பெறவேண்டும். அதற்கு வெள்ளி காங்கிரீட் தேவை. அன்பர்களே, அள்ளித் தாருங்கள்!' என்று முழக்கம் செய்தார் 'வழிகாட்ட வந்தவர்.' அவர் பேச்சால் வசீகரிக்கப்பட்டவர்கள் ரூபாய் ரூபாயாக அனுப்பி வைத்தார்கள்.

நிதி வசூலிப்பது லாபகரமான தொழில் என அறிந்த 'தலைவர்' அவ்வப்போது எதன் பெயரையாவது சொல்லி நிதி கேட்டு, நாட்டை நோக்கி இரு கைகள் நீட்டும் வழக்கத்தை மேற்கொண்டார். வெற்றியும் கண்டார்.

ஆசை மனிதனைச் சும்மா விட்டுவிடுமா? 'பேங்க் பேலன்ஸ்' பெருகவில்லையே இன்னும் என ஏங்கினார் சிந்தனைச் சூரியன். அவர் சிந்தனையில் அற்புத மின்வெட்டு பளிச்சிட்டது. தனது நாற்பத்து நாலாவது பிறந்தநாளை அமோகமாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அதற்கென ஒரு கமிட்டி பிறந்தது.

'சூரியனி'ன் ஒளிபெற்று வாழும் 'சந்திரன்'கள் பலரும் அதில் முக்கியஸ்தர்கள். அவர்கள் நிதி வசூலில் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு வழி காட்டி, அன்றாட ஆலோசனை சொல்லும் பொறுப்பை பரப் பிரம்மமே திறம்பட நிர்வகித்தார்.

'தமிழனின் சராசரி வயது இருபத்தெட்டுதான். மிஞ்சிப்போனால் முப்பத்திரெண்டு. நமது சிந்தனைச் சூரியன் நாற்பத்து நான்கு வருடங்கள் வாழ்ந்திருப்பது நமது பாக்கியமேயாகும்!' நாற்பத்து நாலு—இரட்டை நாலு! ஆகா என்றெல்லாம் புதிய தத்துவங்களும் வியாக்கியானங்களும் ஒலிபரப்பப்பட்டன. இந்த பிஸினஸில் அவருக்கு பல ஆயிரங்கள் அகப்பட்டன.

நாடு வளர்ந்ததோ இல்லையோ—நாட்டினரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததோ என்னவோ, 'சிந்தனைச் சூரியன்' பரப்பிரம்மம் பி.ஏ.யின் தொந்தி வளர்ந்தது உண்மை. மேனி மினுமினுப்பு அதிகரித்தது. பொருளாதார நிலைமை உயர்ந்தது.

இடைக் காலத்தில் 'கலாசாரக் கழகம்' கொஞ்சம் 'டிம் அடித்துப் போச்சு' என்று பரப்பிரம்மம் எண்ணினார். அதை மீண்டும் பிரகாசம் உடையதாக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அப்பொழுது மாதவன் என்கிற நட்சத்திரத்தின் ஒளி அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவனை பயன்படுத்த வேணும் என ஆசைப்பட்டார். திட்டம் தீட்டினார். செயலிலும் இறங்கினார். அதன் விளைவுதான் 'பட்டம் அளிப்பு விழா.'

மாதவனுக்கு 'நடிக சாம்ராட்' என்ற பட்டம் அளிக்க முன்வந்தது 'கலாசாரக் கழகம்.' தடபுடலாக விளம்பரங்கள் செய்து, ஊர்வலம் நடத்தி, மாதவன் மேடைக்கு அழைத்து வரப்பட்டான். குமாரி சம்பாவும் உடன் வந்தாள். ஏகப் பட்ட கூட்டம்.

பரப்பிரம்மம் பி. ஏ. கலாசாரக் கழகத்தின் நோக்கங்கள் பற்றி விரிவாகப் பேசினார். மாதவனின் ஆற்றல்பற்றி

அற்புதமாக அளந்தார். சம்பா அம்மையாரின் அழகையும் திறமையையும் பற்றி ஒரு வசனகாவியமே இயற்றி விட்டார்!

இன்னும் பலரும் பேசினார்கள். முடிவில் மாதவன் 'நடிக சாம்ராட்' ஆனான். குமாரி சம்பாவுக்கு 'கலை உலக கோஹினூர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

'நம்ம புகழ் மேலும் ஒருபடி உயர்ந்துவிட்டது. பேஷோ பேஷ்!' என்ற மகிழ்ச்சி மாதவனுக்கு.

'அருமையான பப்ளிஸிட்டி. வருங்காலத்திலே நல்ல லாபம் கிடைக்கும்' என்ற திருப்தி பரப்பிரம்மத்துக்கு.

குமாரி சம்பா மாதவனிடம் மேலும் அதிகமான பற்றுதல் கொண்டாள். 'இந்தப் பெருமை எல்லாம் இவரால் தானே நமக்கு வந்தது!' என்று உளம்பூரித்த அந்தக் கொடி அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. சிறப்புடன் திகழ்ந்தது.

மாதவனுக்குத் தினந்தோறும் நிறையவே தபால் வரும். அவனுக்கு வருகிற கடிதங்கள் மூலம், நாட்டிலே பைத்தியங்களும், அசடுகளும், முட்டாள்களும், சினிமாவில் நடிக்கத் தவிக்கிற நபர்களும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது ஓரளவு விளங்கும். அக்கடிதங்களைப் படிப்பது அவனுக்கு ரசமான பொழுதுபோக்காக அமையும்.

அன்றும் அவன் அவ்வாறே கடிதங்களைப் படித்து ரசிக்கத் தொடங்கினான். ஆனால் அவன் எதிர்பாராத கடிதம் ஒன்று அகப்பட்டு, அவனது உணர்ச்சிகளை உலுக்கிவிட்டது.

காந்திமதி எழுதிய கடிதம் அது. அதைப் படிக்கும் போதே அவன் கைகள் நடுங்கின. அவன் உள்ளம் கனமேற்றது. தேதி இடப்படாத அக்கடிதம் உணர்ச்சிக் கொந்தளிப்போடு எழுதப்பட்டிருந்தது. அங்கங்கே எழுத்துக்கள் அழிந்திருந்தன. அவை கண்ணீரால் கலைந்திருக்க வேண்டும் என்றே அவனுக்குப் பட்டது.

'அத்தான், நீங்கள் ஏன் அன்று என்னை இங்கே விட்டு விட்டுப் போனீர்கள்? என்னையும் உங்களோடு கூட்டிப்

போயிருக்கக்கூடாதா? நீங்கள் உயர்வு அடையாமல் கஷ்டப்பட்டுக் கேவலநிலை அடைந்திருந்தால் கூட, நானும் உங்களோடு வாழ்ந்து, உங்களோடு மகிழ்வுடன் சாக முன் வந்திருப்பேன். மணமான நான் இப்படி எழுதக் கூடாது தான். ஆனால் என் வாழ்க்கையிலே நான் என்ன சுகத்தைக் கண்டுவிட்டேன்? சொத்து இருக்கிறது, வீடு வாசல், பால் மாடுகள் எதற்கும் குறைவில்லை. குழந்தைகளும் இருக்கின்றன. வாஸ்தவம். இருந்தாலும் என் கணவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை. அதனால் அவர் குடும்பத்தையும் நாசமாக்கிவிட்டார். அவருள் சந்தேக விஷப்பூச்சி அரித்துக் கொண்டே இருக்கிறது. அதனால் அவர் என்னைக் கொல்லாமல் கொன்று சித்திரவதை செய்து வருகிறார். ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? ஆரம்பத்தில் சில மாதங்கள் புது மோகம். வாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. பிறகு யாரோ என்னையும் எனது அத்தை மகனையும் பற்றி அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். பிறகு அந்த அத்தை பிள்ளை சினிமாவில் நடித்துப் புகழ்பெற ஆரம்பிக்கவும், எங்கள் வீட்டில் சனி புகுந்துவிட்டது. என் கணவரைப் போன்ற சந்தேகப் பிராணி வேறு யாராவது இருப்பார்களோ என்னவோ தெரியாது. இயல்பாகவே சந்தேகம் கொண்டு என்னைத் துன்பப்படுத்தி வந்தவருக்கு ஒரு பிடி கிடைத்துவிட்டது.

'பட்டணத்துத் தெருவில் நீங்கள் மாமாவுடன் சண்டை பிடித்தீர்களே, அன்று நானும் என் கணவரும் உங்கள் முன்னால் வராமல் இருந்திருக்கக்கூடாதா என நான் பிறகு பல தடவைகள் எண்ணியது உண்டு. அவரும் நானும் ஒரு கடையில் நின்றோம். கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்த போது அப்பாவைக் காணோம். அங்குமிங்கும் நான் தேடினேன். கும்பலும் கூச்சலும் எங்களைக் கவர்ந்தன. அருகே வந்து பார்த்தால், அந்த நாடகம்! அதன் முடிவில் நீங்கள் என்னைப் பார்த்துச் சொன்னீர்களே ஒரு பேச்சு அது உங்களுக்கு'எங்கே ஞாபகம் இருக்கப் போகிறது! இல்லை, அது விபரீதமான விளைவுகளை உண்டாக்கும் என்று நீங்கள்

கனவிலாவது எண்ண முடியுமா? ஆனல், அத்தான், சந்தேகம் பிடித்த என் கணவர் மனசில் அது பிசாசு ரூபம் பெற்றுவிட்டது. ஒரு பௌர்ணமியன்று நான் சொன்னதை மறந்துவிடம்மா என்று நீங்கள் கூறினீர்களே, அதற்கு அவர் என்னென்னவோ அர்த்தங்கள் கற்பித்துக்கொண்டார். ஊர் வந்து சேர்ந்ததும், அவர் செய்த குறுக்கு விசாரணைகளும் கொடுத்த தண்டனைகளும், ஏசிய ஏச்சுக்களும், பேசிய பேச்சுக்களும்—அம்மம்மா நினைக்க நினைக்கப் பயமாக இருக்கிறது. உள்ளமும் உடலும் கூசுகின்றன.

'அதன் பிறகு என் வாழ்க்கை ஒரே நரகம் தான். உங்களைப் பற்றி யாராவது அவதூறு பேசினல் அவருக்குச் சந்தோஷம் பிறக்கும். ஓடி வந்து அதை என்னிடம் அப்படியே ஒப்பிப்பார். சாக்கடைத் தாள்கள் உங்கள்மீது அசிங்கத்தை வாரி எறிகிறபோதெல்லாம், அவர் ஆர்வமாக அவற்றைக் கொண்டு வந்து என்னிடம் கொடுப்பார். அத்தான், அத்தான்னு நினைச்சுக்கிட்டு இருக்கியே! பாரு உங்க அத்தான் லெச்சணத்தை என்று பழிப்பார். அவர் செயல்களைக் கவனிக்கையில், அவருக்கு என்மீது சந்தேகம் மட்டுமல்ல, உங்கள்மீது பொறாமையும் ஏற்பட்டிருக்கும் என்று எனக்குப் படுகிறது.

'வர வர என் நிலைமை மகா மோசமாகிவிட்டது. எனக்கு ஏன் இன்னும் சாவு வரவில்லை என்று நான் மனசாற அழுது புலம்பாத நாள் கிடையாது. என் குழந்தைகளை நினைக்கும்போதுதான் என் மனத் துயரம் அதிகமாகிறது...

'அத்தான், உங்கப்பற்றி யார் யாரோ எவ்வளவோ சொல்கிருர்கள். நீங்கள் ஏன் இப்படி மாறினீர்கள்?'

காந்திமதி இன்னும் எழுத நினைத்திருந்தாளோ அல்லது எழுத்து வேலைக்குத் தடை ஏற்பட்டுவிட்டதோ—புரியவில்லை. கடிதம் அப்படியே முடிந்துபோயிற்று. பிறகு அவசரம் அவசரமாக 'காந்திமதி' என்று கிறுக்கி, கவரில் அடைத்துத் தபாலில் சேர்த்திருப்பாள் என்று அவனுக்குத் தோன்றியது.

மாதவன் பெருமூச்செறிந்தான். இதர கடிதங்களைப் படித்துப் பார்க்க மனம் எழவில்லை அவனுக்கு. நாற்காலியில் அசைவற்றுச் சாய்ந்திருந்தான் அவன். சிறிது நேரத்துக்குப் பிறகு கை அன்றைய தினசரியை எடுத்தது. அவன் கண்கள் மேலோட்டமாகப் பத்திரிகையில் அங்கு மிங்கும் பாய்ந்தன. அந்தத் தத்துக்கிளிப் பார்வையில்கூட ஒரு செய்தி அவனைத் தாக்கி விட்டது.

தனது ஊர் செய்தியாக இருக்கவே அவன் அதை வாசித்தான். அது இடி என அதிர்ச்சி தந்தது அவனுக்கு.

—சங்கரலிங்கம் பிள்ளையின் மகளும், அம்பலவாணன் என்பவரின் மனைவியுமான காந்திமதி அடுப்பு பற்றவைக்கும் பொழுது அஜாக்கிரதையால் சேலையில் தீப்பிடித்துக்கொண்டது. அதன் காரணமாக அவள் உடலெல்லாம் புண்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டாள். அங்கேயே மரணம் அடைந்தாள். அஜாக்கிரதையால் ஏற்பட்ட விபத்தின் விளைவாக மரணம் சம்பவித்தது என்று பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறினர்.

மாதவன் அதை மறுமுறையும் வாசித்தான். 'விபத்தின் விளைவா? இல்லை. இல்லவே இல்லை. அது தற்கொலைதான்' என்று அவன் உள்ளம் அலறியது. 'காந்தி, கடைசியில் உன் கதி இப்படியா ஆகவேண்டும்?' என்று புலம்பியது.

'நான்தான் அவள் சாவுக்குக் காரணமோ?' என்று எண்ணுமலிருக்க முடியவில்லை அவனல்.

—முதல் தடவை நான் அவளை விட்டுப் பிரியும்போது, அவளுக்கு நல்லதுதான் எண்ணினேன். அப்பொழுது அவள் அழுது, மனவேதனை அனுபவித்தாள்... பிறரு தற்செயலாக சந்திக்க நேர்ந்தபோது என்னை மறந்துவிடும்படி சொன்னேன். அதுவும் அவள் நன்மையைக் கருதிச் சொன்னதுதான். ஆனல் அதன் விளைவு பயங்கரமாகிவிட்டதே...

மாதவன் பித்துப் பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்தின் துயரச்சுமை கனத்தது. இதயமே வெடித்துவிடும்போல் உறுத்தியது. கண்களில் நீர் பொங்கி

யது. மனசைக் கல்லாக்கிக் கொண்ட மாதவன் இறந்தகால நினைவை எண்ணிக் கண்ணீர் பெருக்கினான். சிறு பிள்ளை போல விம்மி விம்மி அழுதான்.

அதற்காக அவன் வெட்கப்படவில்லை. அப்பொழுதும் நாணுறவில்லை. பின்னரும் வெட்கம் அடையவில்லை.

—உலகத்தை வெற்றிகொள்ளும் ஆசையால் முன்னே சென்றுகொண்டிருந்த நெப்போலியன் ரஷ்யாவின் விரிந்த பரப்பிலே அடிவைத்தபோது, சோர்ந்து தளர்ந்து திரும்ப நேர்ந்தபோது, பனியிலும் சூறையிலும் அடிபட்டு அவன் குதிரை செத்து விழுந்தது. அதைக் கண்டதும் துயரக் கண்ணீர் வடித்தான் அவன்.

—மாவீரன் அலெக்ஸாந்தர் தன் திட்டத்தின்படி மேலும் படையெடுத்து இந்தியாவில் முன்னேற வேண்டும் என்று ஆசைப்பட்டபோது அவனது வீரர்கள் மறுத்தனர். வந்த வழியே திரும்பத் துடித்தனர். சிதைவுறும் தன் கனவை எண்ணி வேதனைக் கண்ணீர் உகுத்தான் அவன்.

எவ்வளவு பெரிய லட்சியவாதியாக இருப்பினும், எத்தகைய செயல் திறம் பெற்றவனாயினும் மனம்குமைந்து கண்ணீர் சிந்தவேண்டிய கட்டம் ஒன்று ஒவ்வொருவர் வாழ்விலும் வந்தே தீரும்.

இதை நன்கு உணர்ந்திருந்த மாதவன் தான் அழுததற்காக வெட்கம் கொள்ளவில்லை. தனது நல்ல பண்புகளுக்கு ஓர் நினைவுச் சின்னமாக உருவகப்படுத்தியிருந்த காந்திமதி—தன்னுடைய கடைசி நற்காரியத்தின் அடையாளமாக வாழ வேண்டியவள் என அவனால் போற்றப்பட்ட பெண்—இப்படிச் சீர்கெட்டுச் சிதைவுற்றதை எண்ணவும் அவன் அழத்தான் வேண்டியிருந்தது. மனப் புழுக்கம் அகலும் வரை தனிமையில் அழுது தீர்த்தான்.

"ஸார், என்னைத் தெரிகிறதா?"

'சம்பா ஆர்ட் புரடக்ஷன்ஸ்' ஆபீஸ் அறையில், இந்தக் கேள்வியுடன் தன் முன்னால் வந்து நின்ற யுவதியை மேலும்

கீழும் நோக்கினன் மாதவன். உதடுகளை மடித்துக்கொண்டு தலையை ஆட்டினன் 'இல்லை' என்ற தன்மையில்.

'முன்பு மந்திரம் தெரியும் மாயம் தெரியும் என்று டூப் அடித்தீர்களே! என் பெயரை யூகித்துச் சரியாகச் சொன்ன உங்களுக்கு இப்ப ஒரு வழியும் புலப்படவில்லையோ?' என்று கேட்டுவிட்டு, அவள், 'இ...ஹி...ஹி' என்று இளித்தாள்.

அப்பொழுது பளிச்சிட்ட அழகான அரிசிப் பல் வரிசையும் மென்மையான இனிய உதடுகளும்—அவற்றை அவன் எங்கே பார்த்திருக்கிறுன்? எங்கே பார்த்தான்? கையால் தன் தலை மயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டான்.

'நீ...நீ...வந்து..'

அவன் படும் வேதனையைக் கண்டு அவள் கும்மாளியிட்டுச் சிரித்தாள். பின் 'பேபி!' என்று அறிவித்தாள்.

'பேபி? பாலச்சந்திரன் அக்காளா?' தாங்க முடியாத ஆச்சரியம் ஏற்பட்டது அவனுக்கு.

அவன் முகபாவத்தைக் கண்டு குதூகலம் எய்தினுள் அவள்.

காலைப் பொன்வெயிலில் மினுமினுக்கும் புது மலர்போல் குளுமையும் வனப்பும் பெற்றுத் திகழ்ந்த பேபியை வியப்புடன், ஒரே பார்வையாகப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். அவனுல் நம்பவே முடியவில்லை.

'பேபியா! அட, என்னமா வளர்ந்துட்டே!'

'எத்தனையோ வருஷங்கள் ஆச்சுதே. இன்னுமா நான் சின்னப் பெண்ணுக இருப்பேன்!' என்று கூறிச் சிரித்தாள் பேபி.

'இப்ப தலைமுடியைக்கூட வளரவிட்ருக்கிறே. இரட்டைச் சடை...பேஷ் பேஷ்!'

அவன் புகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ச்சிதான் அடைந்தாள் அவள்.

'பாலச்சந்திரன் என்ன செய்கிறான்? எப்படி இருக்கிறான்?'

'அவன் சாந்திநிகேதனுக்குப் போயிருக்கிறான். படிப்பதற்காக.'

'ஏனாம்? இங்கே உள்ள படிப்பெல்லாம் பிடிக்கலியாமா அவனுக்கு!' என்று கிண்டலாகக் கேட்டான் மாதவன்.

'அப்பாதான் அவன் அங்கே போய்ப் படிக்கட்டுமேன்னு அனுப்பி வைத்தார்.'

'அது சரி. பணம் இருக்குதே. அவன் அமெரிக்காவுக்கே போய் படிக்கலாம். உம், உனக்கு எப்ப கல்யாணம்? அல்லது இதற்குள்ளாகவே ஆயிட்டுதோ?'

'போங்கோ ஸார்!' வெட்க மிகுதியால் முகம் கவிழ்ந்தாள் அவள். அம் முகத்தில் பரவிய ஆனந்தமும் நாணமும், அது குவிந்த விதமும் ரசிக்க வேண்டியனவாக அமைந்தன.

அவள் திடுமெனத் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள். 'சினிமாவிலே நடிக்கணும்னு எனக்கு ரொம்ப நாளாக ஆசை. எனக்கு ஒரு சான்ஸ் கொடுங்களேன்' என்றாள்.

'என்னது!' மீண்டும் ஆச்சர்யம் அவனுக்கு.

'சினிமாவில் நடிக்க...'

'உம்ம்...' என்று தலையைச் சொறிந்தான் மாதவன். 'நான் இங்கே இருக்கிறேன்னு உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டு வைத்தான்.

'என்ன அசட்டுக் கேள்வி இது?' என்பதுபோல் பேசி சிரித்தாள். 'இதுகூடவா தெரியாது? உங்களைப் பற்றிய விவரமெல்லாம் எனக்கு ரொம்ப நாளாகவே தெரியும். நீங்கள் நடித்த படங்களை எல்லாம் தேடிப் பிடித்து, ஆல்பத்தில் ஒட்டி வச்சிருக்கிறேன். அதுதான் எனக்கு ஹாபி' என்று உற்சாகமாகக் கூறினாள்.

'பரவால்லியே! எனக்கும் அழகான ''பக்தை'' ஒருத்தி இருக்கிறான்னு சொல்லு. பேஷ்! அப்புறம்?'

அவள் மகிழ்வும் நன்றியும் பெருக அவனைப் பார்த்தாள். சிரித்தாள். 'எனக்கு நடிக்கத் தெரியாதுன்னு நினைக்காதீங்க, ஸார். நான் எத்தனையோ வேஷங்களில் நடித்திருக்கிறேனே.'

'அதெல்லாம் சரி பேபி. ஆனால் வந்து...'

'வந்து—போயி என்கிறதெல்லாம் என்கிட்டே வேண்டாம், ஸார். உங்க படத்திலே ஒரு சிறு பாகமாக இருந்தாலும் போதும்...'

'நான் சொல்றதைக் கேளு முதல்லே, உங்க அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சதும் அவங்க கோபிப்பாங்க. சண்டை பிடிப்பாங்க. சின்னப் பெண்ணை இவன்...'

பேபி அவசரமாகக் குறுக்கிட்டாள். 'நான் ஒண்ணும் சின்னப் பெண் இல்லே. எனக்குப் பதினெட்டு வயசுக்கு மேலே ஆயிட்டுது. என் இஷ்டம்போல் நடந்துகொள்ள எனக்கு உரிமை உண்டு.'

'இருக்கட்டும், அதற்காக, உன் போன்ற நல்ல பெண் வீணாக நாசமாக வேண்டுமா? பேபி, நான் சொல்வதைக் கேள். சினிமா உலகம் உனக்குச் சரிப்படாது. நீயோ அருமையான ரோஜாப்பூ மாதிரி இருக்கிறே. இங்கே உள்ள காற்று பட்டாலே வாடி வதங்கிவிடுவே! கசங்கி உருக்குலைந்து போவாய்...'

அவன் பேச்சை, கசப்பு மருந்தைக் குடிக்கும் குழந்தை மாதிரி முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு கேட்டு நின்றாள் பேபி. அவளுக்கு அந்த உபதேசம் பிடிக்கவில்லை என்பதை அவள் முகமே விளம்பரப்படுத்தியது. அவள் அவன் அருகில் வந்து நின்றாள்.

'நான் உங்களைப்பற்றி நினைத்தது தவறுதான் போலிருக்கு!' என்றாள், பெருமூச்செறிந்தபடி தரையைப் பார்த்துப் பொழுது போக்கினாள் பேபி.

அவள் போக்கு அவனுக்கு வேடிக்கையாகப்பட்டது. 'நீ என்ன நினைத்தே பேபி?' என்று கேட்டான் அவன்.

'உங்களுக்கு என்மீது பிரியம் இருக்கும். நான் கேட்பதை நீங்கள் மறுக்காமல் செய்வீர்கள் என்று நினைத்தேன்.'

'உன்மீது பிரியம் இருப்பதனால்தான் உனக்கு நல்லது எண்ணிச் சொல்கிறேன். நீ வீட்டுக்குப் போய், உனக்குப் பிடித்தமான ஒரு வாலிபனைப் பார்த்து, கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ முயற்சி செய். அதுதான் நல்லது பேபி!' என்று வழி வகுத்துக் கொடுத்தான் மாதவன்.

'மூஞ்சி... மூஞ்சி!' என்று அழுத்தமாக, வெறுப்போடு உச்சரித்தாள் பேபி. முகத்தைச் சுளித்துப் பழிப்புக் காட்டினாள்.

அவன் ரசித்துச் சிரித்தான்.

'நீங்க ஏன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?' என்று ஒரு கேள்வியை வீசினாள் பேபி.

'எனக்குத்தான் தோழியாய், துணைவியாய், எல்லாமாய் சம்பா இருக்கிறாளே...' என்று ஆரம்பித்தான்.

'சம்பாவும் கும்பாவும்! அது என்ன பேரோ எழவோ!' —என்று கரித்துக் கொட்டினாள் அவள்.

'உனக்குப் பொறாமை போலிருக்கு! இது சம்பா காதிலே விழுந்தால் உன்னைத் துரத்தி அடிப்பாள்...'

'அடிப்பா... அடிப்பா... அடிக்கமாட்டா பின்னே?... ஸார், நான் சொல்றதைக் கேளுங்க; நான் உங்க கூடவே இருந்து விடுகிறேன். உங்க கூடவே நடிக்கிறேன். அப்போ, நான் நாசமாக முடியாதல்லவா?'

அவள் குரல் கெஞ்சியது. அவள் விழிகள் கெஞ்சின. மௌனமாக இருந்த அவனைத் தொட்டுக் குலுக்கின அவள் கைகள்.

மாதவன் அவளைக் கூர்ந்து கவனித்தபடி இருந்தான். அவன் என்ன சொல்லியிருப்பானோ, என்ன செய்திருப்பானோ —அவனுக்கே தெரியாது. திடீரென்று கொடிய புயல் காற்று போல் சீறிக்கொண்டு பிரவேசித்தாள் சம்பா.

'ஏய், யார் நீ? இங்கே வந்து பெரிய வேலைகள் எல்லாம் பண்ண ஆரம்பிச்சிட்டியே; போ வெளியே!' என்று கத்தினாள்.

பேபி மாதவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவன் ஒன்றும் பேசவில்லை.

'இவ யாரு?' என்று படபடத்தாள் சம்பா.

'சாரோடே பழைய மாணவி...'

'மாணவியுமாச்சு வெங்காயமுமாச்சு! இங்கேயிருந்து வெளியே போ...' என்று கூச்சலிட்டாள் சம்பா. 'நீ சொன்னதெல்லாம் என் காதிலும் விழுந்தது. நான் பக்கத்து அறையிலேதான் இருந்தேன்.' அவள் பேபியை அடித்து விடுவாள் போலிருந்தது.

பேபி பொங்கி வந்த கண்ணீரை அடக்க முடியாதவளாய், விசித்துக்கொண்டே வெளியேறினாள்.

மாதவன் சிரித்தான். 'நல்ல வேளை, நீ வந்து காப்பாற்றினாய்!' என்றான்.

'யாரை? அவளையா, உங்களையா?' என்று கேட்டுவிட்டு, அர்த்தம் நிறைந்த பார்வையால் அவனைக் குத்தினாள் சம்பா.

'இரண்டு பேரையும் என்றுதான் வைத்துக்கொள்ளேன்!' என்று கூறி நகைத்தான் அவன்.

சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள் சம்பா மாதவனிடம் கேட்டாள்: 'பேபி என்றொரு பெண் இங்கே வந்ததே, அது என்ன ஆச்சு தெரியுமா?' என்று.

'தெரியாதே!' எனக் கைவிரித்தான் அவன்.

'சினிமாக் கிறுக்குப் பிடித்த அந்தப் பெண்ணை டான்ஸ் மாஸ்டர் ஒருவன் ஏமாற்றிவிட்டான் என்று தெரியுது. அவன் கூடவே அலையுது...'

'இந்த உலகத்திலே இதெல்லாம் சகஜம் சம்பா! ஆவாரை யாரே அழிப்பார்; அன்றி சாவாரை யாரே தவிர்ப்பார்...' என்று இழுத்தான் அவன்.

'ஐயோ என் ஞானியே!' என்று குழைந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முகத்தோடு முகம் சேர்த்தாள் சம்பா.

'கலாசாரக் கழக'த் தலைவர் பரப்பிரம்மம் பி.ஏ. ஏற்பாடு செய்த விழாக்கள், மகாநாடுகளில் எல்லாம் மாதவன் காட்சி தந்தான். சில இடங்களில் பேசவேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

இதனால் மாதவனுக்குப் பக்தர்கள் கூட்டம் பெருகியது. பரப்பிரம்மம் கட்சியின் செல்வாக்கும் வளர்ந்தது.

'நாட்டிலே தேர்தல் ஜுரம் பரவத் தொடங்கியது. பல கட்சிகளுக்கிடையிலும் போட்டி. அரசியல் வாதிகளுக்கிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருந்தது. தேர்தலில் பங்கு பற்றுவதா வேண்டாமா என்று முடிவுசெய்ய இயலாமல் தவித்துக்கொண்டிருந்தார் பரப்பிரம்மம்.

நாடே தங்களின் ஏகபோக உரிமை என்பதுபோல் வாழ்ந்து கொழுத்துக்கொண்டிருந்த 'வெகுஜனக் கட்சி' வரவர மதிப்பிழந்து, மக்களின் நம்பிக்கையையும் இழந்து வந்தது. வரும் தேர்தலில் அந்தக் கட்சிக்கு வெற்றி கிட்டுவது சந்தேகம் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. அதன் தலைவர் செல்வரங்கம், இழந்த செல்வாக்கையும் ஆதரவையும் எப்படியும் அடைந்தே தீருவது என்று அரும்பாடுபட்டார். நேர்வழிகளையும், மறைமுக யுக்திகளையும், சாணக்கிய முறைகளையும் தீவிரமாகக் கையாள முன்வந்தார்.

நாட்டினரிடையே மாதவனுக்கு இருந்த செல்வாக்கைத் தனது கட்சிக்கும், தனக்கும் பயன்படுத்திக்கொள்ள ஆசைப்பட்டார் அவர். இதை அறிந்த பரப்பிரம்மம் 'கலாசாரக் கழக'த்தையும் தேர்தலில் 'குதிக்கச் செய்தார்!' மாதவனையும் தேர்தலுக்கு நிற்கும்படி தூண்டினார். இதில் குறிப்பிடத் தகுந்த விசேஷம், மாதவன் 'வெகுஜனக் கட்சி'த் தலைவர் செல்வரங்கத்தையே எதிர்த்துப் போட்டியிட முன்வந்தான்.

செல்வரங்கம் எரிமலையானார். 'இந்தக் கூத்தாடிப் பயலுக்கு இவ்வளவு திமிர் வந்துவிட்டதா? பார்க்கிறேன் இவனை!' என உறுமினார். இறுதி முயற்சி ஒன்று செய்யலாமே என்று அவர் உள்ளம் ஆசை காட்டியது. ஆகவே அவர் மாதவனைச் சந்தித்துப் பேச வந்தார்.

மாதவன் அவரை அன்புடன் உபசரித்தான். மதிப்பளித்துக் கௌரவித்தான். அவனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு, தேர்தலிலிருந்து அவன் வாபஸ் பெற வேண்டும், போட்டியிட்டாலும் அவன் வெற்றிபெறப் போவதில்லை என்று செல்வரங்கம் சொன்னார். காரணங்கள் காட்டி விளக்கமாகப் பேசினார்.

அவர் பேச்சு முழுவதையும் பொறுமையுடன் கேட்டிருந்த மாதவன், 'வருத்தம். தங்கள் அரிய யோசனைகளை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை' என்று உறுதியாகத் தெரிவித்தான் செல்வரங்கத்தின் முகம் கறுத்தது. அனல் மூச்சு அவர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொங்கி எழுந்தது.

'நீ ஜெயிக்கமாட்டாய், இந்தத் தேர்தலில் உனக்குத் தோல்வி நிச்சயம்' என்று பெரிய தீர்க்கதரிசிபோல் கூறினார் அவர்.

மாதவன் அலட்சியமாகச் சிரித்தான். 'அது வெகு ஜனங்கள் அளிக்க வேண்டிய முடிவு. வெகுஜனக் கட்சித் தலைவர் தரவேண்டிய தீர்ப்பு அல்ல' என்றான்.

தலைவரின் கண்கள் சிவப்பேறிக் காட்டின. 'இதுமாதிரிப் பேச்செல்லாம் நாடகத்திலும் சினிமாவிலும் எடுபடும். ஆனால் அரசியலில் செல்லாது தம்பி. உனக்கு கிளாமரும்; ஜனங்களின் கைத்தட்டலும், விசிலடிப்பும் ஏராளமாகக் கிடைக்கலாம், ஆனால் அரசியலில் தேர்தலில் வெற்றிபெற விசேஷ அந்தஸ்தும், தகுதி திறமைகளும் வேண்டும்' என்றார்.

மீண்டும் மாதவன் சிரிக்கவே செய்தான்: 'உங்களுக்காக நான் பிரசாரம் செய்தால் நீங்கள் வெற்றி பெற முடியும் என்று நம்புகிற நீங்களே இப்படிச்சொல்கிறீர்களே! எனக்காக

நானே பிரசாரம் செய்து, நானே போட்டியிட்டால் ஏன் வெற்றிபெற முடியாது அண்ணுச்சி?' என்று ஏகத்தாளமாகக் கேட்டான்.

'ஓகோ!' என்று தலையை ஆட்டிக்கொண்டார் தலைவர். 'சரி, நான் ஒன்று கேட்கிறேன். நீயும் உன்னைச் சேர்ந்தவர்கள் சிலரும் வெற்றி பெற்றுவிட்டால்கூட, மந்திரியாக வந்துவிட முடியுமா?' என்ருர்.

'வரலாம், வந்தால்தான் என்ன குடிமுழுகி விடுமாம்?' என்ற மாதவன் அட்டகாசமாகச் சிரித்தான்.

'இந்த நாட்டு அரசியலுக்கு, ஐயோ!' என்று முனங்கி விட்டு, வேறொன்றும் பேசாமல், மாதவனைத் திரும்பிப் பாராமல் வெளியேறிஞர் தலைவர் செல்வரங்கம்.

அதிலிருந்து மாதவனின் வைராக்கியமும் பிரசார வேகமும் அதிகரித்தன. எல்லாக் கட்சிகளும் மும்முரமாக உழைத்தன. தேர்தலும் வந்து போயிற்று.

'வெகுஜனக் கட்சி'த் தலைவரின் 'தீர்க்கதரிசனம்' பலிக்கவில்லை! மாதவன் பிரமாதமான வெற்றி பெற்ருன்.

'கலாசாரக் கழகம்' பெரும் வெற்றி பெருவிட்டாலும்' மாதவனின் வெற்றி தனது கட்சியின் மகத்தான வெற்றி என்றே கருதினர் பரப்பிரம்மம் பி. ஏ

செல்வரங்கமும் அவர் கையாட்களும் குமைந்தார்கள், புகைந்தார்கள், கொதிப்புற்றுப் பொழுதுபோக்கினர்கள்.

மாதவனின் வெற்றியை மிகப் பிரமாதமான முறையிலே கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றன. ஏகப்பட்ட பேர் மிகுந்த உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உழைத்தார்கள்.

அன்றுதான் விழா நாள்.

மாலை நேரம்.

குறிப்பிட்ட வேளைக்குப் பல மணிக்கு முன்பிருந்தே கும்பல் திரளத் தொடங்கியது. எங்கும் பரபரப்பு. நேரம்

ஆக ஆக, வீதிகள் எல்லாம் ஜனங்களின் நதிகளாக மாறி, ஒரே திக்கை நோக்கிச் சென்றன.

அங்கு அலங்காரப் பந்தல் வர்ணக் கொடிகளோடு, தோரணங்களோடு, ஒளிமிகுந்த விளக்குகளோடு ஜொலித்தது. அதைச் சுற்றிலும் ஜனசமுத்திரம் சிறிது சிறிதாக அகண்டமாகி வந்தது.

பெரிய ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. வீதிகளின் இருமருங்கிலும் கனத்த கூட்டம். ஊர்வலத்தோடும் அளவிட முடியாத கூட்டம்.

மாதவன் தனக்குப் பிடித்த உடை தரித்து, தனது அருமைக் குதிரைமீது கம்பீரமாக அமர்ந்து பவனி வந்தான். அவன் முகத்தில் புன்னகை நீங்காது மிளிர்ந்தது.

அந்த விதமான கூட்டத்தையும், ஊர்வலத்தையும் பட்டணம் தனது சரித்திரத்திலேயே ஒரு சில தடவைகள் தான் கண்டிருக்க முடியும்.

'சிந்தனைச் சூரியன்' பரப்பிரம்மம் பி.ஏ.யும் ஒரு குதிரைமீது உலா வந்தார். ஊர்வலம் அலங்காரப் பந்தலை நெருங்கிக் கொண்டிருந்தது. 'ஜே ஜே' கோஷம் மேலோங்கி ஒலித்தது.

மாதவன் குதிரையை விட்டிறங்கி, மேடை மீதேற வேண்டும். அதற்கு முன் அவன் குதிரையிலிருந்தபடியே ஜன சமுத்திரத்தின்மீது பார்வை எறிந்தான். அவன் உள்ளத்திலே ஆனந்தமும் பெருமையும் நிறைந்தன.

திடீரென்று ஒரு வெடிச்சத்தம். தொடர்ந்து மற்றொரு வேட்டு.

மாதவன் நெஞ்சருகே கை பதித்தான். அங்கிருந்து ரத்தம் பெருகிப் பாய்ந்தது. அவன் குதிரை மீது சாய்ந்து விட்டான்.

'கொலை! யாரோ சுட்டு விட்டார்கள்! மாதவனைக் கொன்றுவிட்டார்கள்!'

இந்த உண்மை மெதுவாகப் பரவியது. வேகமாகப் பறந்தது. எங்கும், எல்லார் செவிகளிலும் பட்டது. அனைவர் வாயிலும் அடிபட்டது.

மாதவனின் குதிரை மிரண்டது. திரும்பியது, கும்பலை ஒதுக்கிக்கொண்டு வெளியேறத் துடித்தது...

மக்கள் முகத்திலே பயம். அவர்கள் உள்ளத்திலே பீதி. எங்கும் பரபரப்பும் குழப்பமும் ஏற்பட்டது.

அதே நேரத்தில், எங்கோ இருந்த ஒரே ஒருவர் முகத்தில் சிரிப்பு வெடித்தது. தனது பாக்கெட் கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்த அவர் 'முகூர்த்தம் முடிந்துவிட்டது. இதற்குள் பயல் பாடம்படித்திருப்பான்!' என்று முனங்கினார். தனிமையையும் மறந்து பெரும் சிரிப்பு சிரித்தார். அவர்தான் தலைவர் செல்வரங்கம்.

'தீபம்', ஆண்டு மலர் 1969.



கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு வளம் கூட்டும் வகையில் தம் எழுத்துச் செல்வங்களை வழங்கி வருகின்றவர் திரு. வல்லிக்கண்ணன். ஓர் எழுத்தாளராக மட்டுமல்லாமல் இதழாசிரியராகவும், கவிஞராகவும், திறனாய்வாளராகவும் திகழ்கின்ற இவ் இலக்கியச் செல்வர் எழுத்துப் பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்டு சமுதாய நல்நாட்டம் கொண்டவராய் எழுதி வருபவர்.

திரு. வல்லிக்கண்ணன் அவர்களின் எழுத்துப்பணி, எழுத்துசார்ந்த வாழ்க்கை ஆகியவை இந்நூற்றாண்டிலும் வரும் நூற்றாண்டுகளிலும் தமிழ் மக்களுக்குப் பயன்தர வல்லவை என்பதை நன்குணர்ந்த நிலையில் இந்நூலை அவரின் 71—வது ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியிடுகின்றோம்.

CLS

MANNIKKA THERIYATHAVAR

By VALLIKANNAN

விலை ரூ. 30.00 (இந்தியாவில் மட்டும்)